


பரபரப்பான

விற்பனையில்




மனதை மயக்கும்
மங்கையர்க்கான
மகளிர் நாவல்

வாங்கிப் படியுங்கள்...

AKSHAYA SPECIAL - Supplimentary for New Cine Today Special Tamil Novel Rs. 20/- 2009 R.Dis. No.1980/2005

# அக்ஷயா ஸ்பெஷல்-2

ரூ.20/-

மாத நாவல்



அதிக பக்கங்கள்
கொண்ட
மகளிர்க்கான
புத்தம் புது நாவல்

# ரோஜா மலரே ராஜகுமாரி!

## அகிலா கோவிந்த்

# ரோஜா மலரே ராஜகுமாரி...!



# அகிலா கோவிந்த்





## 1



அன்றைய பொழுது இவ்வளவு அபாயகரமாய் விடியும் என வாணி கொஞ்சமும் நினைத்துப் பார்க்க வில்லை!

ஆனால் அப்படித்தான் விடிந்தது. காலை எழுந்தது முதல் ஒரே குழப்பம்தானே! தீவிரமான யோசனைதான்!

ஒரு மாதமாயிற்று. தந்தைக்கு இன்னும் உருப்படியாய் ஒரு வேலை கிடைத்தபாடில்லை!

அவள் பார்த்து வந்த மில்லின் தினக்கூலி வேலைகூட ஆள் குறைப்பு செய்கிறோம்... என்ற நிர்வாகத்தின் முடிவில் பறிபோயிற்று.

இரண்டு தட்டு அறைகள் கூடிய அந்த ஓட்டு வீட்டில் அவளும் தந்தையும் மட்டுமே!

சிறுவயதிலேயே தாயாரை பறி கொடுத்துவிட்டதால் அறியாச் சிறுமியாய் தந்தையின் அரவனைப்பிலேயே வளர்ந்தவள் அவள்.

சொற்ப வருமானம். அதற்கேற்ப செலவு என வண்டியை ஓட்டியவர்களுக்கு இன்று அதற்கும் சோதனை! பேங்கில் போட்டு சேமித்து வைக்கும் அளவுக்கு அவர்களிடம் பணமும் சேரவில்லை. அவர்களால் சேர்க்கவும் முடியவில்லை தினக்கூலியாய் வரும் வருமானம் முழுதும் அன்றாட பாடுவிற்கு சரியாகி விட அப்படியே ஓட்டி வந்தவர்கள் திடீரென வருமானச் சக்கரம் சிக்கயதும் திகைத்தார்கள்.

சரி வேறு வேலை கிடைத்து விடுமு; என்று பார்த்தால் தந்தைக்கு யாரும் வேலை தருவதாய்இல்லை!

அறுபதி வயது முதுமையை நெருங்கிக் கொண்டிருக்கும் அவரை யாரும் ஏறெடுத்தும் பார்க்கவில்லை.

வீட்டிலோ... நிலைமை அதற்கு மேல்!

கையில் தம்படி காசிலலை. அரிசி, பருப்பு வாங்க பணமில்லை!, ஏழ்மை! அப்படியொரு ஏழ்மை! காலையிலே எழுந்து, "இன்று எப்படியும் ஒரு வழி கிடைத்துவிடும்...." என துண்டை உதறியவாறு கிளம்பிச் சென்றிருந்தார் தந்தை.

கன்னத்தில் கை வத்தவாறு கவலைபட உட்கார்ந்து விட்டாள் வாணி.

மதியம் இரண்டு மணி இருக்கும்.

மெல்ல சோர்வான நடையுடன் திரும்பி இருந்தார் தந்தை.

ஆவலாய் நிமிர்ந்து பார்த்தவளிடம் "ஒரு வழி இருக்கிறது கண்மணி..." என தந்தை சொன்னதும் வாணிக்கு முதலில் ஒன்றும் புரியவில்லை. மை விழிகளை திறந்து அகலமாய் விரித்து தான் பார்த்தாள்.

தந்தை ஒரு மாதிரியாக பார்த்து விரக்தியாய்ச் சொல்வது போல் இருக்கக் கண்டுதான் புரியாமல் குழம்பினாள்.

ஆனால் தந்தை சட்டென அதுவரை தன் கையில் மறைத்து வைத்திருந்த சிறு பாட்டிலைக் காட்டியதும் அவளுக்கு சகலமும் புரிந்து போயிற்று.

மூட்டைப் பூச்சி மருந்து பாட்டில்!

கடவுளே! கடைசியில் தந்தை தேர்ந்தெடுத்தது இந்த வழியைத் தானா? பேப்பரில் தற்கொலைச் செய்திகளைப் பார்த்துவிட்டு, அச்சச்சோ என உச் சொட்டியவளே இப்போது பேப்பர் செய்தியாய் ஆகப் போகிறாளா?

அப்படியானால் அவர்கள் வாழ உலகில் வழியே இல்லையா?

'வேறு வழி இல்லைதான் அம்மா...!' என கையைவிரித்தார் சதாசிவம். 'நானும் எத்தனையோ பேரிடம் போய் கேட்டுப் பார்த்து விட்டேன். குறைந்த சம்பளம் கிடைத்தால் கூட பரவாயில்லை... என கெஞ்சிப் பார்த்துவிட்டேன். யாரும் நமக்காக இரக்கப்படக் காணோம். எல்லோரும் கை விரித்து விட்டார்கள்...'



'அதற்காக தற்கொலை செய்யள வேண்டுமா?'

சதாசிவம் அதற்கும் வேதனையோடு தலையை ஆட்டினார்.

'எனக்கு இப்படிச் செய்வது பிடிக்கவில்லைதான். ஆனால் பாரம்மா.... இந்த உலகில் என்னை விடு.... எனக்கு திடீரென்று ஏதாவது ஆகிவிட்டால்.... கொஞ்சம் உன் நிலையை யோசித்துப் பார்... அறியாச் சிறுமி போல் இருக்கும் நீ இந்த இரக்கமில்லாத உலகத்தில் தன்னந்தனியாய் என்ன செய்வாய்? என்னதான் செய்யக்கூடும்? அதனாலே... பார்த்தேன். பஸ்ஸில் ஏறுவது போல் நாம் இருவரும் சேர்ந்தே மேலே சென்று விட்டால்... பிரச்சினையிராது அல்லவா... அதான் இப்படி ஒரு முடிவெடுத்தேன்.!'

சதாசிவம் சொல்லி முடிக்க வாணிக்கு எங்கிருந்து தான் இவ்வளவு தைரியம் வந்ததோ, எழுந்தவள் சட்டென அவர் கையிலிருந்த மூட்டைப் பூச்சி பாட்டிலை பிடுங்கினாள். ஜன்னல் வழியே வேகமாய் தூர எறிந்தாள்.

'என்னம்மா... செய்கிறாய்...?' என திகைத்து அதிர்ந்தவரிடம், 'அப்பா, இது வடிகட்டிய கோழைத்தனம்! இதற்காகவா,இப்படிச் சாவதற்காகவா பிறந்து வளர்ந்து இவ்வளவு நாள் உடம்பை வளர்த்தோம்? என் பள்ளிக்கூட டீச்சர் ஒருவர் சொன்னதுதான் எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது. உடல் ஊனமுற்றோர், கண் பார்வை தெரியாதவர்கள் எல்லாம் கூட தைரியமாய் எதிர் நீச்சல் போட்டு வாழ்க்கையை வாழ நினைக்கும்போது.... நல்ல திடகாத்திர உடம்புடன்இருக்கும் நாம்வெறும் ஏழ்மைக்காக அஞ்சி வாழ்க்கையை முடித்துக் கொள்ள நினைப்பது... முட்டாள் தனம் அல்லவா?'

வாணி குரல் உயரச் சொன்னது சதாசிவத்தை ஒரு கணம் தடுமாறச் செய்தது. எதிர்கால வாழ்வைக் கண்டு அஞ்சாமல் துணிச்சலாய் அவள்இருக்கிறாளே.... நாம்தான் கோழைத்தனமாய் யோசித்து விட்டோமோ...? என அவரை சிந்திக்க வைத்தது.

ஓரிரு நிமிடம் கண்களை அப்படியே மூடிக் கொண்டார்.

வாணிக்கோ தானா இப்படியெல்லாம் பேசுகிறோம் என்ற ஆச்சரியமும் ஏற்பட்டது. சாவைக் கண்டு அவள் பயந்ததில்லை. ஆனால் சிறுவயது முதலே... தற்கொலை செய்வது மிகவும் கோழைத்தனமான செயல். என அவள் மனதில் ஆழமாய் பதிந்து போய் இருந்தது. அதனாலே தந்தை

அப்படியொரு முடிவைச் சொன்னதும் வீறு கொண்ட வேங்கை போல எழுந்து விட்டாள்.

ஆனால் உண்மையில் வேறொரு விஷயத்தை நினைத்து உள்ளுக்குள் அவளுக்க கலக்கமாயும் இருந்தது. தந்தை பலவிதமான திறமைகளை, அனுபவங்களை கொண்டவர். அவரே, இனி வேறு வழியில்லை. நாம் வாழ முடியாது.... என்ற முடிவுக்கு வந்து விட்டதை உணரும்போது பயம் கிலியாய் அவள் உடம்பில் பரவியது.

உண்மையிலே... வாழ வேறு வழி இல்லையா? வாழ்க்கையின் எல்லாக் கதவுகளும் அவர்க்ள இருவருக்கும் மூடிக் கொண்டதா?

ஒரு கணம் நினைத்துப் பார்த்த அவளுக்கு வேதனை கூரான கத்தியாய் மனதைக் கிழித்தது.

பணம். வாழ்க்கையில் எவ்வளவு முக்கியமான விஷயம்... அதைச் சம்பாதிக்க.... முடியாதா? இல்லை அவர்களுக்கு வழிகள்தான் தெரியவில்லையா?

தந்தை தினக்கூலியாய் வேலை செய்த மில்களில் ஆள்குறைப்பு செய்கிறோம் என வேலையை விட்டு நிறுத்தி விட்டார்கள்.

அதனால் திடீரென வருமானம் நின்று தந்தையும் அவளும் மட்டுமான அவளது சிறு குடும்பம் ஸ்தம்பித்து விட்டது.

தந்தையாவது.... சரி... வயோதிகப் பருவம். அவரால் முடிந்த அளவு முயற்சி பண்ணுகிறார்.

ஆனால் அவள்.?

இருபது வயது குமரியாய் அழகுச்சிலையாய் வளர்ந்திருக்கிறாளே... தவிர... படிக்கவில்லையே?

ஒழுங்காய் படித்திருக்கலாமே? தந்தையிடம் பிடிவாதம் பிடித்து மேலே படித்திருந்தால் இன்று உருப்படியாய் ஒரு வேலையைத் தேடியிருக்கலாம். தந்தையை உட்கார வைத்து காப்பாற்றலாம்.



ஒரு கணம் தான் படிக்காமல் படிப்பை அப்படி பாதியிலே நிறுத்தியதை நினைத்து வருந்தவும் செய்தாள்.

ஓரளவு படித்திருந்தாலாவது ஏதாவது உருப்படியான வேலைக்குப் போய் சம்பாதித்திருக்கலாம். அவரை உட்கார வைத்து சாப்பாடு போட்டு காப்பாற்றி இருக்கலாம்.

ஆனால் இப்போது...?

வயோதிகத்தில் முதுமையின் பிடிகளில் தந்தை.

அந்தச் சூழலினுள் அவருக்கு உழைக்க வேண்டிய கட்டாயம்!

யோசித்த வாணி பயந்தபடியே நிமிர்ந்து தந்தையைப் பார்த்தாள். அவர் சோர்ந்து போய் அப்படியே கைகளில் முகத்தை தொங்கப் போட்டபடி பரிதாபமாய்த் தெரிந்தார்.

அவரது ஒளியிழந்த கண்களைக் கண்ட அவள் காலையில் இருந்து அவர் எதுவும் சாப்பிடவில்லை என்பதைப் புரிந்து கொண்டாள்.

முதலில் ஏதாவது வாங்கிக் கொண்டு வருவோம் என எழுந்தவள் தனது சின்னப் புளி டப்பா ஒன்றைத் திறந்து அதில் பத்திரப்படுத்தியிருந்த இருபது ரூபாய் பணத்தை எடுத்துக் கொண்டு வெளியே நடந்தாள்.

பக்கத்து நாயர் டீக்கடையில் இரண்டு பன்னும் டீயும் வாங்கிக் கொண்டு நுழைந்தபோது அப்பா நிமிர்ந்து உட்கார்ந்திருப்பது தெரிந்தது.

'முதலில் இதைச் சாப்பிடுங்கள்....' என்று நீட்டினாள்.

சதாசிவம் ஒரு பன்னை வாங்கி மெல்ல பிட்டு பிட்டு தின்னபடி அவளையும் சாப்பிடச் சொன்னார்.

அவளுக்கும் பயங்கர பசிதான். இருந்தாலும் தந்தையின் சோர்வான நிலைமையை உணர்ந்து அவரையே வற்புறுத்தி சாப்பிட வைத்தாள்.

சதாசிவம் சாப்பிட்டு டீயையும் குடித்த பிறகுதான் அவரால் சகஜ நிலைக்கு வரமுடிந்தது.

மூட்டைப்பூச்சி பாட்டில் வாங்கி வந்த தன் முட்டாள் தனத்தை நினைத்தபடி மதுராவின் தலையை பரிவாய் வருடியவர் மறுபடியும் மருகினார்.

'என்னை... மன்னித்து விடு கண்மணி நான் கோழைத்தனமாய் யோசித்து விட்டேன். நீ வாழ வேண்டிய பெண். உகனக்கு இன்னும் வாழ்க்கை இருக்கிறது...'

வாணி அவரது கைகளைப் பிடித்து அழுத்தி அவர் சொல்வதை ஆமோதித்தாள்.

'நீ.. சாப்பிட்டாயா அம்மா?' என்றார் சதாசிவம் ஞாபகம் வந்தவராய்.

'நேற்றைய பழைய சாதம் இருந்தது. சாப்பிட்டேன். நீங்கள் வருந்தாதீர்கள்...!' துணிச்சலான பொய் சட்டென வார்த்தைகளாய் வெளிவந்தது.

பசியை அடக்க ஐந்தாறு டம்பளர் நீரை மொண்டுக்குடித்தது. கஷ்டப்பட்டு அந்தக் கிள்ளல் உணர்வை அடக்கியது அவளுக்குத்தான் தெரியும்!

சதாசிவத்டதின் நடுங்கும் கை விரல்கள் மறுபடியும் அவளது நீளக் கூந்தலை வாஞ்சையாய் வருடியது. தந்தையின் பரிவில் அப்படியே கண்களை மூடி ஒரு கணம் மெய் மறந்தவள் சட்டென முன்புற கதவுப் பக்கம் அரவம் கேட்டு நிமிர்ந்தாள்.

முன்னே... வாசல் கதவுப்பக்கம் ஒருவன் நின்று கொண்டிருந்தான்.

முப்பது வயது மதிக்கத்தக்க திடகாத்திரமான உருவத்துடன் உள்ளே அவன் நுழையவும் செய்ய.... இருவரும் பயத்தோடு திடுக்கிடத்தான் செய்தார்கள்.

'மூட்டைப் பூச்சு மருந்து வாங்கியாயிற்று. இன்னும் தற்கொலை செய்யவில்லை?'

அவனது கேள்வி அவர்களை அதிர வைத்தது.





# 2



திடும்மென ஒருவன் வாட்ட சாட்டமாய் வீட்டின் முன்புறம் நுழைந்து சொன்னதைக் கேட்டு இருவரும் அதிரத்தான் செய்தார்கள்.

அதிலும் அவன் மிகத் தெளிவாய் மூட்டைப் பூச்சி மருந்து எனக்குறிப்பிட்டது தங்களது போதா சூழ்நிலையை அவன் தெரிந்திருக்கிறான் என்பதை உணர்த்திற்று.

சதாசிவம்தான் சுதாரித்து கண்களை இடுக்கி குரலை உயர்த்தினார்.

'தம்பி நீங்க யாரு?'

அவர் பயம் பொங்க கேட்டதற்கு, 'நானா? சொல்கிறேன்...' என்றபடி உள்ளே உரிமையாய் வந்து அந்த கிடுகிடு நாற்காலியில் பதட்டமில்லாமல் அமர்ந்தான்.

இருவரையும் கண்களால் ஆழமான பார்வை பார்த்தான்.

நான்.... அந்தப் பெட்டிக்கடையில்... இப்படி பூச்சி மருந்தை நீங்கள் வாங்கும்போதே கவனித்தேன். உங்களது சோர்ந்த முகமும் தளர்ந்த நடையும் எதையோ விபரீதமாய் உணர்த்திற்று. அதனாலேயே சந்தேகத்துடன் பின் தொடர்ந்தேன். நான் நினைத்தது சரியாய் போயிற்று...

அதற்கு மேல் சதாசிவத்தாலும் வாணியாலும் எதுவும் பேசமுடியவில்லை. வாய் திறக்காதவர்களாய் தலையைத் தொங்கப் போட்டபடி அப்படியே நின்று கொண்டிருந்தார்க்ள.

அவன் முகத்தை திருப்பி சுற்றும் முற்றும் பார்த்தான். வீட்டை அளவெடுத்தான்.

பரணில்... பழைய தகர டிரங்குப் பெட்டி, சட்டங்கள் தேய்ந்து மங்கலாய் தொங்கும் இரண்டு மூன்று புகைப்படங்கள், மூலையில் அழுக்குக்

கூடை... அதில் பழைய துணிமணிகள், சுவரோரமாய் உமி அடுப்பு, அதன் பக்கமாய் கவிழ்த்து வைக்கப்பட்டிருக்கும் ஒரு சில பாத்திரங்கள். ஒரு மரக் கட்டில், அந்தக் கிடுகிடு நாற்காலி....

அவனுக்கு எல்லாம் புரிந்து விட்டது.

பணமில்லை. ஏழ்மை.... வறுமை. தற்கொலை பண்ணும் அவளவுக்கு விரக்தி.

'ஆமாம்.... என்னாயிற்று? ஆரம்பித்தாயிற்றா... இல்லை நல்ல நேரத்திற்காக காத்துக் கொண்டிருக்கிறீர்களா?'

அவன் கேலிப் பார்வையுடன் கேட்டாலும் சதாசிவம் கரகரப்புக் குரலில் பதில் சொன்னார்.

'இல்லை. நாங்கள் முடிவை மாற்றி விட்டோம். வாழ தீர்மானித்திருக்கிறோம்....!'

'அப்படியா... நிஜமாகவா....?'

அவன் நம்ப முடியாதவனாய் மதுரா மேல் பார்வையை பதிக்க வாணி ஆமோதிப்பவளாய் தலையை சிறிது ஆட்டினாள்.

அவன் விடவில்லை.

'நல்ல முடிவுதான். ஆனால் எப்படி வாழப் போகிறீர்கள்?'

அவனது கேள்விக்கு அவர்களிடம் பதில் இல்லாமல் போக அடுத்த கேள்வியை விசினான்.

'இதுவரை வாழக் கிடைக்காத... வழி... இப்போது எள்ன்ன திடும்மென கண்ணுக்குள் தோன்றி விட்டதா?'

பேந்தப் பேந்த இருவரும் விழிக்கத்தான் செய்தார்கள். அவன் இருவரையும் ஆழமான பார்வை பார்த்துவிட்டு, வழியை... நான் சொல்லட்டுமா? என்றான்.



அவர்ள்கு இப்போது எல்லாம் புரிய ஆரம்பித்தது. பெட்டிக் கடையில் மருந்து வாங்குவதைப் பார்த்து பின் தொடர்ந்தவன் மனதல் ஏதோ திட்டத்துடன்தான் வந்திருக்கிறான் என்பது உரைத்தது.

அப்படி என்ன வழியை இவன் சொல்லிவிடடிப் போகிறான்? என்பது போல் இருவரம் அவனை விழித்துப் பார்க்க நிதானமாய் பேச ஆதரம்பித்தான் அவன்.

'என் பெயர் மோகன். சொந்தமாய் கன்ஸ்ட்ரக்□ன் நிறுவனம் ஒன்று நடத்தி வருகிறேன். கார், பங்களா... என சொகுசாய் வாழ்க்கை நடத்தும் அளவுக்கு பணக்காரன் எனது வயதான தாயார் வீட்டில் நோய்வாய்ப்பட்டு இருக்கிறார்ள். அவர்களை கவனிக்க, மருந்து மாத்திரைகளை கொடுத்து உதவ ஒரு சரியான பணியாள் தேவை. மாதம் இரண்டாயிரம் ரூபாய் சம்பளம்.... நான் சொல்லும் வழி இதுதான் புரிகிறதா?'

நேரிடையாய் கேள்வியைக் கேட்டபடி பார்வையை மதுரா மீது வந்து நிறுத்தினான் அவன்.

அவன் கேட்டது வவாணியை மறுபடியும் திகைப்படையச் செய்தது. மன்பின் தெரியாமல் திடீரென வீட்டிற்குள் நுழைந்து தங்கள் சூழ்நிலையை உணர்ந்து கேட்கிறான். யாரிவன்? எப்படி இவனை நம்புவத?

அதே சிந்தனை சதாசிவத்திற்கும் ஓடியிருக்க வேண்டும்.

'தம்பி.... நீங்கள்... யார் என்றே தெரியாது... திடீரென்று வேலைை தருகிறேன் என்கிறீர்கள். எனக்கு ஒன்றும் புரியவில்லை....!' என்றார்.

அவரது கேள்விக்கு பலமாய் தலையசைத்தான் அவன்.

'அதான் சொன்னேனே... என் பெயர் மோகன். நகரின் பிரபலமாய் விளங்கும் மோகன் கன்ஸ்ட்ரக்ஸின் உரிமையாளர். இன்னும் சொல்லப் போனால்... லயன்ஸ் கிளப் உறுப்பினரும் கூட என்னை நீங்கள் தாராளமாய் நம்பலாம்....'

வாணி இன்னமும் பயப் பார்வையை விலக்காமல் இருப்பது போல அவனுக்குத் தெரியவே பைக்குள் கை விட்டு விசிட்டிங் கார்டு ஒன்றை எடுத்தபடி எழுந்து கொண்டான்.

'இதோ... இதில் எனது அலுவலகம் மட்டும் வீட்டு முகவரி இரக்கிறது. உங்களுக்கு விருப்பமிருந்தால் நேரில் வந்து என் தாயருடன் பேசிப் பாருங்கள். அப்புறம்.... என்றபடி ஒர நிமிடம் நிறுத்தியவன். நான் இங்கு வந்ததே... விபரீதமாய் நீங்கள் எடுக்க இருந்த மடிவை தடக்கத்தான். நல்லவேளை, நீங்களே மனம் மாறி விட்டீர்கள்... அதனால் இனி பயமில்லை. நீங்கள் தற்கொலை செய்ய மாட்டீர்கள். அப்படித்தானே?'

திரும்பவும் உறுதிப்படுத்துவது போல் அவன் கேட்க.... இருவரம் படபடப்பாய் தலையை அசைத்தனர்.

'அப்படியானால்.... சரி.... நான் கிளம்புகிறேன். உங்களுக்கு விருப்பமிருந்தால் இந்த முகவரியில் தொடர்பு கொள்ளுங்கள். நான் வருகிறேன்...!' பதிலுக்கு காத்திராமல் சொல்லிவிட்டு விறுவிறுவென நடக்க அரம்பித்தான் அவன்.

அவன் போவதையே வெறித்தபடி நம்ப மடியாத ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிரந்தவர்க்ள மெல்லத் திரும்பி ஒருவரையொருவர் பார்த்தனர்.

கொஞ்ச நேரம் அமைதியாய்க் கழிந்தது.

'என்னம்மா யோசிக்கிறாய்?' என்றார் அப்பா.

'யோசித்து விட்டேன்...' என்றாள் வாணி உறுதியான குரலில்.



## 3



வாணி மறுநாளே தன் தந்தையுடன் மோகனின் விடு நோக்கிக் கிளம்பி விட்டாள்.



அவன் கொடுத்த விசிட்டிங் கார்டு மூலம் அட்ரஸ்ஸைத் தேடிக் கண்டு பிடித்தாள். லயன்ஸ் டவுண் எனப்படம் பணக்காரர்கள் வசக்கும் பகுதியில்தான் அவனது பங்களா இருந்தது.

பங்களாவின் முன்புறம் விஸ்தாரமாய் புல் தரைகள் ஆக்கிரமித்திருக்க.... அழகான வடிவமைப்புடன் பிரமிக்கும்படி இருந்தது.

பெரிய கேட்டைத் திறந்து உள்ள நுழையும்போத கூர்க்கா ஒருவன் ஓடி வந்தான். வாணி விசிட்டிங் கார்டை காண்பித்து வி□யத்தைச் சொன்னதும் பவ்யம் காட்டி கூட்டிப் போனவன் மன்புற வரவேற்பறையில் உட்காரச் சொன்னான்.

இரவரும் விலையுயர்ந்த அந்த பொதுமும். நுரை இரக்கையில் தயங்கியபடியே அமர்ந்தார்கள்.

சதாசிவம் சுற்றும் மற்றும் நோட்டமிட்டவர், இது பெரிய இடம்தான். பெரிய பணக்காரராய் தெரிகிறது. ஆனாலும் அவருக்கு நல்ல குணம்தான். என்னைபப் பார்த்து... என் பின்னாலேயே அல்லவா உதவி பண்ண வந்திருக்கிறார். நல்ல மனசு அம்மா அவருக்கு.... என்றார்.

தந்தை சொல்வது நியாயமாகவும் தோன்றியது. இவ்வளவு பணம் வைத்திருப்பவன் தந்தை பெட்டிக்கடையில் மூட்டைப் பூச்சி மருந்து வாங்குவதை கவனித்து கவலைப்பட்டிருக்கிறானே! விபரீதமாய் எதுவும் முடிவு எடுத்துவிடக்வடாது என பின் தொடர்ந்தும் வந்து பார்த்திருக்கிறானே! இப்படியொரு இரக்க குணம் இந்தக் கலியுகத்தில் யாருக்கு வரும்? என்று நினைத்தாள் அவள்.

அவர்கள் இப்படி யோசித்துக் கொண்டிருக்கும்போதே மாடிப்படி வழியாக இறங்கி வந்து கொண்டிருந்தான் மோகன்.

அதே... உற்சாகம்.. அதே வசீகரச் சிரிப்பு. விறுவிறுவென அவர்களைக் கண்டதும் நடையில் வேகம் காட்டியவன், வந்து விட்டீர்களா? உங்களை நான் எதிர்பார்த்தேன்.... என்றபடி புன்னகை ததும்ப எதிரில் வந்து நின்றான்.

சதாசிவமும் வாணியும் பவ்யமாய் கைகூப்பி வணங்கினார்கள்.

பதிலுக்கு நமஸ்கரித்து உட்கார்ந்தவன் அவர்களையும் உட்காரச் சொன்னான்.

அதற்குள் பணியாள் சூடான தேநீர் கொண்டு வர மதுரா மறுத்தும் பிடிவாதமாய் குடிக்கச் செய்தான்.

அதன்பின் மோகன் தன் தொழில் பற்றி, தொழிலில் தான் செய்து வரும் புதுமைகள் விரிவாக்கம் பற்றியெல்லாம் ஒரு அரை மணி நேரம் லெக்சர் அடித்தான் என்று தான் சொல்ல வேண்டும்.

ஆனால் வெளியுலகம் தெரியாமல் குண்டு சட்டியில் குதிரை ஓட்டியது போல இருக்கும் வாணிக்கும் சதா சிவத்துக்கும் அவனது தொழில் பற்றிய பேச்சு புரியாத தாய், விளங்காத பிரமிப்பாகவே இருந்தது.

இருந்தும் அவன் சொல்வதற்கெல்லாம் அக்கறை காட்டி தலையாட்டிக் கொண்டிருந்தனர். ஒரு வழியாய் தன் தொழில் புராணத்தை முடித்த மோகன் அவர்களை வாருங்கள் என் தாயாரை அறிமுகப்படுத்துகிறேன்.... என கீழ்ப் போர்ஷனில் இருந்த உள்ளறை ஒன்றிற்கு அழைத்துச் சென்றான்.

அங்கு கட்டிலில் இடுங்கிய கண்களுடன் அறுபது வயது மதிக்கத்தக்க பெண்மணி படுத்திருந்தாள். அதுதான் மோகனின் தாயார் போலும் அவர்கள் வருவதைப் பார்த்ததும் மெல்ல கண் விழித்தாள்.

மோகன் தாயாருக்கு அவர்களை அறிமுகப்படுத்தினான். என் தாயார் ராஜாமணி அம்மாள். சர்க்கரை நோயாலும் அதிக ரத்தக் கொதிப்பு தொல்லையாலும் பெரிதும் பாதிக்கப்பட்டு படுத்த படுக்கையாகி விட்டார்கள். இவர்களை காலை ஒன்பது மணியிலிருந்து மாலை ஆறு மணி வரை உடன் இருந்து பார்க்க வேண்டும். வேளா வேளைக்கு உரிய மாத்திரை மருந்துகளை கொடுத்து நன்கு கவனித்துக் கொள்ள வேண்டும். மாதம் இரண்டாயிரம் ரூபாய் சம்பளமாய் கொடுத்து விடுகிறேன். உங்களுக்குச் சம்மதம்தானே?

மோகன் தெளிவாய் வேலை பற்றி விளக்கிச் சொல்லிகேட்டான். அந்தச் சூழ்நிலை, வயதான தாயாருக்கு உடன் இருந்து உதவுவது எல்லாமே பிடித்திருந்தது. இருந்தாலும் நிமிர்ந்து தந்தையின் முகக் குறிப்பைப்



பார்த்தாள்.

சதாசிவத்திற்கும் பூரண திருப்திதான். ஒரு வயதான பெண்மணிக்கு சேவை செய்தது போலவும் ஆயிற்று. இரண்டாயிரம் ரூபாய் சம்பளத்தால் அபாயகரமான நிலையில் இருக்கும் அவர்களது வாழ்க்கை நிம்மதியான கரையொன்றை சேர்ந்தது போலவும் ஆயிற்று.

இருவரும் சம்மதிக்கவே அன்றைய தினமே வாணி வேலையில் சேர்ந்து கொண்டாள். சதாசிவமும் மாலை ஆறு மணி வாக்கில் வந்து கூட்டிச் செல்வதாய்க் கூறி விடைபெற்றுச் சென்றார்.

வாணி உடனடியாய் பணிவிடைகளிலும் இறங்கினாள். ராஜாமணி அம்மாளை பல் துலக்கி குளிக்க உதவி செய்தாள். கைத்தாங்கலாய் பிடித்துக் கொண்டு அவர்கள் விரும்பும் எல்லா வேலைகளையும் செய்ய வைத்தாள். மருந்து, மாத்திரைகளின் குறிப்புகளை படித்து உரிய நேரத்தில் எடுத்துக் கொடுத்து உட்கொள்ளச் செய்தாள்.

அன்றய தினம் ராஜமணி அம்மாளிடம் பேசுவதிலும் வீட்டைச் சுற்றிப் பார்ப்பதிலும் கழிந்து விட்டது.

மாலை சரியாய் ஆறு மணிக்கு சதாசிவம் அழைத்துப் போக வந்து விட வேலை முடிந்து கிளம்பினாள். வேலை சுலபம்தானே...? ஒன்றும் பிரச்சினை இல்லையே அம்மா..? என சதாசிவம் அக்கறையாய் கேட்டார்.

ஒன்றும் பிரச்சினையில்லை பிடித்திருக்கிறது.. என்றாள் வாணி

அவள் நினைத்தது வோலவே அடுத்து வந்த இரண்டு மூன்று நாட்களும் எவ்வித சங்கடமும் இல்லாமல் வேலை இலகுவாகவே இருந்தது. அவள் குடும்ப நிலையை உணர்ந்தது போல் மோகனும் முதல் மாத சம்பளப் பணம் இரண்டாயிரம் ரூபாயை வேலைக்கு வந்த இரண்டாம் நாளே அவள் கையில் கொடுத்து விட்டான்.

அதைக் கொண்டு போய் அப்படியே அவள் தந்தையின் கையில் கொடுத்தபோது சதாசிவத்திற்கு கண் எல்லாம் கலங்கி விட்டது. நாத்தழுதழுத்தவராய், நான் சம்பாதத்து உன்னைக் காப்பாற் வேண்டிய வேளையில் நீ சம்பாதித்து என்னைக் காப்பாற்றுகிறாயே அம்மா... என

தேம்பினார்.

அவரை சமாதானப்படுத்தினாள் வாணி இரண்டாயிரம் ரூபாய் பேருதவியாய், குடும்ப பொருளாதார நிலைமையை சரிபடுத்தும் பெரும் தொகையாய் அவர்களுக்கு விளங்கியது.

தினம் வாணியை காலையில் வேலைக்கு அழைத்துச்சென்று விடுவதும் மாலை ஆறு மணிக்கு டாண் என்று சென்று கூட்டி வருவதும் சதாசிவத்தின் வேலையாயிற்று.

வாணிக்கு கூட இது சங்கடமாய்த் தெரிந்தது.

என்னப்பா.... இது.... சிறு பிள்ளை போல்.... நீங்கள் என்னை கூட்டிக் கொண்டு...? நானே வேலைக்குப் போய் திரும்ப வந்து விடுவேன்... என சிணுங்கத்தான் செய்தாள்.

இல்லை... கண்மணி. உனக்கு வெளி உலகம் தெரியாது. உன்னை அப்படி வளர்த்து விட்டேன். மேலும் உனது அபாரமான அழகு. உனக்கு ஆபத்தும் கூட பெரிய மனிதனாய் நான் கூட வந்தால் உனக்கு எப்பவும் எவ்வித தொல்லைகளும் வராது... எனக் கூறி வாயையும் அடைத்து விடுவார்.

தந்தை சொல்வது வாணிக்கு புரிந்தது. ஆனாலும் தனக்காக குடையை இடுக்கிக் கொண்டு, நொடிக்கொரு தரம் மூக்குக் கண்ணாடியை சரிபண்ணிக்கொண்டு அந்த தளர்ந்த வயதிலும் விரைவான நடை போடும் அவரைப் பார்க்க பாவமாகத்தான் இருக்கும்.

தனக்காக தந்தை இப்படியெல்லாம் சிரமப்பட வேண்டியிருக்கிறதே... என வருந்துவாள். ஆனாலும் பெட்டிக் கடை ஓரமாய் அவள் தந்தையுடன் நடக்கும்போதே சில தெருவோர விடலைகள், இதப் பாருடா. ஓட்டைக்குடையும்... பட்டுக் குஞ்சமும் என அவள் காதுபடவே கிண்டல் செய்து வெடிச் சிரிப்பு சிரிப்பதை கவனித்திருக்கிறாள்.

தான் கூந்தலை இன்னமும் குஞ்சம் வைத்துப் பின்னுவதை அவர்கள் கேலி செய்தாலும் அது என்னவோ பழகிய ஒன்றை பழக்கமாகி விட்ட ஒன்றை அவளால் சில சமயங்களில் மாற்றிக் கொள்ள முடியவதில்லை.



உடை விஷயத்திலும் அவளது சுபாவம் அப்படித்தான். இருப்பது இரண்டு மூன்று கோட்டா சேலைகளே ஆனாலும்.... அவையும் பெரும்பாலும் இரண்டு கலர்களில் தான். அவளுக்குப் பிடித்தமான பச்சை மற்றும் ஊதா நிறங்கள்தான். அதையே தான் மாற்றி மாற்றி கட்டுவாள்.

தந்தையும் அவளது பிடித்தம் தெரிந்தே அதே கலர்ச் சேலையை எடுத்து அவளது பிறந்த நாளுக்கு பரிசளிப்பார்.

ஆயிற்று அன்றும் வாணி வழக்கம் போல் பச்சை நிற கோட்டா சேலையை உடுத்திக் கொண்டு வேலைக்கும் வந்தாயிற்று. ராஜாமணி அம்மாளுக்குத் தேவையான பணிவிடைகளை மளமளவென்ச் செய்ய ஆரம்பித்தாள்.

அவளுக்கு ஒரு விஷயம் ரொம்பவும் உறுத்திற்று. மோகன் அவளிடம் அதீத மரியாதை கொடுத்து பழகும் விதமும்.... தனக்காக ரொம்பவும் பரிவு காட்டுவதையும் கண்டு வியக்கத்தான் செய்தாள்.

பெரிய பணக்காரன், பெரிய தொழிலதிபர் எனப்படுபவன் அடிக்கடி அவளை மேடம், வாணி மேடம் என்றெல்லாம் கூறி அழைத்துப் பேசும்போது திகைக்கத்தான் செய்தாள்.

ஒருவேளை அவன் தன்னை கேலி செய்யும் பாணியில் சொல்கிறானோ எனக் கூர்ந்து கவனித்தால்.... அதுவும் இல்லை... நிஜமாகவே அப்படி மரியாதை கொடுத்து சொல்லிக் கொண்டிருக்கிறான்.

தினம் இடையிடையே வீட்டிற்கு வரும்போது ஏதாவது பேச்சு கொடுத்துக் கொண்டிருப்பவன் அவள் வேலை முடிந்து கிளம்பும்போது காரில் கொண்டு அவளை ட்ராப் செய்து விட துடிக்கத்தான் செய்வான்.

வாணி தான் பிடிவாதமாய் மறுத்து தனக்காக வந்து காத்திருக்கும் தந்தையைக் காட்டி அவருடனே கிளம்புவாள்.

அப்படி அவள் மறுத்துச் சொன்னதையும் அப்படியே முகம் கோணாமரல் ஏற்றுக் கொண்டு, அது... சரிதான்... சரிதான்... என தலையை பலமாய் ஆட்டுவான்.

தந்தை சதாசிவம்தான் அடிக்கடி வாணியிடம் அம்மா வேலையில் ஒன்றும் பிரச்சினை இல்லையே? அந்தத் தம்பி... எப்படி... நல்ல குணம் தானே? எனக் கேட்டு வந்தார்.

ஒன்றும் பிரச்சினையில்லை. அவர் மிக நல்லவராகவே தெரிகிறாரப்பா.. என்று மனங்குளிர சொல்லத்தான் செய்தாள்.

ஆனால் அந்த மிக நல்லவர் அடுத்த வாரம் வாணியிடம் கேட்ட கேள்வியொன்று அவளை பலத்த அதிர்ச்சிக்குள்ளாக்கியது.



## 4



வாணி வழக்கம்போல் தான் தினம் சென்று வேலை பார்த்து வர.... அன்றொரு நாள் மாலை அவள் வேலை முடிந்து கிளம்பும் சமயமாய் மோகன் பால்கனிப் பக்கம் நின்று கொண்டிருந்தவன் அவளை வருமாற சைகை செய்தான்.

வழக்கமாய் பால்கனிப் பக்கம் சிகரெட்டை புகைத்தபடியோ... ஏதாவது புத்தகத்தை புரட்டிக் கொண்டோ... வாக்கிங் போல் தனிமையில் நடந்து கொண்டிருப்பது மோகனின் வழக்கம்.

பெரும் தொழிலில் ஈடுபட்டு உழைக்கிறவன் தனது டென்ஷனை ரிலலாக்ஸ் செய்ய இப்படிச் செய்கிறான் போலும் என அவள் எண்ணிக் கொள்வாள்.

அன்று தன்னைக் கூப்பிட்டதும் எதற்குக் கூப்பிடுகிறான் என்று புரியாமல் தான் போனாள்.

மோகன் என்றுமில்லாததாய் அவளைப் பார்த்து தயங்குவதும்.... புதிராய் ஒரவித வெட்கத்தைக் காட்டுவதையும்பார்த்து அதிசயிக்கத்தான் செய்தாள்.

என்ன விஷயம் சார்...? என்றாள்.



மோகன் ஏதோ மணப் பெண்ணைப் பார்ப்பது போல நிமிர்ந்து வெட்கப்பபட்டு பார்த்தான்.

அதாவது.... மேடம்... என்று அவன் ஆரம்பித்ததும் பதறத்தான் செய்தாள் வாணி.

ஐயோ..... மேடம் என்றெல்லாம் சொல்லாதீர்கள். நான் உங்களிடம் வேலை பார்ப்பவள். என்னை வாணி என்றே அழையுங்கள்....

மோகன் பவ்யமாய் தலையாட்டினான்

சரி.... வாணி என்றே கூப்பிடுகிறேன். சரிதானே? என்றவன் நேராய் நிமிர்ந்து முகம் உயர்த்தி அவளைப் பார்த்தான்.

வாணி உங்களிடம் ஒரு விஷயம் பேச வேண்டும். பேசலாமா...?என்றான்.

ம்ம்.... என்றாள் வாணி.

திடீரென கேட்கிறேன் என்று நினைக்கக் கூடாது. ரொம்பவும் யோசித்து தான் கேட்கிறேன்.

திடிரென்றா...?

ஆம்... வாணி நீ... என் தாயாருக்கு செய்யும் பணிவிடைகளை எல்லாம் நானும் கவனித்துதான் வருகிறேன். ஏதோ வேலைக்காக செய்கிறது போல் கூலிக்காக மாரடிக்கிறது போல் இல்லாமல் உறுத்தாக செய்கிறாய். உன் சொந்தத் தாயாரை கவனிப்பது போல் கவனித்துக் கொள்கிறாய். இதெல்லாம் எனக்க ரொம்பவும் பிடித்து உன் மீது ஈடபாடு கொள்ள வைத்து விட்டது. அதனாலே.... உன்னையே.... என் துணையாக்கிக் கொண்டால், நீயே... எனது மனைவியாக வந்து விட்டால் நன்றாய் இருக்கும் அல்லவா? என்ன சொல்கிறாய்... நான் நினைப்பது. கேட்பது சரிதானே?

நா... நான்... யோசிக்க வேண்டும்... ஸார்....

அவளையறியாமல் சட்டென வார்த்தைகள் வெளிவந்து விபந்தது.

தாராளமாய் யோசி.... வாணி உன்னுடைய தந்தையுடன் இது பற்றி கலந்து பேசு.... என்றவன்,

வேண்டுமானால் நானே உன் தந்தையிடம் இதுபற்றி விளக்கமாய் கூறட்டுமா? என கேட்கவும் வாணி அவசரமாய் தடுத்தாள்.

வே... வேண்டாம்.... வேண்டாம்.... ஸார்... நானே தந்தையிடம் பேசிவிட்டு ஒரு வாரத்தில் உங்களுக்கு பதில் சொல்கிறேன்... எனவும் பெரிதாய் தலையசைத்தான். எப்போதாவதாய் அபூர்வமாய் பற்களைக் காட்டிச் சிரிக்கும் சிரிப்பை அவளை நோக்கி உதிர விட்டான்.

தனது மைவிழிகளால் அவனது முகத்தையே ஆழமாய் உற்றுப் பார்த்தவாறு அங்கிருந்து அகன்றாள் வாணி.

பொதுவாக.... பார்வையிலே... ஒருவரை ஆள் எப்படி? என கணித்து விடக்கூடிய சுபாவம் அவளுக்கு. ஆனால் இந்தமோகன் அவளுக்கு வினோதமாய் புரிபடாத புதிராகவே தெரிந்தான். ஒரு சமயம் நிறைய பவ்யம் காட்டி மரியாதை கொடுத்து பணிவானவன் போல் தெரிகிறான். அதையே உற்று கவனித்தால்... அது நிஜமான அவனது சுபாவமா இல்லை வேண்டுமென்று அப்படியொரு நடிப்பு நடிக்கிறானா என்ற சந்தேகத்தையும் கிளப்பியது.

அப்படியே.... யோசித்துப் பார்த்தாலும் இவ்வளவு பணக்காரனாய், தனக்கு முதலாளியாய் இருக்கிறவன்... அப்படி தன்னிடம் நடிப்பதற்கு என்ன அவசியம் இருக்கக்கூடும்...? என்ற கேள்வியே எழும்பியது.

பலமுறை சிந்தித்துப் பார்த்தாலும் மற்ற ஆண்கள் போல் அவனது சுபாவம் இதுதான்... இப்படித்தான் அவன் நடந்து கொள்வான் என வாணிக்கு கணிக் முடியாமலே இருந்தது.

அவன்தான் இப்படி என்றால் தாயார் ராஜாமணி அம்மாளோ... பேசவே காசு கேட்பார்கள் போலும். எப்போதும் அளவான பேச்சுத்தான். கேட்கும் கேள்விகளுக்கு மட்டுமான பதில்தால்ன. மற்ற நேரமெல்லாம் ஒரு உதடு பிரியாத அமர்த்தலான புன்னகைதான்.

வாணி விடாப்பிடாயாய் வலிய பேச்சுக் கொடுத்தாலும் அளவாய்



செதுக்கி வைத்தாற்போல் ஓரிரு வார்த்தைகளே அவளிடமிருந்து வெளிப்படும.

சில சமயம் எதுவும் பேசாது சுவரையே வெறித்துக்கொண்டு இருப்பது போல் விட்டேற்றியான பார்வையை ராஜாமணி அம்மாள் பார்த்துக் கொண்டிருப்பாள்.

வாணியும் சரிதான் இவர்களது குடும்பமே அதிகம் பேசாத சுபாவம்தான் என அடிக்கடி நினைத்து முடிவிற்கும் வந்திருக்கிறாள். இப்போதுஅதே போல் இவனும் திடுதிப்பென்று ஒன்றைக் கேட்கிறான். யோசிக்க வேண்டும். யோசித்துதான் பதில் செல்ல வேண்டும்!

மனதிற்குள் திடமாய் ஒரு முடிவிற்கு வந்தாள் வாணி



## 5



வாணி, அவகாசம் கொடுங்கள். யோசித்துச் சொல்கிறேன்... என்றபடி மோகனிடம் சொல்லிவிட்டு கிளம்பி வந்து விட்டாள்.

மோகனும் கைகளை விரித்து பெரிய பரோபகாரி போல, தாராளமாக வாணி நி எப்போது விரும்புகிறாயோ. அப்போது பதில் கூறினால் போதும் எனக் கூறி விட்டான்.

வீட்டிற்கு வந்து தந்தையிடம் விஷயத்தைச் சொன்னாள். அவ்வளவுதான். அந்த கிடுகிடு நாற்காலியிலும், ஈஸி சேரிலுமாய் திக்பிரமை பிடித்தவர்க்ள போல் அப்படியே ஆடாமல் அசையாமல் சிந்தனையில் உட்கார்ந்து விட்டனர் இருவரும்.

சதாசிவம்தான் கொஞ்ச நேரத்தில் சுதாரித்து நிமிர்ந்தவராய் பார்த்தார்.

என்னம்மா...இது... நமக்க சோதனைமேல் சோதனையாய் அல்லவா வருகிறது? போனோம் வேலை பார்த்தோம்... என்று இல்லாமல் பிரச்சினை மேல் பிரச்சனையாக அல்லவா வருகிறது?

அவரது கேள்விக்கு பலத்த தலையாட்டல் செய்த வாணி கூடவே, பேசாமல்... விருப்பமில்லை. முடியாது.. என்று மறுத்துச்சொல்லி விடலாமா?என்றாள்.

சதாசிவம் அதற்கு உடனே பதில் சொல்லாமல் ஓரிரு நிமிடம் மௌனமானார்.

என்னப்பா யோசிக்கிறீர்கள். முடியாது என்று சொல்லி விடலாம்தானே....? என்றாள் வாணி திரும்பவும்.

இல்லை... அம்மா... இன்னொரு விதமாகவும் யோசித்துப் பாரு. உன் முதலாளி இந்த மோகனையும் அவனது தாயாரையும் பார்த்தால் நல்லவர்களாய் இரக்க சிந்தனையுள்ளவர்களாய் தெரிகிறது. ஒரு வேளை இனதன் மூலம் ஒரு நல்ல வாழ்க்கை உனக்கு கிடைத்து விட்டால்...?

அது எப்படி அப்பா நடக்கும்?சம்பளத்திற்கு வேலை பார்க்கும் நாம் எங்கே? பெரும் பணக்காரர்களும் முதலாளிகளுமான அவர்கள் எங்கே?

இருந்தாலும்.... ஏதோ சொல்வார்களே.. அதிர்ஷ்டம் வரும்போது கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுக்கும் என்று....

இந்தக் குருட்டு அதிர்ஷ்டத்தில் எல்லாம் எனக்கு நம்பிக்கை இல்லையப்பா...

வாணி வெகுளிப் பார்வையுடன் கைகளை விரிக்க... பதிலுக்கு தலையாட்டிவிட்டு சதாசிவமும் அதை ஆமோதித்தார்.

எனக்கு அப்படி நம்பிக்கை இல்லைதான். ஆனால்...

சொல்லுங்கள்....

நாம் இவ்வளவு நாட்கள் ஏழ்மையில் பாடுபட்டு உழன்றதற்கு கடவுள் காட்டும் பரிசாய்க் கூட இருக்கலாமே..கணமணி....



இம்முறை வாணியால் சிரிப்பை அடக்க முடியவில்லை. கலகலவென சிரிக்க ஆரம்பித்து விட்டாள்.

என்னம்மா சிரிக்கிறாய்?

கந்தல் துணிக்கு... பட்டுக் குஞ்சம் கேட்கிறதோ?எனத் தான் கடவுள் நினைப்பார்.... என்ன.... நான் சொல்வது சரி தானே? வாணி கைகாட்டியபடி பேச சதாசிவம் சீரியஸானார்.

ஆனால் மோகன் நிஜமாய்த்தானே உன்னிடம் கேட்டிருக்கிறார்?

வாணியின் முகம் சட்டென கவலைக்குப் போனது.

அதுதான் எனக்கு பயத்தைக் கொடுக்கிறது....

இதில் பயப்பட என்ன இருக்கிறது...? நாம் நன்கு யோசிப்போம். பிடித்திருந்தால் சரி என்போம். இல்லையென்றால் மறுத்து விடுவோம்....

வாணி எழுந்து கைகட்டியபடி குறுக்கும் நெடுக்கும் யோசிப்பது போல் நடந்தாள். பின் நின்று தந்தையை நோக்கி நிமிர்ந்தாள்.

நீங்கள் சொல்லுங்கள் அப்பா. உங்கள் அபிப்பிராயம் என்ன? உங்களுக்குப் பிடித்திருக்கிறதா?என்றாள்.

சதாசிவமும் யோசிப்புடன் நிமிர்ந்தார்.

என்னை விடும்மா... நீதான் நன்கு அறிந்தவள். விபரம் புரிந்தவள். நீயே முடிவெடு.... என்றார்.

வாணியால் ஒரு முடிவிற்கும் வர முடியவில்லை

அவளது நிலை மகாபாரதத்தில் வரும் தருமரின் சூதாட்ட நிலையை ஒத்திருந்தது.

பாண்டவரான தருமர் விதி வசத்தால் சூழ்ச்சியால் சூதாட்டத்தில் கலந்து கொண்டு ஒவ்வொன்றையாக தோற்றுக் கொண்டிருந்தார். வரிசையாக

ஒவ்வொரு பொருளாக வைத்து சூதாடிய அவர் கடைசியில் திரௌபதியையே பகடைப் பொருளாய் வைத்து சூதாடும் நிலைமைக்கு வந்து விட்டார். திரௌபதியை வைத்து அப்படி ஆடுவதா... வேண்டாமா?இதற்கு சம்மதிப்பதா... கூடாதா...? என ஒரு கணம் தடுமாறினார்.

அவரது தடுமாற்றத்தை உணர்ந்த கௌரவர்கள், அவர் சூதாட்டத்தில் வித்தைகள் தெரியாதவர், எல்லாவற்றையும் தோற்கப் போகிறவர் என்றெல்லாம் வசைபாடும் அளவுக்கு எள்ளி நகையாடினர்.

அவர்களது கேலிச் சீண்டல் தருமரின் வேகத்தைக் கூட்டியது. எப்படியாவது சூதாட்டத்தில் கலந்து இழந்ததை மீட்டு ஜெயித்துக் காட்ட வேண்டும் என்ற சூளுரையை வெறியாய்த் தூண்டியது.

அந்த வெறியினாலே கொஞ்சமும் யோசிக்காமல் திரௌபதியையே பகடைக் காயாய் சூதாட்டத்தில் வைத்து விளையாடத் துணிந்தார் தருமர். எதிரிகளின் சூழ்ச்சிப் பேச்சை உண்மையென நம்பி சட்டென அப்படி ஒரு முடிவை எடுத்திருப்பார். மகா புருஷர்... தருமர்..

அப்படியொரு நிலையில்தான் வாணியும் இருந்திருந்தாள் என சொல்ல வேண்டும். திரும்பத் திரும்ப யோசித்தும் எதிர்மறையான காரணங்கள் எதுவும் வராமல் இதற்கு சம்மதிப்பது சரிதான் என்றே மனதில் தோன்றியது.

அவள் நினைப்பில் எல்லாவற்றுக்கும் மேலாக தான் இதற்கு ஒத்துக் கொண்டால் தன் தந்தைக்கு பெரும் பாரம் இறங்கிய நிம்மதியும், நல்லவொரு வாழ்க்கையும் கிடைக்கும் என்றே நம்பினாள்.

வயது காரணமாக தளர்ந்து விட்ட தந்தை இனி நிம்மதியாய் வீட்டில் அமர்ந்து ஓய்வெடுக்கலாம். மோகனைக் கூட்டிக் கொண்டால் பொருளாதாரச் சூழ்நிலை மாறி நல்லதொரு வசதியான வாழ்க்கை ஏற்படும். அதில் தந்தையை மகிழ்வாய் சந்தோஷமாய் வைத்துக் காப்பாற்றலாம்.



அந்த அவரது நிம்மதியான மகிழ்ச்சியே அவளுக்க பெரிதும் உவகையைத் தரும். யோசித்து யோசித்துப் பார்த்தவள் இப்படி ஒரு முடிவு எடுப்பதினால் தந்தைக்கு நிம்மதியான ஒரு வாழ்க்கையை ஏற்படுத்திவிட முடியும் என்பதை அறிந்து உற்சாகமே ஆனாள்.

அதனாலே மறுநாளே தெளிவு கொண்டவளாய், அப்பா, நன்றாக யோசித்து விட்டேன். மோகன் கேட்டதற்கு சரியென்று சொல்லி விடவா? என்றாள் சதாசிவத்திடம்

சதாசிவமும் யோசித்து உள்ளுக்குள் அப்படியொரு முடிவு எடுத்திருந்தாரோ.... என்னவோ... அவள் சொல்லியதும், மிக... நல்ல முடிவு... சரியாக எடுத்திருக்கிறாய்... என்றார் பலமாய்த்தலையாட்டியபடி.

இருவருக்கும் சம்மதம் என ஏற்பட்டு விட்டதால் தாமதிக்காமல் அன்றே மோகனிடமும் விஷயத்தைக் கூறினர்.

மோகனுக்கு நம்ம முடியாத ஆச்சரியம்!

நிஜமாகவா...? உங்களுக்கு சம்மதம்தானா? அப்படியானால்.. சந்தேகமில்லை. நான் பெரிய அதிர்ஷ்டசாலி தான்! வாய்விட்டு கூவாத குறையாய் பெரிதாய் சொல்லிவாய் பிளந்தான் மோகன்.

அவன் அதிசயித்து ஆச்சரியப்படுவதை ரசித்துப் பார்த்த வாணி சாதாரண பணியாளாய்...அவனிடம் வேலை பார்க்கும் தன்னை மணப்பதை பெரும் பாக்யமாய் அல்லவா இவன் நினைக்கிறான்... என வியக்கவும் செய்தாள்.

ஆனால் மோகன் அப்படி பாக்யமாய் கருதியது எதனால் என்பதை உண்மையாய் அவள் மறுவாரம் அறிய வந்த போது அப்படியே அதிர்ந்துதான் போனாள் வாணி



## 6



மோகன் வாணியிடம் சம்மதம் வாங்கியதும் மளமளவென கல்யாண வேலைகளில் இறங்கி விட்டான் என்று தான் சொல்ல வேண்டும். அடுத்த நாளே ஒரு பெரிய பைண்ட் செய்த புத்தகத்தை நீட்டினான்.

வாணி திகைக்க, வாணி, இதில் பல வகையான டிசைன்கள் இருக்கின்றன. நீதான் ஒன்றை செலக்ட் செய்து தரவேண்டும்.... என்றான்.

டிசைன்களா.... எதற்கு?

மோகன் அதற்கு முகத்தை அஷ்ட கோணலாக்கி சிரித்த ரசனைக்குப் பதில் அவளைப் பயமுறுத்தவே செய்தது.

என்ன மறந்து விட்டாயா? நம் கல்யாண இன்விடேஷன் எப்படி எந்த டிசைனில் இருக்க வேண்டும் என செலக்ட் செய்ய வேண்டாம்?திருமணத்திற்கு நாள் நெருங்குகிறதே! என்றான்.

பதிலுக்கு வாணி வியப்படைந்து,அப்படியானால் ஐயரை வைத்து நல்ல நாள் பார்த்து விட்டீர்களா? எனவும் அதற்கும் அதே கோணல் சிரிப்பு சிரித்தவன், ஐயர் எதற்கு? நானே... காலண்டரைப் பார்த்து நல்ல நாளாய் தேர்ந்தெடுத்துவிட்டேன். அடுத்த வாரம்.. பத்தாம் தேதி... திங்கட்கிழமை... நல்ல நாள்... போதுமா? அன்று நம் திருமணத்தை வைத்துக் கொள்வோமா? என்றான்.

வாணி அவன் சொல்வதற்கு தலையாட்டவே செய்தாள் அவள்.

அப்படியானால்...டிசைனை செலக்ட் செய்து கொடு. அழைப்பிதழை அடிக்கக் கொக்க வேண்டும்... என்றான்.

வாணி அந்த பெரிய புக்கைப் புரட்டிப் பார்த்தவள் எவ்வித லயிப்புமில்லாமல், நீங்களே டிசைனை தேர்வு செய்து கொள்ளுங்கள்.. என புத்தகத்தை திருப்பி நீட்டினாள்.

அப்படி புக்கை திரும்பி மோகன் வாங்கும்போது வேண்டுமென்றே அவளது விரல்களை தொட்டு ஸ்பரிசித்தபடி அவன் வாங்கியது போல்



அவளுக்கு தோன்றியது.

அப்படி அவன் தொட்டதும் கட்டிக் கொள்ளப் போகிறவன் என்ற சந்தோஷம் வராமல் எரிச்சல் ஏற்படுவதையும் ஸ்பரிசம் பட்டு இனிமை வராமல் அருவையான உணர்வு ஒன்று பரவுவதையும் கண்டு திடுக்கிடவே செய்தாள் வாணி.

ஆனால்மோகனோ அதையெல்லாம் உணராமல் பெரிதாய் தலையாட்டினான்.

புரிகிறது... புரிகிறது..! அதாவது எனது விருப்பம் தான்.. உன் விருப்பமும்... அப்படித்தானே! என்றபடி குஷி கொண்டவன் போல் அவன் தோள்களைக் குலுக்கினான்.

மறுநாளே... இன்விடேஷனை டிசைன் செய்து அடித்து அவள் முன் மோகன் நீட்டியபோது அவனது வேகத்தைக் கண்டு ஆச்சரியப்படவே செய்தாள். ஆனால்.... அதைவிட முதன் முதலா; தனது கல்யாண இன்விடேஷனைப் பார்க்கும்போது ஏற்பட வேண்டிய பூரிப்பு... சந்தோஷம்...என எதுவும் தனக்குத் தோன்றாததைக் கண்டு அவள் ஆச்சரியம் கூடவே செய்தது.

எதனால்...? என ரொம்பவும் யோசித்துப் பார்த்தவள், சூழ்நிலை காரணமாகவே தான் சம்மதன் சொல்லி இந்த ஏற்பாடுகள் நடப்பதினால் இருக்கும் என நினைத்தாள். அதனாலே மோகனிடமும் நடக்கும் கல்யாண ஏற்பாடுகளிலும் தனது மனம் ஒட்ட மறுக்கிறது என முடிவிற்கும் வந்தாள்.

லயிப்பில்லாத மனதை அப்படியே விடுவது ஆபத்து என்பதை உணர்ந்து..மனதை கல்யாண விஷயங்களை நினைக்க வைத்து ஈடுபடுத்திக் கொள்ளவும் முயன்றாள்.

ஆனால் மோகனைப் பார்த்தாலோ, அவன் உருவத்தை நினைத்தாளோ... அவன்தான் தனது கணவனாய், தனக்கு மாப்பிள்ளையாய் வரப் போகிறவன் என்பதையெல்லாம் முழுமையாய் கொஞ்சமும் ஏற்றுக்

கொள்ள முடியாதது போலவே தோன்றியது.

இந்த விட்டேற்றியான மனநிலையை இப்படியே விட்டால் ஆபத்து என்பதை அவள் உணர்ந்திருந்தாலும் போகப் போக சரியாகிவிடும் என நினைத்துக் கொண்டாள்.

அதனாலே புடவை வாங்க அவன் அழைத்தபோது எவ்வித மறுப்பும் சொல்லாமல் தலையாட்டினாள். மோகன் காரில் அவளை பிரபல ஜவுளிக் கடை ஒன்றிற்கு கூட்டிப் போய் பத்து பதினைந்து சேலைகளை வாங்கிக் கொடுத்தான். இதில் கல்யாணத்திற்காக தனியாய் விலையுயர்ந்த சேலை ஒன்றையும் அவனே செலக்ட் செய்தான்.

விலைகளைப் பார்த்து மலைத்து வாணி மறுத்தும் பிடிவாதமாய் வாங்கிக் கொடுத்து கூட்டி வந்தான். அவளுக்குக் கொஞ்சமும் பரிச்சயமில்லாத உயர்ரக ரெஸ்டாரண்டுகளுக்க கூட்டிப்போய் பல வகையான உணவு வகைகளை அவளுக்க அறிமுகப்படுத்தினான்.

கட்டுப்பெட்டி போல் விட்டுக்குள்ளே முடங்கிக் கிடந்தவளுக்கு இப்போதுதான் வெளியுலகம் தெரிவது போல் வாணி ஒவ்வொன்றையும் அதிசயமாய்த்தான் பார்த்து பிரமித்தாள்.

கூடவே இப்படி மோகனுடன் வெளியிடங்களுக்கு அடிக்கடி சென்று சுற்றுவதால் தனக்கும்அவன் மீது ஒரு வித ஈடுபாடு வந்து விடும் என நம்பினாள். ஆனால் என்னவோ தினம் இரவு படுக்கப் போகையில் அவளையறியாமல் மனதில் ஒரு கிலியுணர்வு எழும்பியது.

கல்யாணத்திற்கு இன்னும் ஒரு வாரமே இருக்கிறது. இன்னும் மோகனின் சொந்த பந்தங்கள் யாரும் வந்த பாடில்லை, எல்லோரும் வெளிநாட்டில்தான் இருக்கிறார்கள். கல்யாணத்திற்கு முந்தைய தினம் தவறாது ஆஜராகி விடுவார்கள்.... என்று சொல்லி விட்டான் மோகன்.

சரி... இதுதான் இப்படி என்றால் மோகனின் தாயார் ராஜாமணி



அம்மாளும் பிள்ளைக்குக் கல்யாணம் என எவ்வித பரபரப்பும் காட்டவில்லை. அவள் முகத்தில் எந்தவொரு குதூகலமோ சந்தோஷமோ தென்படாதது மதுராவை ஆச்சரியப்படுத்தியது.

ஒருவேளை மோகன் தன்னை விரும்பியதில் இவர்களுக்கு இஷ்டமில்லையோ? என நினைத்த வாணி அதையும் வாய் விட்டே கேட்டு விட்டாள்.

அட.... அப்படி எல்லாம் இல்லை.... கண்ணு. நானே... உன்னைப் பார்த்ததும் மருமகளாக்கி கொள்ளத்தான் நினைத்தேன். என்ன மோகன் முந்திக்கொண்டான்....! உன் மகாலட்சுமி... போன்ற அழகுக்கு நீ... மருமகளாய் வர நாங்கள் அல்லவா கொடுத்து வைத்திருக்க வேண்டும்.... என்று சொல்லி மதுராவை பெரிதும் திருப்திப் படுத்தினாள்.

அதற்குப் பின் வாணி தன்னை உம்மென்று இருப்பதாய் எண்ணி விடக்கூடாது என நினைத்தாளோ.... என்னவோ.... மோகனைப் பார்க்கும் போதெல்லாம் டூத் பேஸ்ட் விளம்பரம் போல் அடிக்கடி பற்களைக் காட்டி தேவையில்லாமல் இளிக்க ஆரம்பித்தாள்.

மேலும் வாணிக்கு ராஜாமணி அம்மாளின் புதிரான நடவடிக்கைகளைப் பார்த்துதான் மெல்ல சந்தேகம் தோன்றியது. இவ்வளவு வசதியுடன் இருப்பவர்கள்.... இப்படி விசித்திரமான குணாதிசயங்களுடன் எப்படி இருக்கிறார்கள்? என வியந்தாள்.

மேலும் கல்யாணத்திற்கு நாள் நெருங்க... நெருங்கத் தான் மோகன் ஒவ்வொரு விஷயத்தையாய் அவளிடம் சொல்ல ஆரம்பித்தான்.

கல்யாண நாளில் நிறைய முகூர்த்தங்கள் இருப்பதால் நகரில் மண்டபத்திற்கு ஏக கிராக்கியாம். ஒரு திருமண ஹாலும் கிடைக்கவில்லையாம். அதனால் பிரம்மாண்டமாக நடத்த நினைத்த திருமணத்தில் சிம்பிளாக நடத்திவிட தீர்மானிக்கிறானாம்.

எல்லாவற்றையும் அவளிடம் சொல்லிவிட்டு, உனது அபிப்பிராயம்

என்ன? என்றான் அக்கறையாய்.

வாணிக்கும் வீண் செலவு செய்து பகட்டான பிரும்மாண்டமாய் நடத்துவதில் எவ்வித ஆர்வமும் இல்லாததால், இதுவே.... சரி.... என தலையசைத்தாள். அவள்

எப்படி சிம்பிளாய் நடத்தப் போகிறான், என்பதையும் மோகன் விவரித்தான்.

நகருக்கு வெளியே ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் பிரசித்த பெற்ற மலையடிவார கோவில் ஒன்று இருக்கிறதாம். அங்குள்ள முருகன் சந்நிதியில் மாலை மாற்றி திருமணம் செய்து கொள்ளலாம். அந்தக் கோயிலின் குருக்கள் மோகனுக்கு ரொம்பவும் வேண்டியவரானதால் அவரே எல்லா ஏற்பாடுகளையும் செய்து விடுவாராம்.

அவன் சொல்லச் சொல்ல அதற்கு பலமாய் தலையாட்டுவதைத் தவிர வாணிக்கு வேறு ஒன்றும் சொல்லத் தோன்றவுமில்லை. சொல்லத் தெரியவுமில்லை.

கிளிப்பிள்ளை போல் நடக்கும் திருமண ஏற்பாடுகளுக்கெல்லாம் தலையசைத்துக் கொண்டிருந்தவளுக்கு அன்று மாலை தந்தை சதாசிவம் கவலை பொங்கும் முகத்தோடு வந்ததுதான் பயத்தைக் கொடுத்தது.

என்ன வியம்? என வாணி பயந்து வினவ....வாணி பயப்படும்படியே சதாசிவம் அந்த விஷயத்தைச் சொன்னார்.

மோகன் வீடு இருக்கும் தெருவோர பெட்டிக்கடை ஒன்றில்தான் அவர் வெற்றிலையும் சீவல் பாக்கும் வாங்குவது வழக்கம். அங்கு வாங்கி கடையோரமாய் இருக்கும் மரப் பெஞ்சில் உட்கார்ந்து நிதானமாய் வெற்றிலையையும் பாதி சுண்ணம்பையும் சரி பாதியாய் கலந்து பத்து பதினைந்து நிமிடங்கள் அங்கே பெட்டிக்கடைக் காரனுடன் பேசிக்கொண்டிருப்பது அவரது வழக்கம்.ஷ



அன்றும் அப்படித்தான் வழக்கம் போல் பெட்டிக்கடைக்காரனிடம் பேசிக் கொண்டிருக்க.... அவன் சொன்ன விஷயம்தான்அவரை உலுக்கி விட்டதாம்... என்றபடி விஷயத்தை விவரித்தார் சதாசிவம்

அதாவது மோகன் அவன் சொன்னது போல் பரம்பரையாய் இங்கு குடியிருக்கவில்லையாம். இரண்டு மாதங்களுக்கு முன் தான் புதியதாய் குடி வந்திருக்கிறானாம். அவர்கள் நினைப்பது போல் இது சொந்த வீடு இல்லை. வாடகைக்குத்தான் குடியிருக்கிறானாம்.

மேலும்... மோகனின் நடவடிக்கைகள் புதிராய் பெட்டிக் கடைக்காரனுக்கு சந்தேகப்படும்படியாய் இருக்கிறதாம் யார்... யாரோ.... புதுஸாய் ஹிந்திக்காரார்க்ள எல்லாம் வந்து அடிக்கடி அவனை சந்தித்து விட்டுச் செல்கிறார்களாம். அதனால்.... உங்கள் மகளை.... வேறு இடத்தில் வேலை பார்க்கச் சொல்லுங்கள். இந்த வேலையை விட்டு விடுங்கள்.... என பெட்டிக் கடைக்காரன் உபதேசம் வேறு செய்திருக்கிறானாம்.

சதாசிவம் சொல்லியவர் பயம் பொங்க தன் கண்களை இடுக்கிக் கொண்டு, மோகன் நடவடிக்கைகள் சந்தேகமாய் இருக்கிறது. அவரிடம் வேலை பார்ப்பதையே நிறுத்தி விடுங்கள்... என்கிறான் பெட்டிக்கடைக்காரன். ஆனால் நாம்தான் எல்லாவற்றுக்கும் சம்மதித்து கல்யாணம் வரை போய் விட்டோமே...! இப்போது என்ன செய்வது? யாரை நம்புவது...? என்றார் சதாசிவம் பரிதாபமாய்.

தந்தை சொல்லச் சொல்ல வாணிக்கு அடிவயிறு கலங்க பகீபெரன்றுதான்இருந்தது. ஐயோ! அப்பா!! என்ன சொல்கிறீர்கள்? என்றாள் பதறியவாறு. சதாசிவம் பதறியவளின் தலையை சவாஞ்சையாய் வருடி சமாதானப்படுத்தியவர், பதறாதே... கண்மணி... இன்னமும் நமக்கு அவகாசம் இருக்கிறது... என்றார்.

எப்படி... அப்பா, இன்னும் கலயாணத்திற்கு ஐந்து நாட்கள்தானே இருக்கிறது..? என்றாள் வாணி குரல் நடுங்க.

சதாசிவமும் பெரும் கவலை கொண்டவராய் தலையில் கை

வைத்தது யோசிக்க ஆரம்பித்து விட்டார்.

வாணி யோசித்தவள் பட்டென ஏதோ பொறி தட்டியது போல் நிமிர்ந்தாள்.

அப்பா ஒரு யோசனை தோன்றுகிறது....

என்னம்மா?

நான் வேலைக்குச் சேர்ந்த புதியதில் முனியம்மா என்றொரு வேலைக்காரி வீட்டு வேலை பார்த்து நின்று விட்டதாக சொன்னார்கள். நான் கூட அவளை வீட்டில் ஓரிருமுறை பார்த்திருக்கிறேன்....

வாணி சொல்ல சதாசிவமும் ஞாபகம் வந்தவராய் நிமிர்ந்தார்.

ஆமாம்மம்மா. எனக்கும் ஞாபகம் வருகிறது. அவளின் வீடு கூட.... பக்கத்து சேரிக் குடியிருப்பில்தான் என கேள்விப்பட்டிருக்கிறேன்......

வாணி உற்சாகமானாள்.

அப்படியானால் அங்கு சென்று அவளிடம் விசாரித்தால் உண்மை என்னவென்று தெரிந்துவிடும். என்ன சொல்கிறீர்கள்?

வாணியின் கேள்விக்கு சதாசிவம் சம்மதித்தார். இருவரும் தாமதிக்காமல் அன்று மாலையே சேரிக்குப்பம் சென்று அந்த முனியம்மாவைத் தேடினர்.

ஒரு வழியாய் பலரிடம் விசாரித்து கடைசியில் முனியம்மாவின் குடிசை வீட்டை கண்டு பிடித்து அவளிடம் மோகன் பற்றி கேட்ட போது... அவள் சொன்ன பதில் அவர்களை அப்படியே ஸ்தம்பிக்க வைத்தது.



## 7



முனியம்மாள் சொன்ன பதிலைக் கேட்டு இருவரும் இடிந்து போனார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.



அப்படியே வெளிறிய முகத்துடன் அவள் குடிசையை விட்டு வெளிவந்தனர். முனியம்மாள் தெளிவாய் விளக்கமாய் சொல்லி விட்டாள்.

சந்தேகமே படாதீர்கள். அந்த ஆள் மோகன் நல்லவனில்லை. ஒரு பெரிய பிராடுதான். அந்த அம்மாள் ராஜாமணியும் அவனது உண்மைத்தாய் கிடையாது. இருவரும் தாயும் மகனும் போல எதற்காகவோ நடித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்களது நடவடிக்கையும், முன்னுக்குப்பின் முரணாய் பேசும் அவர்கள் பாங்கும் ரொம்பவும் சந்தேகப்படும்படியாய் விசித்திரமாய் இருக்கிறது. அதனாலே வீட்டு வேலை செய்ய பயந்து நான் வேலையில் இருந்து நின்று விட்டேன். நீங்களும் உடனே விலகி விடுங்கள். இல்லையெனில் ஆபத்து உங்களுக்குத்தான்!

முனியம்மாள் சொன்ன எல்லாவற்றையும் கேட்டு அதிர்ந்து நடந்தவர்கள் அப்படியே வீட்டுக்கு வந்து தொப்பென உட்கார்ந்தார்கள். ரொம்ப நேரம் திக் பிரமை பிடித்தவர்கள் போல சுவரையே வெறித்தார்கள்.

வாணிக்கோ ஏற்கனவே மோகனின் நடவடிக்கைகளை விட அவனது தாயார் ராஜாமணி அம்மாளின் மீது சந்தேகம் இருந்து வந்தது. ஏனெனில் அந்த அம்மாளுக்கு மோகன் சொன்னது போல் எவ்வித உடல்நலக் குறைவும் இருந்தாற்போல் தெரியவில்லை.

நல்ல திடகாத்திரமாய் ஆரோக்கியமாய் இருப்பது போலவே பட்டது. அதிலும் வாணி வரும் சமயங்களில் மட்டும் நோயாளி போல் பெட்டில் சென்று படுத்து விடுவது போலவும் தோன்றியது.

மேலும் ராஜாமணி அம்மாள் சாப்பிடும் மருந்துகளும் மாத்திரைகளும் வைட்டமின் மருந்துகளாகவே இருப்பதை வாணி கவனித்தாள். அவற்றையும் அவள் வேளை தவறாமல் கொடுக்கச் சொல்லும்போது, நானே.... போட்டுக் கொள்கிறேன். உனக்கு ஏன் சிரமம்? எனக் கூறியபடி மாத்திரைகளை வாங்கிக் கொண்டு அவளை அனுப்பி விடுவாள் ராஜாமணி அம்மாள்.

இப்போது எல்லாவற்றையும் நினைத்துப் பார்க்கும் போது ராஜாமணி அம்மாளே அவளிடம் நோயாளி போல் தினம் நடித்துக் கொண்டிருப்பதாய் அவளுக்குத் தோன்றியது.

அது... சரி... ராஜாமணிஅம்மாள் ஏன் இப்படிச் செய்ய வேண்டும்? போயும் போயும் அவளிடம் எதற்கு இப்படி நடிக்க வேண்டும்?

இந்த மோகன் யார் என்றே தெரியாது. திடீரென்று வந்தான். வேலை கொடுத்தான். பிடின் பெரிய பரோபகாரி போல் நடந்து கல்யாணம் செய்ய விருப்பத்தை கேட்டான். நாமும் சம்மதித்து இன்னும் நான்கு நாளில் கல்யாணம்! என்ன ஒரு கூத்து இது! எப்படி முன் பின் யோசிக்காமள் இதற்கு ஒப்புக் கொண்டேன்?

வாணி தன்னைத்தானே நொந்து கொண்டு யோசித்தாள்.

அவன் மோகன்தான் வேலைக்கு சேர்த்தான். கல்யாணம் செய்து கொள்ளலாமா? என்று கேட்டதும் மடத்தனமாய் எப்படி அதற்கு சம்மதித்தோம்? என்றே அவளுள் சிந்தனை ஓடியது.

நாலு பேரிடம்விசாரிக்காமல் பூம்பூம் மாடு போல தலையாட்டி இருக்கிடிறாளே!

இப்போது என்ன செய்ய? தலைக்கு மேல் வெள்ளம் போன கதையாய் கல்யாணத்திற்கு இன்னும் நாலு நாள் தானே இருக்கிறது! எப்படடி அதை நிறுத்தப் போகிறாள்? மோகனிடம் என்ன சொல்லி தப்பிக்கப் போகிறாள்?

வாணி திகைத்து யோசித்தபடியே தடுமாறிக் கொண்டிருக்க.... சதாசிவம் ஏதோ மனதில் உறுதி பெற்றவராய் நிமிர்ந்தார்.

மெல்ல எழுந்து அவள் பக்கம் வந்தவர் வாணியின் தலையை ஆதரவாய் கோதினார்.

நீ ஒன்றும் பயம் கொள்ள வேண்டும் கண்மணி இன்னும் நம் கையை மீறி ஒன்றும் நடந்துவிடவில்லை.... என்றார் நீளமான மூச்சுடன்.

வாணியும் தந்தையின் முகத்தை உற்றுப் பார்க்க அவர் மெல்ல எழுந்து பரணில் இருக்கும் பழைய டிரங்குப் பெட்டிப் பக்கம் போனார்

அந்தப் பெட்டியை எடுத்து தூசி தட்டி திறக்க ஆரம்பித்ததும் வாணி



ஆர்வம் அதிகமாய்த்தான் ஆனது

என்னப்பா...? என்ன செய்யப் போகிறீர்கள்?

சதாசிவம் தாடையைத் தேய்த்துக் கொண்டபடி அவளைப் பார்த்தார்

கண்ணு, எனக்கு சென்னைப் பட்டணத்தில் ஒரு நண்பர் உண்டும்மா, அவர் பெயர் கோசல்ராம் அவர் எனது பால்ய கால நண்பர். அவர் இப்போது உயிரோடு இல்லை. விபத்தொன்றில் இறந்துவிட்டார். அவரது மகன் சத்யேந்திரன் என்று உண்டு. அவரை எனக்கு ஓரளவு பழக்கம் உண்டு அவர் சென்னையில் பல தொழில்கள் செய்து வரும்ட கோடீஸ்வரர். அவரிடம் தான் உதவி கேட்கப் போகிறேன்...

வாணிக்கு ஒரே ஆச்சரியம்!

என்னப்பா இது...? என்னிடம் இது வரை நீங்க்ள சொன்னதே இல்லையே? என்றாள். சதாசிவம் புன்னகைத்தவர், சமயம் வரும் போது சொல்லலாம் என விட்டுவிட்டேன். மேலும் இப்போது இது போன்ற கஷ்டம் வரும்போதுதான்.... அப்படி ஒரு நண்பர் தெரிந்தவர் இருக்கிறார் என்பதே ஞாபகத்திற்கு வருகிறது. என்னிடம் அவரது விலாசமும் போன் நம்பரும் இருக்கிறது. அவரிடம் பேசிப்பார்க்கிறேன்... என்றபடி சதாசிவம் அந் பெட்டியிலிருந்த டயரி ஒன்றைப் புரட்டி முகவரியைக் கண்டுபிடித்தார்.

பின் பக்கத்து பூத் பக்கம் சென்று ஃபோனில் அந்த எண்களை சுழற்றினார்.

மறுமுணை உயிர்பெற்றதும் கடகடவென மடை திறந்த வெள்ளம் போல் அவ்வளவு விஷயங்களையும் கொட்ட ஆரம்பித்தாரத்.

மறுமுனையில் கேட்ட அவரது பால்ய நண்பரின் மகனான முப்பது வயது சத்யேந்திரன் மறுநாளே புறப்பட்டு நேரிடையாய் வந்து விட்டான்.

வந்தவனன், என் அப்பாவின் இனிய நண்பர் நீங்கள். இவ்வளவு கஷ்டப்பட்டு இருக்கிறீர்க்ள என்னிடம் ஒரு வார்டத்தை சொல்லாமல் இருந்துவிட்டீர்களே..! எனஎ செல்லமாய் கடிந்து கொண்டான்.

பின் அவனே வாணி வேலை பார்த்த மோகன் பற்றிய விபரங்களுடன் போலீஸ் நிலையம் சென்று இன்ஸ்பெக்டரை சந்தித்தான்.

அடுத்த அரைமணி நேரத்தில் மோகனின் பங்களாவில் அதிரடியாய்

போலீஸ்: பட்டாளம் ஒன்று நுழைந்து மோகனும், ராஜமணி அம்மாளும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் இருவரும் போலா□ஸ் தேடிக்கொண்டிருக்கும் பழைய குற்றவாளி என்றபோது அதிரத்தான் செய்தனர்.

இன்ஸ்பெக்டர் மோகனின் லீலைகள் பற்றி விவரிக்க அதிர்ச்சியில் உறைந்தே விட்டனர்.

மோகனும், ராஜமணி அம்மாளும் டுபாக்கூர் பேர்வழிகளாம். ஊர் ஊராகச் சென்று மணமாகாத தொழிலதிபர் போல் நடித்து அப்பாவி இளம்பெண்களை தங்கள் வலையில் சிக்க வைப்பதே அவர்களது தொழிலாம்.

அப்படி அப்பாவி பெண்களை தங்க்ள வலையிவல் வீழ்த்த கல்யாணம் செய்வது போல் எல்லாம் நடித்து போலியாய் யாருக்கும் தெரியாத இடத்திடில் வைத்து தாலி கட்டி ஏமாற்றி அப்படியே மணப்பெண்ணாக விலைபேசி மும்பை சிவப்பு விளக்கு பகுதிக்கு விற்று விடுவார்களாம்.

இப்படி கோடூரமாக ஒரு தொழில் செய்து ஊர் ஊராய் நிறைய இளம் பெண்களை ஏமாற்றி இருக்கிறார்கள். பல நாட்களாய் போலீஸ் தேடிக்கொண்டிருக்கும் பயங்கர குற்றவாளிகள்! கைது செய்யப்பட்டு மறுநாளே எல்லா பேப்பர்களிலும் பரபரப்பாய் செய்திகள் வெளியாயின.

பெரும் அதிர்ச்சியோடு நிம்மதி பெருமூச்சு விட்டனர் சதாசிவமும் வாணியும்.

சத்யேந்திரன் அத்தோடு நில்லாமல் அவர்களை கையோடு சென்னைக்கு வரும்படி வாணிக்கு தனது அலுவலகத்தில் வேலை இருப்பதாயும் சொல்லி அழைக்க... இருவரும் கிளம்பினர்



## 8



மறுநாள் அவர்களுக்கு சென்னையில் விடிந்தது. சத்யேந்திரன் சொன்னபடியே அவர்கள் தங்குவதற்கு சரியான வீடு ஒன்று ஏற்பாடு செய்து விட்டான்.



ஒரு நாள் ஓய்விற்குப்பின் வாணி அவனது அலுவலகம் சென்றபோது சத்யேந்திரனின் பிரும்மாண்ட தொழில் வளர்ச்சியை கண்டு பிரமிக்கவே செய்தாள்.

அவளை இன்முகமாய் வரவேற்று உட்காரச்சொன்னான்.

பின் சத்யேந்திரன் கேட்டது கண்டு ஒரு கணம் வாணி திகைத்துப் போக அவன் அத்தோடு நிறுத்தாமல் தொடர்ந்தாள்.

சமூக சேவை பற்றி நிறைய கனவுகளை எனக்குள் தேக்கி வைத்திருக்கிறேன். அவற்றையெல்லாம் செயல்படுத்த உன்னைப் போன்ற துடிப்பான பெண் எனக்குத் தேவை...

சொல்லிவிட்டு, என்ன சொல்கிறாய்? எபன்றான்.

படிய வாரிய தலை முடிகளை அழகாக சிலுப்பிக் கொண்டு அவன் திரும்பிய போது அப்போது தான் அவனை முதன் முறையாய் பார்ப்பது போல் நன்கு உற்றுப் பார்த்தாள்.

நெடுநெடு உயரம், பரந்த நெற்றி, ஆஜானுபாகுவான தோள்களுடன் திடமான உடற்கட்டு, ஆழமாய் ஊடுருவும் காந்த விழிகள், வரிசையான பற்களைக் காட்டி சிரிக்கும் வசீகர சிரிப்பு என எல்லாமே ஒருமுறைக்கு இருமுறை பார்க்கத் தூண்டும் வகையிலே அவன் தெரிந்தான். இவனைப் போல பணமும் நல்ல குணமும் உள்ளவனிடம் வேலை பார்க்க கொடுத்து வைத்திருக்க வேண்டுமே!

உனக்கு இங்கு என்னுன் பணிபுரிய விருப்பம் இருக்கிறதா? என்றான்

இருக்கிறது சார்.... என்றாள்

அவள் குரலில் தெரிந்த உற்சாகத்தை ரஸித்தவன் முதல் முறையாய் அவளை மேலிருந்து கீழ்வரை அவனும் ஊடுருவினான்.

மை விழிக் கண்கள் படபடப்புடன் துறுதுறுவென தலையை வெட்டி அவள் நடக்கும் பாங்கு. வார்த்தெடுத்த தங்கச் சிலை போல் பளீரிடும் அவள் அழகு, பேச்சினூடே நொடிக்கொருதரம் பளீரிடும் முத்துப் பல் புன்னகை எல்லாமே அவளை வியப்படையச் செய்தது.

அவன் தன்னையே நிதானித்து பார்ப்பது கண்டு துணுக்குற்றவளாய்... என்ன விஷயம் சார்? என்றாள்.

அவன் சிரித்தபடி, எனக்கு ஒரு விஷயம் புதிராக இருக்கிறது... என்றான்.

புதிராகவா?

ஆம்... பொதுவாக உன்னைப் போன்ற அழகு ரதியாய் இருக்கும் பெண்கள் எல்லாம் பாய் பிரண்ட் பார்ட்டி கூட்டம் என ஊர் சுற்றும் போது... நீ மட்டும் எப்படி பொதுச் சேவையில் நாட்டம்ட கொண்டாய்? அது தான் எனக்கு பெரும் ஆச்சரியமாய் இருக்கிறது...!

அவன் தன் அழகை புகழ்வது கண்டு உள்ளூர மகிழ்ந்தாலும் சலனமே இல்லாதவளாய் அவளும் சிரித்தாள்.

என்ன சிரிக்கிறாய்?

என்னைச் சொல்கிறீர்களே... நீங்களும் அப்படித் தானே? உங்களைப் போன்ற தொழிலதிபர்ள்.... பணம்... பணம் என்றுஅலையும் போது மாறுதலாய் இருக்கிறீர்களே.... அது எப்படி?

அவள் தன்னை மடக்குவது கண்டு ரஸித்துச் சிரித்தான்.

ஒரு நல்ல நாளாய்ப் பார்த்து ஆர்.கே.அறக்கட்டளையை கவனித்து நிர்வகித்து வரும் அவனிடின் பர்ஸனல் செகரட்டரிடியாக மனமுவந்து பொறுப்பேற்றுக்கொண்டாள்.

சத்யேந்திரன் அவளுக்கு அறக்கட்டளைக்கு ஒதுக்கப்படும் நிதி பற்றி, பள்ளியின் நிர்வாகம், பற்றி கல்வித்தரம் உயர்த்துவது பற்றி என்ன எல்லா விஷயங்களையும் விளக்கி புரிய வைத்தான்.

சொல்லப் போனால் இந்த வேலை வாணிக்கு ரொம்பவும் பிடித்திருந்தது. வண்ண வண்ண மலர் கொத்துகளாய் துள்ளி குதித்து ஓடும் சிறுவர் சிறுமியர்களுடன் எந்நேரமும் இருப்பது இனம் புரியாத மகிழ்ச்சியைத் தந்தது.



அவளது சுறுசுறுப்பைக் கண்டு சத்யேந்திரனே வியக்கத்தான் செய்தான்.

ஒரு நாள் அவளை தனது தொழில் கூடங்களுக்கு அழைத்துச் சென்ற போதுதான் அவனைப்பற்றி முழுமையாக புரிந்து கொள்ள முடிந்தது. டெக்ஸ்டைல் யூனிட், சிந்தடிக் பேக்டரி, மோல்டிங் உற்பத்தி என பலவித வியாபார ஸ்தலங்க்ள அவனுக்கு.

பரம்பரை பரம்பரையாக கோடீஸ்வரர்களாய் இருந்து வரும் ராயல் பேமிலி. ஒருமுறை கன்ஸ்ட்ரக்ஷன் ஸ்பாட்டுக்கு சென்று நேரமாகிவிட மதிய உணவருந்த தனது பங்களாவிற்கும் அழைத்துச் சென்றான்.

விஸ்தாரமான பரப்பளவில் பச்சை மரங்கள் சூழ கிரானைட் பளபளப்பில் மினுங்கிக் கொண்டிருந்த பங்களாவினுள் சங்கோஜப்பட்டு தயங்கித் தயங்கிதான் நுழைந்தாள் அவள். சும்மா... வா என உரிமையுடன் கை பிடித்து அழைத்துச் சென்றது அவளுக்கு என்னவோ போல் இருந்தது.

அவன் எப்போதும் தன்னை செகரட்டரி, தன்னிடம் வேலை பார்ப்பவள் என்று எண்ணாது.... நண்பனைப் போல் நட்புடன் பேசி பழகும் அவனது பாங்கு அவளை ரொம்பவும் கவர்ந்திருந்தது.

அதனாலே சில சமயங்களில் உரிமையாய் அவன் கைகளைப் பிடிக்கும்போது விரல்களோடு கோர்க்கும் போது அவளையறியாமலே அவள் அதை அனுமதித்தாள்.

அவன் கூட்டிச் சென்ற அவ்வளவு பெரிய பங்களாவில் அவனது தாயாரும் சில பணியாட்களும் மட்டுமே. என்ன வேறு யாரும் இல்லையா...? என அவள் கேட்டதற்கு பின்னொரு நாளில் பெரிய விளக்கம் கொடுத்தான் அவன்.

வாணி, நான் பெரும் கோடிஸ்வரனாய் இருந்தாலும் இப்படி தானம். தர்மம். அறக்கட்டளை சேவை என லட்சக்கணக்கான ரூபாயை வாரியிறைக்கிறேனே... எதனால் தெரியுமா?

எதனால்....? என்றாள் புரியாதவளாய்.

அதற்குப் பெரிய சோகமான காரணம் ஒன்று இருக்கிறது. அதை நீ கேள்விப்படவில்லை என நினைக்கிறேன்....

புரியவில்லை... ஸார்....

புரியும்படியே சொல்கிறேன்.... அண்ணன், தம்பி, அக்கா தங்கை என எங்கள் குடும்பம் ரொம்பவும் பெரியது. மொத்தம் பன்னிரண்டு உறுப்பினர்கள். பத்து வருடங்களுக்கு முன் நடந்த ஒரு மோசமான கார் விபத்தில் அத்தனை பேரும் பலியாகி விட்டனர். எஞ்சியது நானும் எனது தாயும் மட்டும்தான். சந்தோஷமும் குதூகலமுமாய் இருந்த இந்த பங்களாவே அதன்பின் அமைதியாகிவிட்டது. வாழ்க்கையே வெறுத்தது போல் ஆகிவிட்டது. அதன்பின் ஒரு ஐந்து வருடங்களில் மனதைத் தேற்றி அறக்கட்டளை ஒன்றை ஏற்படுத்தி நிறைய சேவைகள் செய்ய ஆரம்பித்தோம். ஆதரவற்ற சிறுவர் சிறுமியர்களை அரவணைத்து அவர்கள் வாழ்வில் ஒளியேற்றத்தான் இந்த மெமோரியல் ஸ்கூலை ஆரம்பித்தோம்....

அவன் சொல்லி முடித்ததும் அவளுக்கு நிறைய விஷயங்கள் புரிந்தது. இவ்வளவு நாள் அடிக்கடி மனதை குடைந்த கேள்விக்கும் விடை தெரிந்து கொண்டாள்.

அவளும் எத்தனையோ பணக்காரரர்களை அறிந்திருக்கிறார்கள்.ஏதோ பெயருக்கு இரக்கப்பட்டு சில உதவிகள் செய்வார்கள். ஆனால் பொதுச் சேவைக்காக இப்படி பணத்தை அள்ளி வீசும் பணக்காரனாய் சத்யேந்திரனைப் பார்த்தபோது திடுக்கிடத்தான் செய்தாள்.

அது எப்படி இப்படி பரோபகாரித்தனமாய் ஒருவன் இருக்க முடியும் என வியந்தாள்.

சத்யேந்திரன் சொன்ன காரணம் அவன் வியப்பு முழுவதையும் நீக்கி அவன் மீது இரக்கப்படவும் வைத்தது. ரொம்பவும் துயரமாய் நடந்திருக்கிறது நிறைய வருந்தியிருப்பீர்களே.... சார்.... என்றாள் வருத்தம் தொனித்தகுரலில்.

அவன் மெல்ல தலையசைக்க அவனை மேலும் ஆறுதல் படுத்தும் விதமாய் பேச நினைத்தவள், எனக்கும் இதே போல்தான் சார். சிறுவயதிலே



விபத்தொன்றில் பெற்றோர்களை இழந்துவிட்டேன்.... எனவும் அவன் ஆச்சரியப்பட்டு போனான்.

அப்படியா? அப்படியானால் அந்த இழப்பின் தவிப்பு, கொடுமை உனக்கும் புரிந்திருக்கும்.... இம்முறை அவன் சொன்னதற்கு அவள் தலையசைக்க, அவன் அத்தோடு நிறுத்தாமல், பார்... நாம் இருவரும் ஒரே... நிலைமையில்.... வி...ஆர்...இன்....த....ஸேம்... போட்....! எனச் சொல்லியபடி அவள் கைகளைக் கோர்த்து விரல்களை பிணைத்துக் கொண்டான்.

அப்படி அவள் விரல்களை பிணைத்துக் கொண்டு அவன் பங்களாவின் உட்புற பெரிய ஹாலுக்குள் நுழையவும் எதிரே... அவனது தாயார் வரவும் சரியாயிருந்தது.

அந்தத் தாயின் கண்கள் மகன் ஒரு பெண்ணின் கரத்தோடு பிணைத்தபடி நுழைவதை ஆச்சரியத்துடன் பார்த்தது.



# 9



வாணிக்கே அந்த ஒரு நிமிடம் ரொம்பவும் சங்கடமாய் போய்விட்டது. சத்யேந்திரன் அவன் பாட்டுக்கு கொஞ்சமும் சங்கோஜப்படாமல் அவள் விரல்களோடு விரலை பிணைத்திருந்தான்.

எதிரே வந்த சத்யேந்திரனின் தாயார் பார்வை அவளை பார்த்ததைவிட டக்கென கீழிறங்கி பிணைத்திருந்த இருவரது கைகளிலும்தான் சென்றது. அந்தப் பார்வையில் ஆச்சரியமும் ஒருவித வினோதத் தன்மையும் தெரிய அதை சட்டென வாணி புரிந்து கொண்டாள்.

ஆனால் சத்யேந்திரன்தான் கொஞ்சமும் புரிந்து கொள்ளவில்லை. அவன் விடுவிக்க முயன்ற விரல்களை அழுத்தமாய்ப் பிடித்துக் கொண்டே தாயைப் பார்த்து சிரித்தபடி அவளை அறிமுகப்படுத்த ஆரம்பித்தான்.

அம்மா, இவள்தான் வாணி...! நான் சொன்னனே என்னுடைய புது செகரட்டரி...! சூட்டிகமான பெண்....!

சொல்லியபடி ஹாஸ்யமாய் நகைக்க ஆரம்பிக்க... அவள் கொஞ்சம் சங்கடப்பட்டே தனது விரல்களே பிரித்துக் கொண்டாள்.

வாணி.... இதுதான் என் தாயார் பூரணி அம்மாள்.... என தன் தாயையும் அறிமுகப்படுத்தி வைக்க.... பெரிய கை கூப்பலுடன் நமஸ்கரித்தாள் அவள்.

ஆனாலும் அத்ட தாயார் மகனோடு கை கோர்த்திருந்த தன் நிலை கண்டு என்ன நினைக்கக்கூடும்.... இப்படி முதலாளியை தன் கைகளோடு பிணைக்க அனுமதிக்கும் தன்னை எவ்வித பெண்ணாய் கற்பனை செய்து விடக்கூடும் எனவும் அஞ்சினாள்.

அதனாலே பயப்பார்வையுடனே அவள் நிற்க பூரணி அம்மாளே புன்னகையுடன் அவளை நெருங்கி கைகளைப் பிடித்துக் கொண்டாள்.

நீ தான் வாணியா? உன்னைப் பற்றித் தான் அடிக்கடி இவன் சொல்லிக் கொண்டிருப்பான். இந்த சின்ன வயதில் நீ சமூக சேவையிலும் மற்றவர்களுக்கு உதவுவதிலும் அக்கறை காட்டுவது மிகவும் பாராட்டுக் குரியது....

பூரணி அம்மாள் சொல்லச் சொல்ல பயம் நீங்கியவள், இவன் அடிக்கடி உன்னைப் பற்றித்தான் பேசுவான்... என்ற வார்த்தைகளை நன்கு உள்வாங்கிக் கொண்டாள். அது ஒரு இனம் புரியா சந்தோஷத்தை அவளுள் ஏற்படுத்தியது.

அதன்பின் சத்யேந்திரன் அவளை டைனிங் ஹாலுக்கு அழைத்துச் சென்றபடி தொழில் விஷயங்கரைள பேச ஆரம்பித்து விட்டான்.

பின் உணவருந்தி விட்டு கிளம்பும் போதும் வாணி பூரணி அம்மாளிடம் ஒரு பெரிய நமஸ்கரிப்புடன் விடைபெற்றாள்.

ஆனால் அவளுக்கு என்னவோ தன்னைப் பார்த்த பூரணி அம்மாளின் கண்களில் ஒருவித வினோதத் தன்மை இருப்பதாய் உணர்ந்தாள். அதற்கேற்றாற் போல் சத்யேந்திரனும் அவள் படிக்கட்டுகளில் இறங்கும்போது என்னவோ அவள் கீழே விழுந்து விடுவது போல் அவளது தோள்களைப் பற்றிக் கொண்டான்.



அதையும் பூரணி அம்மாளின் கண்கள் உற்றுக் கவனிப்பதை வாணி உணர்ந்துவிட்டாள். அவை எல்லாவற்றையும் விட தனக்கு ஏன் இப்படி சொரணை போயிற்று என எண்ணினாள்.

பொதுவாவே பஸ்ஸில் பிரயாணிக்கும்போது பொது இடங்களிலோ பிற ஆண்களின் உரசல்களைளேயா அனாவசிய தொடுதல்களையோ தவிர்தட்தே ஜாக்கிரதையுடன் நடந்து கொள்வாள்.

அப்படிப்பட்டவள் இன்று முதலாளி என்ற சாக்கில் ஒருவன் கைகளோடு பிணைக்கிறான்; தோளோடு அணைக்கிறான் என்பதையெல்லாம் எந்தவித சொரணையுமில்லாமல் பொறுத்துக் கொள்வது... ஏன்...? என்று சற்று அதிர்வுடன் நினைத்தாள்.

நிமிர்ந்து பார்த்தபோது சத்யேந்திரன் எவ்வித கள்ளம் கபடம் இல்லாமல் சிரித்தபடி சென்று கொண்டிருப்பது தெரிந்தது. இவனிடம் எந்த வித கள்ளத்தனமும் தப்பான நோக்கமும் இல்லையே.... அதனால்தான் நாமும் இதையெல்லாம் அனுமதிக்கிறோமோ.... எனவும் நினைத்துக் கொண்டாள்.

ஆனால் காரில் திரும்பச் செல்கையில் சத்யேந்திரன் சொன்ன விஷயமொன்று அவளைத் திடுக்கிடவே செய்தது. பேசிக் கொண்டே வந்தவன் சட்டென, வாணி.... என் தாயாரைப் பார்த்தாய் அல்லவா...அவர்களை உனக்கு பிடித்திருக்கிறதா? என்றான்.

அவள் எதற்கு இந்தக் கேள்வி என்று சற்று துணுக்குற்றாலும் சமாளித்து... ரொம்பவும் பிடித்திருக்கிறுது... சார்.... என்றாள்.

அத்தோடு அவன் விடவில்லை... அடுத்தும் ஒரு வினோத கேள்வியை வீசினான்.

வாணி, உனக்கு அவர்களை பிடித்திருப்பதுபோல்... என் அம்மாவிற்கும் உன்னைப் பிடித்திருக்குமா? என்றான்.

இதென்ன கேள்வி? என அவள் திகைக்கவே செய்தாள்.

நீங்கள் கேட்பது புரியவில்லை.... சார்.... என்றாள். அவனையே உற்றுப் பார்த்தபடி

அதாவது... உன்னை அவர்களுக்குப்; பிடித்திருக்குமா?என்று கேட்டேன் என்றான் அவன் அழுத்தந் திருத்தமாய்....

அவள் இம்முறை பதிடில் சொல்லாமல் விழிக்கவே செய்தாள்.ஷ

பின் கொஞ்சம் யோசித்து, எதற்காக இப்படிக் கேட்கிறீர்கள்? என்றாள்.

அதற்கும் அவன் இலகுவாக, சும்மா தெரிந்து கொள்ளத்தான் கேட்டேன். என்றவன் விடாது. சும்மாவே நீ அழகு. அதுவும் இந்த கிளிப்பச்சை நிற ஜரிகை புடவையில் தேவதை போல் ஜொலிப்பு வேறு இருக்கிறது... உன்னை அவர்களுக்கு பிடிக்காமல் இருக்குமா? என மறுபடியும் அதே கேள்வியுடன் அவன் முடிக்க அவள் குழம்பித்தான் போனாள்.

அவள் சொன்ன அழகு. தேவதை என்ற வர்ணிப்பு எல்லாம் அவளை ஒரு ஆட்டு ஆட்டினாலும் அதையெல்லாம் விட எதற்காக இந்த அனாவசியக் கேள்விகள்? இந்த கேள்விகளில் ஏதும் உள்நோக்கம் இருக்கிறதா என்பதை தெரிந்து கொள்வதிலே அவள் தவிப்பாய் இருப்பாய் இருந்தாள்.

அதனாலே, சார், உங்களிடம் ஒரு கேள்வி.... என ஆரம்பித்தாள்.

ம்... கேளு....

நீங்கள் இப்படி அலுவலகத்தடில் முன்பு உங்கள் செகரட்டரியாக, காரியதரிசியாக இருந்தவர்களையெல்லாம் அடிக்கடி உங்கள் பங்களாவிற்கு உணவருந்த அழைத்துச் சென்றிருப்பீர்கள்தானே? என்றாள் தன் மன சந்தேகங்களை தெளிவுப்படுத்தும் நோக்கோடு.

ஆனால் சத்யேந்திரனோ திரும்பி, எதற்கு இப்படிக் கேட்கிறாய்...? என்றான் சட்டென.

அவள் சமாளிக்க சங்கடப்பட்டாள்.

இல்லை... சும்மாத் தெரிந்து கொள்ளத்தான்... வேறொன்றுமிடில்லை.... சார்....

அவள் சமாளிப்பதை ரஸித்துச் சிரித்தவன், இல்லை வாணி, நீ இப்படி



சுற்றி வளைத்துக்ட கேட்கவேண்டியது இல்லை. நேரிடையாகவே கேட்கலாம். உன்னைத்தான் முதல் முறையாய் என் வீட்டுக்கு அழைத்துச் சென்றிருக்கேன். இதுவரை அலுவலக நபர்க்ள யாரையும் என் வீடு வரை அழைத்துச் சென்றது. உபசரித்தது கிடையாது.

அவன் சொன்னதையே தன் அடுத்த கேள்விக்கு வாகாய் பிடித்துக் கொண்டவள்... பின் ஏன் என்னை மட்டும் அழைத்துச் சென்றீர்கள்? என்றாள் ஆவலாய்.

இந்தக் கேள்விக்கு அவன் திணறுவான் அவனால் பதில் கூற முடியாது என்றெல்லாம் அவள் நினைக்க அவனோ எவ்வித தயக்கமுமின்றி உன்னை மட்டும் அப்படி அழைத்துப் போக வேண்டும் என்று எனக்குத் தோணியது...அவ்வளவுதான்...! என்றான் அவளைப் பார்த்து சலனமில்லாத புன்னகைக் குரலில்

அவன் பதிலை வைத்து அவளால் ஒன்றையும் புரிந்து கொள்ள முடிடயாவிட்டாலுமத் எதற்கு இப்படி அவனிடம் தோண்டித்தோண்டி கேள்விகளை கேட்டு ஆராய்ச்சி பண்ண வேண்டும்? என தன்னைத்தானே நொந்து கொண்டாள். மேலும் ஏதோ அவசரத்தில் வீட்டிற்கு அழைத்துச் சென்றிருக்கான்... உபசரித்திருக்கிறான்... இதற்குப் போய் வீணான கற்பனைகளை மனதில் அலையவிடக் கூடாது என கடிந்தும் கொண்டாள்.

ஆனால் அன்று இரவு படுக்கையில் படுத்தபோது அவளாலவ் முன்பு போல் எளிதாய் தூங்க முடியவில்லை. புரண்டு புரண்டுதாண்ட படுத்டதாள். நினைவில் காலையளில் நடந்த சம்பவங்களே ஓடியது.

சத்யேந்திரன் தன்னிடம் கேட்ட கேள்விகளை விட பூரணி அம்மாள் தன்னை பார்த்த அந்தப் பார்வையே அவள் மனதை வருடியது.

அப்போது அவளால் அதை புரிந்து கொள்ள முடியாவிட்டாலும் இப்போது அதன் அர்த்தம் அவளுக்கு உரைத்தது.

இதுவரை யாரையும் கூட்டி வராதவன் முதன் முறையாய் ஒரு பெண்ணை கூட்டி வந்திருக்கிறான். அதுவும் அவனது தாயார் முன்னிலையிலே கைகளை பிணைத்துக் கொண்டு தோளோடு இடித்துக் கொண்டு.... இந்த

இப்படிப்பட்ட மகனின் திடீர்சச் செய்கையைக் கண்டுதான் அந்த அம்மாள் திகைத்திருக்கிறாள்? வாணியை வினோதபார்வை பார்த்திருக்கிறாள்?

மேலும் என்னதான் முதலாளி என்றாலும் அவனை காதலி போல் தொட்டுக் கொள்ள... இடித்து நிற்க அனுமதிக்கிறாளே.... என்ன மாதிரியான வேலையாள் இவள்? என்று கூட அந்த அம்மா;ள தன்னை தப்பாக நினைப்டபதற்கு வாய்ப்பிருக்கிறதே என வாணிக்கு கவலையும் அதிகரித்தது.

கூடவே சினமாய் தான் முன்பு நினைத்த, சொரணை விஷயத்திற்கு வந்தாள். இந்த நம் உடம்பிற்கு அப்படி என்னதான் ஆயிற்று? லேசான அந்நியர் ஸ்பரிசத்திற்கே சிலிர்த்து துடித்துப் போய் விலகக் கூடியது.... இப்படி சூடி சொரணையில்லாமல் போய் விட்டதே..? என வியக்கவும் செய்தாள்.

ஆனால் சத்யேந்திரன் அப்படி எந்த ஒரு தவறான கண்ணோட்டத்தையும் தன் மீது வைக்காமல் இயல்பாகவே நடந்தது போலத்தான் அவளுக்கு தோணிற்று.

தன் தாயைப் பிடித்திருக்கிறதா? உனக்கு அவர்களைப் பிடிக்குமா? போன்ற கேள்விகள் கூட இயல்பாகவே அவன் கேட்டிருக்கலாம். பொதுவாக சத்யேந்திரன் போன்ற பெரிய தொழிலதிபர்கள் இப்படி இயல்பாய் எல்லோரிடமும் பேசி நிறைய விஷயங்கரைளக் கிரகித்துக் கொள்வார்க்ள என முன்பு ஒரு தோழி சொல்லியது அவள் நினைவில் ஓடியது.

யோசித்தவள் அப்படித்தான் இருக்க வேண்டும் என்ற முடிவிற்கும் வந்தாள். பெரும் கோடீஸ்வரனாய் உரமான இடத்தில் இருப்பவன் சாதாரண குமாஸ்தா வேலை பார்க்கும் தனது பணியாளிடம் இப்படியெல்லாம் பேசி தன்னையும் தனது குடும்பம் பற்றியும் மற்றவர்கள் எனன நினைக்கிறார்கள் என்பதை யூகித்துக் கொள்கிறான் என்றும் நினைத்தாள்.

ஆனால் அவள் அப்படி நினைத்தது தவறு என மறுவாரம் நடந்த சம்பவம், சத்யேந்திரன் அவளிடம் நடந்துகொண்ட விதம் நிரூபித்டதது.



## 10





அதற்கு அடுத்து வந்த நாட்களில் வாணிடி வேலைகளில் தீவிரமாய் இருந்தாள் அவளது வீட்டுப் பக்கம் உள்ள கிப்சன்புர காலனியில் நடுத்தர வர்க்க குடும்பத்து பெண்கள் ஓய்வு நேரங்களில் சிறு தொழில் தொடங்கபேங்க் லோனை எதிர்பார்த்து ஏமாந்து கொண்டிருக்க.....அவர்களுக்காக சத்யேந்திரனிடம் பேசி அறக்கட்டளை மூலம் பணம் கொடுக்க ஏற்பாடு செய்தாள்.

சில கஷ்டப்பட்ட பெண்களுக்க அறக்கட்டளை மூலம் இலவசமாய் தையல் இயந்திரங்கள் வாங்கிக் கொடுத்து அவர்கள் சம்பாதித்து தங்கள் கால்களில் நிற்க வழி ஏற்படுத்தினாள். காலேஜ் படிக்கும் நிறைய ஏழைக் குடும்ப பெண்களுக்கு மேற்படிப்பு படிக்க அறக்கட்டளை மூலம் ஸ்டகாலர்ஷிப் வசதி ஏற்படுத்திக் கொடுத்தாள்.

மேலும் சத்யேந்திரனின் பள்ளியில் பாடங்களை தவிர தியானம், மனப் பயிற்சி போன்ற ஆன்மிக விஷயங்களை மாணவர்களுக்கு போதிக்க ஏற்பாடு செய்தாள்.

சத்யேந்திரன் அவள் சுறுசுறுப்பையும், சேவை செயள்வவதில் அவள் காட்டும் ஆர்வத்தையும் மிகவும் பாராட்டினான்.

மேலும்அவளை கூட்டி வைத்து சேவை மட்டுமில்லாது. தன்னையும் தன் உடன் சார்ந்தோரையும், எப்போதும் சந்தோஷமாய் வைத்துக் கொள்வதே தன் லட்சியம் எனவும் விளக்கினான்.

அதற்காகவே அவள் தொழிற்கூடங்களில் வேலை பார்க்கும் பணியாளர்களுக்கு பலவித சலுகைகள், கடன் உதவிகள் வழங்கி மகிழ்வித்தான்.

வாணி, இந்த பணம் என்கிற கலர்த்தாள் எத்டதனை மாயங்கள் செய்கிறது? இதைப் பார்த்டதவுடன்தான் எத்தனை முகங்கள் மலர்கிறது? மேலும் மேலும் இதை கொடுத்துக்ட கொண்டே இருக்க வேண்டும் போலத்தான் தோன்றுகிறது....

வியந்து சத்யேந்திரன் சொன்ன போது அது நிஜம்தான் என்றபடி

அவன் சொன்னதை ரஸித்தான். அவன் சொன்னது போல் ஆறு மாதங்களுக்கொருமுறை அவன் கம்பெனி ஆடிட்டரிடம் சொல்லி அறக்கட்டளைக்காக ஒதுக்கும் சேவை தொகையை அதிகப்படுத்தினான்.

முன்பெல்லாம் இல்லாததைவிட வாணி எது சொன்னாலும் அதை ரொம்பவும் வரவேற்றுப் பாராட்டினான். நான் சரியான ஆளைத்தான் தேர்ந்தெடுத்திருக்கிறேன். வந்த சில நாட்களில் நம் அறக்கட்டளை மூலம் எவ்வளவு நல்ல காரியங்க்ள செய்துவிட்டாய்.... யூ.... ஆர் கிரேட்.....! என்றபடி அவளுக்கு ஒரு சல்யூட்டும் அடிக்க மகிழ்ச்சியில் திணறித்தான் போனாள்.

அவளுக்கும் சத்யேந்திரனிடம் பேசுவது, பழகுவது உடன் செல்வது எல்லாமே எளிதாய் இருந்தது. நிறைய நேரங்களில் அவன் தன் முதலாளி என்ற உணர்வே இல்லாமல் மனதில் தோன்றிய கருத்துக்களை எல்லாம் அப்படியே சொல்லிவிடுவாள்.

அவனும் அதை முழுசாய் உள்வாங்கிக் கொள்வான். அவள் சொன்ன விஷயங்களில் அவனுக்கு ஏதும் மாற்றுக் கருத்து இருந்தால் சிறிது நேரம் கழித்து அவள் மனங்கோணாமல் மறுதலித்து தன் கருத்தைச் சொல்வான்.

தனக்காக இவ்வளவு பதவிசாக அவன் விளக்கிச் சொல்வதைக் கண்டு வியப்புடன் மகிழ்வாள் அவள். அந்த மாதிரி சமயங்களில் யெஸ்.... சார்... என்றபடி பதிலுக்கு ஒரு சல்யூட் அடித்து அவனை ரசிக்க வைப்பாள்.

அவளுக்கு என்னவோ சத்யேந்திரனிடம் பழகுகையில் வருடக்கணக்காய் அவன் தெரிந்தவன் போல், அவனுடன் பழகுவதைப் போல் உணர்வாள். ஒரு நாள் தனக்குத் தோன்றிய இந்த விஷயத்தை சிரித்தபடி அவனிடம் கூற அவன் புருவம் உயர ஆச்சரியப்பட்டான்.

எனக்கும் அப்படித்தான் எப்போதும் தோணுகிறது வாணி. அதற்கு காரணம் என்னவாக இருக்கும் என நினைக்கிறாய்? என்றான்.

அவளும் விழிகளை விரித்து தலையைச் சிலுப்பி,

எனக்குப் புரியவில்லை.... என்றாள்.

என்ன இது கூடவா புரியவில்லை? என சொல்லியபடி அவளைக்



EDUCATIONAL CD's FOR STUDENTS

| | |
|---|---|
| Chemistry Exam Tutor | Age 13-17 Years |
| Biology Exam Tutor | All Ages |
| Physics Exam Tutor | Age 14-16 Years |
| Physical World | Age 11-16 Years |
| Practise Science | Age 10-11 Years |
| Inestigating Science 1 | Age 11-14 Years |
| Investigating Science 2 | Age 12-13 Years |
| Investigating Science 3 | Age 13-14 Years |
| Maths Explorer | Age 7-12 Years |
| Addition & Subtraction Tasks in 10 Minutes | Age 7 - 9 Years |
| Multiplication & Division Tasks in 10 Minutes | Age 7 - 9 Years |
| Maths Exam Tutor | All Ages |
| World of Sport Examined | Age Above 16 Years |
| Writing Focus | All Ages |
| Young Writers Workshop | Age 14 - 17 Years |
| Writers Workshop | Age 11-16 Years |
| Speedy Keys | All Ages |
| Keyboard familiarity fun program | |
| Electronic Dictionary | Age 11-14 Years |
| Project Presenter | All School Ages |
| Spell Track | Age 3-6 Years |
| Sequences - Fun Surprise Game | Age 3-7 Years |
| Learn with fun English | Age 6-8 Years |
| Learn with fun MATHS | Age 6-8 Years |
| Learn with fun Science | Age 6-8 Years |
| Learn with fun Environmental Studies | Age 6-8 Years |
| Learn with fun General Knowledge | Age 6-8 Years |
| The Troubled Century - Important events in 20th Century | |
| Leapos and Bounds 1 | Full of fun surprise educational CD ROM |
| Leapos and Bounds 2 | Full of fun surprise educational CD ROM |
| Leapos and Bounds 3 | Age 3 - 6 Years |

அதிரடி தள்ளுபடி

Each Cd Rs. 30

Each CD @ ₹60

சிடிகளை பெற விரும்புவோர் சிடி விலையோடு ரூ.20 சேர்த்து கரிசல் மீடியா என்ற பெயரில் டிடி (அ) மணியார்டர் அனுப்பி வைத்தால் பாதுகாப்பாக கூரியர் அல்லது தபால் மூலம் அனுப்பி வைக்கிறோம். எம்ஓ படிவத்தின் தகவல் பகுதியில் தங்களுக்குத் தேவையான சிடி விவரங்களையும் முழு முகவரி மற்றும் தொலைபேசி எண் ஆகியவற்றை குறிப்பிட்டு அனுப்பவும்.

கரிசல் மீடியா
Karisal Media

37, பஜனை கோயில் முதல் தெரு,
SRM UNIVERSITY அருகில், வடபழனி, சென்னை 26.
Ph. 9941910500, 93811 10500, karisal@ymail.com
அலுவலக நேரம் : 10.00 A.M - 6.00 P.M

குட்டுவது போல் கைகளை கொண்டு வந்தவன் அப்படிடயே அவளது அழகான தலையைப் பிடித்டது ஒரு ஆட்டு ஆட்டினான்.

இரண்டு பேரும் ஒரே அலைவரிசையில் சிந்திக்கிறோம்.... என்று அர்த்தம்.... என விளக்கமும் கொடுத்தான்.

ஆனால் அவன் சொன்னது போலவே நிறைய நேரங்களில் நடப்பது கண்டு வாணியும் வியந்தாள். அலுவலகத்தில் வீட்டிற்குச் செல்ல தாமதமானாலும் சரி தன் வேலைகள் முழுவதையும் அன்றே முடித்துவிட்டுச் செல்வதில் தான் குறியாயிருப்பாள்.

அனுப்ப வேண்டிய ஈமெயில்கள். பேங்க் மூலம் சத்தியேந்திரனுக்கு வந்திருக்கும் அறிவிப்புகள் என எவ்வளவு நேரமானாலும் எல்லாவற்றையும் சோம்பல் படாமல் சேகரித்து பட்டியலிடுவாள்.

தயார் செய்ததும் அவன் மேஜையில் கொண்டு போய் வைப்பாள். அவனும் அதற்காகவே காத்திருந்தவன் போல் விறுவிறுவென.... பைல் குறிப்புகளைப் பார்த்து ஓ.கே. செய்வான். சிலவற்றுக்கு அடிக் கோடிட்டு பக்கத்டதிலேயே விளக்கம் எழுதி வைப்பான்.

ஆக அன்றைய வேலைக்ள முடிந்து கிளம்ப இருவருக்கும் இரவு முழு மணியைத் தொட்டு விடும். நேரமாகி விட்டதால் அவனே தன் காரில் அவளை வீடுவரைக்கும் வந்து விட்டுச் செல்வான். சில சமயம் பசிக்கிறது. சின்னதாய் ஒரு டிபனை வாயில் போட்டுக் கொள்வோம் என ஏதாவது ஒரு ஹோட்டலில் நிறுத்துவான்.

அவளும் மறுப்பேதும் சொல்லாமல் உடன் செல்வாள். அலுவலகத்திலும் சரி வெளியிலும் சரி அவர்களின் பேச்சு அறக்கட்டளை சேவையை ஒட்டியே இருக்கும்.

அவனிடம் சொல்வதற்காகவே வாணி முந்தைய இரவுகளில் நன்கு சிந்தித்து புதுப்பது சேவை ஐடியாக்களை மனதில் ஊறப் போட்டுக் கொண்டு வந்து சொல்வாள்.

பெரும்பாலும் வாணி சொல்ல வரும் விஷயம் நூற்றுக்கு தொண்ணூறு சதவீதம் சரியாக இருப்பதை உணரும் சத்யேந்திரன் அதை அப்படியே



உடனடியாய் அமுல் படுத்தவும் செய்வான்.

அப்படி வாணியின் ஐடியாப்படி புதியதாய் கார் மெண்ட்ஸ் யூனிட் ஒன்றைத் தொடங்கினான் சத்யேந்திரன்.

முழுக்டக முழுக்க ரெடிமேட் மற்றும் நவீன ரக துணிமணிகளை உற்பத்டதி செய்து அதை வெளிநாட்டு ஏற்றுமதிடி செய்யும் நிறுவனமாய் அதை உருவாக்கினான். அந்த கார்மெண்ட் யூனிட் முழுவதும் வாணியின் யோசனைப்படி உடல் ஊனமுற்றோர்களை கொண்டே இயங்கும்படி ஏற்பாடுகளைச் செய்தான்.

இதனால் கை கால் இழந்தவர்கள், பேசும் திறன் இழந்தவர்கள், பார்வை இழந்தவர்கள் என வாழ்க்கையின் கஷ்டச் சூழலில் செய்வதறியாமல் தவித்த அத்டதனை பேருக்கும் வேலை வாய்ப்பும் தங்களது சொந்தக்காலில் நின்று பிழைக்கும் தைரியத்தையும் கொடுத்தான்.

அவனது பொதுச் சேவையை அறிந்து லயன்ஸ் சங்கங்கள். மற்ற பொது அமைப்புகள் எல்லாம் மனதார பாராட்டின. சில முன்னணி பத்திரிகைகள் கூட தொழிலதிபராய் இருந்து கொண்டே பொதுத் தொண்டு ஆற்றும் அவனது உயர்ந்த பண்பை விவரித்து பாராட்டின.

ஆனால் சத்யேந்திரனோ எவ்வித புகழுக்கும் அடிமையாகாமல் சிரித்தபடியே அவளிடம் ஓடி வந்தான்.

எல்லாப் புகழும் உங்களுக்குத்தான் மேடம்..... என்று அவன் சொன்னபோது நம்பாமல் நகைக்கத்தான் செய்தாள் அவள்.

ஆனால் அவன் புள்ளி விவரமாய் அவள் சொல்லிய விஷயங்களையும் அதை அவன் செயல்படுத்திடிய விஷயத்தையும் விவரித்தபோது அவன் நிஜமாகவே தன்னைப் பாராட்டுகிறான். என்பதை உணர்ந்து மெய்சிலிர்த்தாள் அவள்.

அவனும் அன்று ஒரே மகிழச்சியில் திக்கு முக்காடியவனாய்த்தான் இருந்தான். அடக்க முடியாமல் அவளிடம் வாய்விட்டும் கேட்டான்.

இன்று ரொம்பவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன். உனக்கு எதாவது பரிசு கொடுக்க வேண்டும் போல் தோணுகிறது. எதுவானாலும் கேள், வாங்கித் தருகிறேன்.... என்றான்.

அவள் அதற்கு பதில் பேசாமல் சிரித்தாள். தலைசாய்த்து அவனையே ரஸித்துப் பார்த்தாள்.

அவன் சீரிஸான பார்வையுடன் அவள் பக்கம் வந்தான்.

நீ கேட்காவிட்டால் என்ன....? நானே கொடுக்கிறேன். கொடுக்கட்டுமா? என்றவபடி அவளை நெருங்கினான்.

அவன் எதுவோ செய்யப்போகிறான் என்பது அவளுக்கு உரைத்தது. ஆயினும் விலகாமல் அப்படியே நின்றாள்.

சத்யேந்திரன் அவள் வெகு அருகாமையில் வந்தவன் ஒரு நிமிடம் நிதானித்து அவள் முகத்தைப் பார்த்தான்.

அவன் இவ்வளவு அருகே முட்டுவது போல் வந்து நின்று அசராமல் அப்படியே இருக்கிறாளே... இவளுக்கு இவ்வளவு தைரியமா?

ஆச்சரியப்பட்டு அவளையே உற்றுப் பார்த்தவன் அவளது மை தீட்டிய விழிகளில் வந்து நின்றான். நன்றாக விரித்து மலர்த்தியபடி அவனையே பார்த்தாள் அவள்.

அதில் எவ்வித பயமோ சஞ்சலமோ இல்லை. சொல்லப்போனால் அவன் செயள்யப் போவதை அனுமதிக்கும் செய்தியைச் சொல்வது போல்தான் இருந்தது.

அதற்குமேல் அவனும் தாமதிக்கவில்லை.

அப்படியே அவளை கரங்களால் அள்ளி, பூக்குவிலாய் நெஞ்சில் சாய்த்து இறுக கட்டியணைத்தான் அவன்.

திடிரென ஏற்பட்ட அணைப்பு ஸ்பரிசத்திடில் செய்வதறியாமல் திகைத்தாள் வாணி.





# 11



வாணி அதை கொஞ்சமும்ட எதிர்பார்க்கவில்லை. சத்யேந்திரன் உனக்கு ஒரு பரிசு கொடுக்கப் போகிறேன் என்று சொல்லிவிட்டு திடீரென கட்டியணைத்டதது அவளுக்கு அதிர்ச்சியைத்டதான் ஏற்படுத்தியது.

அந்த அதிர்ச்சியில் ஓரளவு திகைத்துப் போனாலும் அவளால் ஒன்றும் செய்ய முடியவில்லை. நினைப்பு விழித்திடிருந்தாலும் மூளை எதிலோ மயங்கிக் கிடந்தது. அந்த இதமான அணைப்பும் அவன் நெஞ்சில் சட்டென பொதிந்த ஸ்பரிசமும்ட மீளமுடியாத மயக்கத்தை அவளுள் ஏற்படுத்தியிருந்தது.

அவள் விடுபட நினைத்தாலும் விடுபட முடியாத அளவுக்கு சொக்கிப் போயிருந்த அவள் கண்களில் கிறக்கம் தொனித்தது. அதைக் கண்டு சத்யேந்திரனுக்கு மேலும் தைரியம் கொடுத்ததோ என்னவோ அப்படியே தனது முகத்தை அவள் முகம் அருகே கொண்டு போனான்.

அப்படியே தனது உதடுகளால் அவளது உதடுகளைத் தேட முயன்றபோதுதான் அவனது உஷ்ணமான மூச்சுக் காற்று பட்டு உணர்வுக்கு வந்தாள் அவள்.

ரொம்ப நாள் காதலி போல் அவனது அணைப்பை வாங்கிக் கொண்டு எந்தவித எதிர்ப்பும் காட்டாமல் துவண்டு கொண்டிருக்கும் தன் நிலை கண்டு உள்ளூர வெகுண்டுதான் போனாள்.

ஐயோ....! விடுங்கள்! என்றபடி தனது மலர்க்கரங்களால் அவனது பிடிகளை விலக்கி சுகமான அணைப்பிலிருந்து விடுபட சிரமமமாய்த்தான் இருந்தது. ஆனால் கட்டிக் கொண்டிருப்பது காதலன் இல்லையே.... முதலாளி ஆயிற்றே!

ஏதோ சந்தோஷ மிகுதியில் வெற்றிக்களிப்பில் இப்படி ஒரு வேடிக்கை செய்கிறானா? ஆனால் அவன் இப்படி உரிமையுடன் கொண்டாட மனைவியோ காதலியோ அல்லவே! மேலும் அவள் மட்டும் உணர்வுகளற்ற

மரப்பாச்சி பொம்மையா? அவளும் உணர்வுகள் உள்ளவள் தானே? திடீரென அந்நியன் ஒருவன் கட்டிப் பிடித்தால் அவளால் அதை எப்படி எடுத்துக்கொள்ள முடியும்?. எப்படி தாங்கிக்கொள்ள முடியும்?

நிமிர்ந்து விழிகளை உயர்த்திடி சத்யேந்திரனைப் பார்த்த போது ஆசையாய் அவன் அவளை பார்த்துக் கொண்டிருந்த விதம் அவளைத் தடுமாறச் செய்தது.

அந்த கணத்தில் அவளுள் கொண்டிருந்த எண்ண உணர்வுகள் அடைபட்டிருந்தது போல் வெளியே விலக முயற்சித்தன. அவளது நிலை இராமன் சீதையை அடை சிவனார் வில்லை உடைத்ததை ஒத்திடிருந்தது.

இராமாயணத்திடில் மிதிலா புரியில் ஜனக மகாராஜாவின் மகள் சீதையை மணமுடிக்க விஸ்வாமித்ரரின் ஆணைப்படி ராமன் விவாகப் போட்டியில் கலந்து கொள்கிறான் கணத்த எடை கொண்ட அந்த சிவனார் வில் ஒரு வண்டியில் எடுத்து வரப்படுகிறது. வில்லின் வண்ணத்தைப் பார்த்து கூட்டம் முழுவதும் திகைக்கிறது. அரச குமாரர்களும் நம்மால் முடியுமோ என திகைக்கின்றனர்.

ஆனால் கிருஷ்ண அவதாரமான ராமனோ புன்னகையுடன் வில் வைக்கப்பட்டிருந்த இடத்டதிடிற்?கு கம்பீரமாய் நடந்து செல்கிறான்.

அந்த விசேஷமடான தெய்வீக வில்லை லாவகமாக பற்றியெடுத்தான். நாண் ஏற்றிக் கொண்டுவில்லின் ஒரு நுனியை இருகரங்களிலும் பற்றி அமுக்கினான். வெடி வெடித்தாற்போல் சட்டென வில் முறிந்து உடைந்தது.

அதுபோல்தான் வாணியின் நிலை அவள் மனதில் இதுவரை அடக்கி இறுமாப்பாய் கொண்டிருந்த உணர்வுகளின் வில் ஒன்று சடாரென உடைந்தது. மென்மையான இதழ்களை இதயத்தில் ஒற்றியெடுத்தாற்போல் இனிமையான வலி ஒன்று மின்சாரமாய் ஓடியது.

வாணி என்றுமே இதைப் பற்றியோ இது போன்ற சூழ்நிலைகளையோ நினைத்துப் பார்த்தது இல்லை. சக தோழிகள் பாய் பிராண்ட் அது இது என பேசும்போது கூட, நாகரிகம் என்ற பெயரில் கூத்தடிக்கும் இந்தக் கன்றாவியெல்லாம் எனக்கு வேணஓ;டாம்... என ஒதுங்கிக் கொள்வாள்.



அவ்வப்போது வழிந்தபடி தன்னிடம் எல்லை மீறிப் பார்க்கும் ஆண்களையும் தனது சுட்டெரிடிக்கும் பார்வையாலே தடுத்து விலகச் செய்து விடுவாள். நிறையள முறை தோழிகளுடன் வரும் ஆண் நண்பர்களும் அவள் காதுபடவே! அது சரியான விளக்கெண்ணெய். வாங்கிக் கட்டிக்கொள்ளாதே.... என கிசுகிசுப்பதைப் பார்த்திருக்கிறாள்.

அதனாலே பஸ் ஸ்டாப்பிலும் சரி பொது இடங்களிலும் சரி தன்னை முறைத்து உரித்துப் பார்க்கும் சில ஆண்களின் வினோதப் பார்வைகளை அவள் கண்டு கொள்வதே கிடையாது. சொல்லப் போனால் தோழிகள் வியந்டது, நல்ல ஹாண்ட்சம் பர்சனாலிட்டிடி.... என வர்ணிக்கும் ஆண்கள்கூட அவளைக் கவர்ந்தது இல்லை. ஒரு முறைக்கு மறுமுறை நிமிர்ந்து பார்க்க வைத்ததில்லை.

எல்லாவற்றுக்கும் மேலான காரணமாய் சிறுவயதில் இருந்து அவள் அனுபவித்த இன்னல்கள், தாய் தந்தையரை பறிகொடுத்டது ஆதரவில்லாமல் வளர்ந்த சூழ்நிலை, யாருக்கும் சிரமம் கொடுக்காது தன்ட காலில் நிற்கும் நிலையை அடைய வேண்டும் என ஒரு வெறியோடு படித்தது. அதே வேகத்தில் வேலையைத் தேடிக் கொண்டது எல்லாம் அவளுக்கு இது போன்ற விஷயங்களைப் பற்றி சிந்திக்க விடாமல் மரத்துப் போகச் செய்திடிருந்தது.

ஆனால் அந்த மரத்துப் போன நினைவுகளை ஒரு இனிமையான அணைப்பின் மூலம் சத்யேந்திரன் தட்டி எழுப்பினான் என்றுதான் சொல்ல வேண்டும்.

முதன்முறையாய் ஏற்பட்ட அந்த ஸ்பரிசம் ஒரு ஆண்மகனின் நெருக்கம் அவளுள் நிறைய எண்ணக்கீற்றுகளை கிளப்பியிருந்தது. தனக்கேற்ற துணை இவன்தானா? தனக்காக காத்திருக்கும் ராஜகுமாரன் இவன் தானா? என குபீர் சந்தோஷங்களை ஏற்படுத்டதினாலும் எல்லாவற்றையும் அடக்கிக் கொண்டாள்.

மேலும் என்னதான் இருந்தாலும் தனது அனுமதியில்லாமல் அவன் இதைச் செய்வது தவறுதானே? அத்துமீறிய செயல்தானே? எதற்காக அணைத்தான். எந்த உரிமையில் அவளை அணைத்டதான்? எனத்டதான் கோபமாய் நினைத்து பார்வையால் அவனைச் சுட்டெரிடிக்கத்தான்

நினைத்தாள்.

ஆனால் விழிகளை விரித்து அவனைப் பார்க்டக முடிந்ததே தவிர பார்வையில் அனல் பறக்கவில்லையே? கன்னக் குழி சிரிப்புடன் குறும்புப் பார்வை பார்த்த அவனை தன்னை மறந்து ரஸிக்கத்தானே செய்தாள்.

ஆயினும் அவளையறியாமல் ஏற்பட்ட ஒரு தற்காப்பு உணர்வு அவளை அவனது பிடியிலிருந்து முழுமையாய் விடுவித்து விலகச் செய்தது. ஒரு கணம் என்ன செய்து விட்டீர்கள்? உங்கள் பணியாளிடம் இப்படி முறை தவறி நடந்து கொள்ளலாமால? கட்டிப் பிடிப்பது எந்நத விதத்தில் நியாயம்? என்றெல்லாம் கோபக் கணைகளை வீச வேண்டியவள் பேசா மடந்தையாய்த்டதான் நின்று கொண்டிருந்தாள். இந்த சூடு சொரணை எல்லாம் அவளிடம் கொஞ்சமாவது இருக்கிறதா? இல்லை அறவேபோயிற்றா?

அவள் தவிப்பாய் தன்னையே நொந்து கொண்டு யோசிக்க அவன் சத்யேந்திரனோ தனது செய்கைக்காக கொஞ்சமும் வருந்தாமல் விலகியவளின் கைப்பிடித்து இழுத்து மறுபடியும் தனது கரங்களில் சிறைப்படுத்தினான்.

ஐயோ.... வாணி, உனக்கு என்னவாயிற்று... அவன் பாட்டுக்கு காதலி போல் உன் உடம்பை பந்தாடிக்கொண்டிருக்கிறான். நீ என்னடாவென்றால் பல்லை மஇளித்து தலை சாய்ந்து போஸ் கொடுத்துக் கொண்டு.... உனக்கு மூளை மழுங்கிவிட்டதா? என அவள் உள்ளுக்குள் ஒரு குரல் கத்தி கூவத்தான் செய்தது.

ஆனால் அந்தக் குரல் அவள் காதுகளை எட்டினால் தானே?

அவள் பாட்டிக்கு பிரமை துடித்தாற்போல்தான் நின்று கொண்டிருந்தாள். சத்யேந்திரன் அவள் நிலைமையை நன்கு புரிந்திருக்க வேண்டும்.

மீண்டும் அவள் பக்கத்தில் வந்து அவள் தோள்களைப் பிடித்து ஒரு உலுக்கு உலுக்கினாள்.

பதறி நினைவுக்கு வந்து புன்னகையுடன் நிமிர்ந்தவளைப் பார்த்து, இவ்வளவு வெகுளியா நீ? என்ற போது அவளுக்கு அவன் சொல்வது சுத்டதமாய்ப் புரியவில்லை.



அவளுக்கப் புரியாதது கண்டு அவனே விளக்கம் கொடுத்தான். தொட்டாச் சுருங்கி.... என ஒரு இலையைப் பற்றி சொல்வார்கள். ஆனால் நீ என்னடாவென்றால் தொட்டால் சிலிர்த்து பூவிதழாய் மலர்கிறாய்... மேலும் நான் கொடுத்து வைத்தவன்..... என்னைத்தான் முதல் முதலாய் உன்னைத் தொட அனுமதித்திடிருக்கிறாய் என நினைக்கிறேன். உன் அனுமதிக்கு நன்றி! என்று உரைத்தவன் அதே சிரிப்புடன் அவளை அப்படியே விட்டு விட்டு அகன்று போனான்.

அவன் அப்படிச் சொன் போதும் சிலிர்ப்பு விலகாத கற்சிலையாய்த்தான் நின்று கொண்டிருந்தாள் அவள்.



## 12



மறுநாள் தான் அந்த அதிசயமும் நடந்தது. சத்யேந்திரனும் சரி வாணியும் சரி அப்படி ஒரு அணைப்பு விஷயம் நடந்ததாய் கொஞ்சமும் காட்டிக் கொள்ளவில்லை.

அவர்கள் பாட்டுக்கு வந்தார்கள். அலுவல் விஷயங்களைப் பேசினார்கள். எதுவுமே நடவாதது போல் வேலை பார்த்தார்கள்.

சத்யேந்டதிரனைவிட வாணி இப்படி நடமாடியது அவளுக்கே ஆச்சரியத்தைக் கொடுத்தது. எவ்வளவு பெரிய விஷயத்தை. குற்றத்தை செய்திருக்கிறான்?

அவள் அனுமதியில்லாமல் அவளைப் பிடித்து இறுக்க அணைத்திருக்கிறான். இந்தத் தவறுக்கு அவனைக் கண்டிக்காமல் அட்லீஸ்ட் இனி இப்படி கண்டிப்பாய் நடக்கக் கூடாது என்ற ஓர் எச்சரிக்கை கூட செய்யாமல் அவள் பாட்டுக்கு நடமாடிக் கொண்டிருக்கிறாளே!

இதற்கு என்ன அர்த்தம்? இந்த பாசாங்கிற்கு என்ன தான் முடிவு? ஒரு வேளை உள்ளூர அப்படி ஒரு அனுபவம இன்டனொரு முறை ஏற்படாதா என எதிர்பார்க்கிறாளா?

அவள் அசட்டுத்தனமாய் இப்படியே நினைத்து தன்னைத்தானே கேள்விகள் கேட்டுக் கொண்டிருக்க.... மூன்றாம் நாள் மதிய இடைவேளையில் சத்யேந்டதிரனே அவளை கூப்பிட்டு தன் எதிரே உட்கார வைத்து விட்டு அந்தப் பேச்சை ஆரம்பித்து விட்டான்.

வாணி.... அன்று நடந்ததைப் பற்றி என்ன நினைக்கிறாய்? என்றான் சாதாரண குரலில்.

எது....? எதைப்பற்றி கேட்கிறீர்கள்?

புரிந்தாலும் புரியாதது போல் கேட்டாள் வாணி.

அட.... அதற்குள் மறந்து விட்டாயா? மறக்கக் கூடிய விஷயமா அது...? அதான் உன்னை திடீரென கட்டிப் பிடித்து அணைத்தேனே.... நீயும் அனுமதித்தாயே....?

அவன் சொல்லச் சொல்ல அவள் முககம் சிவந்து போனாள். கட்டிப் பிடித்து அணைத்ததோடு மட்டும் நிறுத்தாமல் நீயும் அனுமதித்தாயே என்று சொல்லிவிட்டானே... கெட்டிக் காரத்தனமாய் கண்டு பிடித்துவிட்டானே!

இப்போது முகத்தை எங்கு எப்படி கொண்டு போய் வைப்பது?

தவிப்புடன் அவள் பேசாமல் இருக்க அவனே அவளது சங்கடத்தை விலக்குபவனாய் தொடர்ந்து பேசினான்.

வாணி உனக்கு ஒரு கதை தெரியுமா? மகாபாரதத்தில் அசரீரி ஒன்று தடாகத்து குளத்தில் நீர் குடிக்கப் போன தருமபுத்திடிரனிடம் கேள்விகளால் கேட்கும்.

அப்படியா? என்றாள் அவள் எவ்வித உணர்வுமில்லாமல். ஆம்... அதில் முக்கியமான ஒரு கேள்வி வரும் காற்றை விட வேகமாய் செல்லக் கூடியது எது? என அசரீரி கேட்கும். அதற்கு தருமபுத்திரனின் பதில் என்ன தெரியுமா?

என்ன...? நீங்களே.... சொல்லுங்கள்...! என்றாள்.

இதயம்.... என்றான் அவன்.



என்ன இதயமா?

அவள் புதிராய் கேட்க அவன் சுவாராஸ்யமானான். ஆமாம்.... அதுதான் வேகவேகமாய் சுழன்று அடிக்கும். பூப்பந்தாய் உள்ளூர உணர்ச்சிகளில் தவிக்கும் அந்த விஷயமெல்லாம் அன்று நான் உன்னை அப்படி அணைக்ககும் போது உனக்குப் புரிந்திருக்குமே? புரியாதது போல் கேட்கிறாய்?

அவன் சுற்றி வளைத்து எதற்கு வருகிறான் என்று அவளுக்குப் புரிந்தது.

அவள் வேகமாய் தலையாட்டினாள்.

அப்படியெல்லாம்..... ஒன்றுமில்லை.... என்றாள்.

இம்முறை அவன் அதிசயதான்.

என்ன ஒன்றுமே ஏற்படவில்லையா...? கண்கள் சொக்கி இமைகளெல்லாம் கிறங்கிப் போய்...? ம்....ம்..... அப்படி..... இல்லை....?

இல்லை.... இல்லவே... இல்லை... என்றாள் அவள்.

அவன் நிதானமாய் அவளைப் பார்த்து குனிந்து கண்களை தவிக்க விட்டுக் கொண்டிருந்தவளைக் கூப்பிட்டான்.

வாணி.....

ம்.... ம்......

எங்கே.... என்னை நிமிர்ந்து பார்.... அதுவும் நேருக்கு நேராய்... என் கண்களைப் பார்....

அவன் சொல்ல.... இது... என்ன புதிதாய் கூத்து? என நினைத்தவள், அதே வேகத்தில் இதிடில் பயப்பட என்ன இருக்கிறது? என நேராய் நிமிரவும் செய்தாள்.

அவள் படபடக்கும் மைவிழிக் கண்களை ஆழமாய் பார்த்தவாறு அவன் கேட்டான்.

என்னைப் பிடித்திருக்கிறதா?

திடீரென இப்படியொரு கேள்வியைக் கேட்டதும் அவளுக்கு தூக்கிவாரித்தான் போட்டது.

அவனையே உற்றுப் பார்த்தாள். பரந்த நெற்றியில் அழகாய் புரளும் சுருள் முடியும். வசீகரச் சிரிப்பும் திடகாத்திரமான ஆணின் உருவமாய் இருக்கும் அவனைப் பிடிக்கவில்லை என்று சொல்ல முடியுமா?

சொல்.... வாணி.... என்னை பிடித்திருக்கிறதா? என்றான் மறுபடியும்.

ஆனால் வாணி சமாளித்தாள்.

சார்.... சில விஷயங்களில்.... நாம் பிடித்திருக்கிறதா பிடிக்கவில்லையா என்று கூட தீர்மானிக்க முடியாது ஏன்... தெரியுமா?

ஏன்... நீயே... சொல்லு...?

வேறு என்ன? ஒரு முதலாளியிடம் ஊழியராய் வேலைக்குச் சேர்க்கிறோம். அவர் ஓர் குரங்காய் இருந்தால் கூட பணியாள் பணிந்து அவர் சொல்படி நடக் வேண்டியதுதான். வேறு எதையும் பார்க்க் கூடாது....!

அட.... டே..... என்னை குரங்கென்று சொல்கிறாயா? என்றான் அவன் லேசான கோபத்துடன்.

ஐயையோ...! எனப் பதறியவள், அப்படியில்லை சார்... ஒரு உதாரணத்துக்கு அப்படிச் சொன்னேன். அதாவது முதலாளியின் அழகையோ குணத்தையோ மதிப்பீடு செய்யுமளவுக்கு வேலை பார்க்கும் பணியாளுக்கு கிடையாது என்பதுதான் நான் சொன்னதின் முழு அர்த்தம்.....

அவன் தலையைச் சிலுப்பினான்.

அது போகட்டும்.... இப்போது மதிப்பீடு செய். நான் எப்படி...? அழகா...? அழகு... என்றால் உனக்கு பிடிக்கு மளவுக்கு அழகா...? சொல்.... பார்க்கலாம்.....



அவன் ஆணையிடுவது போல் கேட்டு அவள் முகத்தையே பார்க்க அவளுக்கு சங்கடமாய் போயிற்று. இனியும் இவனிடம் சமாளிக்க முடியாதே!

ஸார்.... நீங்கள் அழகுதான்... என்றாள் அவசரமாய்...

அழகு... என்றால் எப்படி...? விடாது இழுத்தான் அவன்.

பெண்ககளை கவரக்கூடி அளவுக்கு உங்களிடம் அழகு இருக்கிறது. போதும்தானே?

மற்ற பெண்களை விடு.... உனக்கு.... உனக்கு... என்னை பிடித்திருக்கிறதா நான் உன்னை கவர்ந்திருக்கிறேனா?

மறுபடியும் நேரடியாய் அவன் துளைத்தபோது அவளுக்கு தப்பிக்க வழியில்லாமல் போயிற்று இனியும் எதற்கு மறைக்க வேண்டும்? என நினைத்தவள், கனிவான இனிமைக்குரலில் உங்களை எனக்கு ரொம்பவும் பிடித்திருக்கிறது.... என்றான்.

அப்படி வா! இதுதான் எனக்கு வேண்டும்... என்ற படி அவன் டக்கென அவள் கைகளைப் பிடித்து தன் கரங்களோடு சிறைப்பிடித்தான்.

ஐயோ... என்ன இது? என்றபடி சிலிர்த்து கைகளை இழுத்து விடுவிக்க முயன்றாள்.

அவன் விடுகிற மாதிரி இல்லை.

இப்போது இன்னொன்றையும் நீ அறிந்து கொள். அறிந்து கொள்கிறாயா? என்றான்.

என்ன? என்றாள் புரியாதவளாய் அவனைப் பார்த்து விழித்தவாறு.

அவன் மேலும் குனிந்து அவள் முகத்திற்கு வெகு அருகே வந்தான்.

என்னை மதிப்பீடு செய்து... பிடித்திருக்கிறது என்றாய் அல்லவா... அது போல் உன்னையும் மதிப்பீடு செய்யப் போகிறேன்.... செய்யட்டுமா?

அவன் சொல்ல அவளுள் படபடப்பு கூடியது.

அவன் நிஜமாகவே அவளை உற்றுப் பார்த்து வரிசைப் படுத்த ஆரம்பித்து விட்டான்.

இந்த நீளமான கூந்தல் அழகுமை விழி படபடக்கும் விழியழகு. வில்லான புருவங்கள் மேலும் மேலும் நீ உயர்த்திப் பார்க்கும் ஆளை வீழ்த்தும் பார்வை... அந்த வரிசையான முத்துப் பல் புன்னகை, அது... என்ன.... அந்த கன்னம் ஓர முடிக்கற்றை ஒன்றை ஸ்டைலாய் அடிக்கடி பின்னுக்கு தள்ளி விடுகிறாயே..... அதுகூட அழகுதான்...! உண்மையாய் இன்னொன்றையும் சொல்லட்டுமா? இந்த உலக மகா ரதி என்றும் ஓர் வார்த்தை வர்ணிப்பு உண்டே..... அது வேறு யாருக்குப் பொருந்துகிறதா இல்லையோ... உனக்கு கண்டிப்பாய் பொருநந்தும்... அதனால் எனது மதிப்பீட்டில் உனக்கு நூறு பர்ஸண்ட் மார்க்.... வாணி உலக மகாரதி என்ற பட்டமும் கொடுக்கப்படுகிறது.....

அவன் பெரும் அறிவிப்பு போல் எல்லாவற்றையும் சொல்லி முடித்தான். அவளுக்கு அப்படியே அலாக்காய் தூக்கி யாரோ தட்டாமாலை சுற்றி இன்பக் கடலில் விட்டது போலிருந்தது. அந்த இனிமையான கிறுகிறுப்பில் இருந்து லேசில் அவளால் வெளிவரமுடியவில்லை. கண்கள் மூடி சொக்கிப் போனவளாய் ஓரிரு நிமிடம் அசையாது அப்படியே நின்றாள். மனதுள் சந்தோஷப் பட்டாப் பூச்சிகள் சிறகடித்து அவளை கிறக்கமான மோன நிலைக்கு கொண்டு போக.... அவன் படபடவென அவள் முகம் முன் விரல்களால் சொடுக்கிட்டான்.

ஹலோ.... ஹலோ... பாதிதானே வர்ணிப்பு செய்திருக்கிறேன்.... இதற்கே இப்படியா? என்றபோது கன்னக்கதுப்புகள் சிவந்து போக நாணமாய் குனிந்தாள் அவள்.

அவன் அப்படி குங்குமமாய் சிவந்த அவளது முகத்தை நிமிர்த்தி, படபடத்த அவனது மை விழிகளையே உற்று நோக்கியபடி பேசினான்.

இவ்வளவு மார்க் கொடுத்து, நிஜத்தைச் சொல்லி உன்னை பூரிக்க வைத்திருக்கிறேனே? எனக்கு பரிசொன்றும் கிடையாதா?

பரிசா...?



அவள் மறுபடியும் புரியாமல் விழிக்கப் போக அவனோ, இதற்கெல்லாம் உன்னிடம் கேட்டுக் கொண்டிருக்கக் கூடாது... டக்கென்று கொடுத்து விட வேண்டும்..... என்றபடி மறுபடியும் அவளை வாரியிழுத்து இறுக அணைத்தான் அவன்.



## 13



மறுநாள் மதிய உணவை அவளோடு சேர்ந்து அருந்தியவன், உணவு முடிந்து கிளம்புகையில், வாணி ஒரு முக்கியமான விஷயம் சொல்ல மறந்து விட்டேன்... எனவும், என்ன? என்பது போல் புரியாமல் பார்த்தாள் வாணி.

அம்மா உன்னைப் பார்க்க வேண்டும் என்று சொன்னார்கள். அலுவலகம் முடிந்ததும் நீயே வீட்டிற்குப் போய் அவர்களை பார்த்து விட்டுப்போ. எனக்கு சில வேலைகள் இருக்கிறது. நீ நம்ம கம்பெனிக் காரிலே சென்றுவிடு...

படபடவென சாதாரணமாய் சொல்லிவிட்டு அவன் அகலப் போக அவள் திடுக்கிட்டுப் போனாள்.

எ.... என்ன.... என்ன.... சொல்கிறீர்கள்? நானா.... என்னையா? என்னை அம்மா பார்க்க வேண்டும் என்று சொன்னார்களா?

ஆ... ஆமாம்....

அழுத்தந்திருத்தமாய் அவன் சொல்ல மறுபடியும் திகைத்துக்கேட்டாள்.

எதற்காக சார்?

தெரியவில்லை.... நீயே போய்ப் பார்....

மீண்டும் சர்வ சாதாரணமாய் சொல்லிவிட்டு அவன் சென்று விட்டான்.

ஒன்றும் தோன்றாமல் ஒருவித குழப்பத்துடன் அன்று மாலை சத்யேந்திரனின் தாயை சந்திக்க கிளம்பினாள், அவள்.

அங்கு அவளுக்கு ஒரு பெரும் அதிர்ச்சி காத்துக் கொண்டிருந்தது.

********

வேலை முடிந்ததும் சத்யேந்திரனின் பங்களாவிற்கு கிளம்பினாள் வாணி. சத்யேந்திரன் வேலை இருப்பதாய் கூறி அவளுக்கு முன்னரே கன்ஸ்ட்ரக்ஷன் ஸ்பாட் ஒன்றிற்கு கிளம்பிச் சென்று விட்டான்.

அலுவலக காரில் அவன் வீடு நோக்கி பயணிக்கும் போதும், எதற்காக நம்மை வரச் சொல்லியிருக்கிறார்கள்? அதுவும் சத்யேந்திரன் இல்லாமல் தான் மட்டும் போய் பார்ப்பதற்கு என்ன இருக்கிறது? என்ற கேள்வியே அவளைக் குடைந்தது.

அதே எண்ணத்திலே இறங்கி, பங்களாவின் பெரிய கேட் கதவுகள் வழியாய் உள்ளே சென்றாள்.

உள்ளே முன் ஹாலில் பக்திப் பாடல்கள் ஒலித்துக் கொண்டிருக்க சோபாவில் பூரணி அம்மாள் உட்கார்ந்திருப்பது தெரிந்தது. வாணி வருவதை தற்செயலாய் திரும்பியபோது அவளும் கவனித்து விட்டாள்.

புன்னகையுடன் எழுந்து, வாம்மா.... உன்னை வரச் சொல்லியிருந்தேனே... என்ற போது பதிலுக்கு கைகூப்பி பெரும் நமஸ்கரிப்பு செய்தாள் வாணி.

பூரணி அம்மாள் அவளை அமரச்செய்து அவள் மறுத்தும் காபி, டிபன் அயிட்டங்களை எல்லாம் கொடுத்து உபசரித்தாள். அவளது குடும்பம் பற்றி, அறக்கட்டளை சேவைகளில் அவள் காட்டும் ஆர்வம் பற்றியெல்லாம் அக்கறையாய் விசாரித்தாள்.

வாணியும் உற்சாகமாய்த்தான் பதில் சொல்லிக் கொண்டிருந்தாள். ஆனால் அவள் மூளையின் பகுதியில், இந்த விசாரிப்பெல்லாம் எதற்காக? என்ற கேள்வியே ஓடிக் கொண்டிருந்தது.



கொஞ்ச நேரம் பேசி முடித்து விட்டு பூரணி அம்மாள் அவளை வீட்டைச் சுற்றி காண்பிப்பதற்காக அழைத்துச் சென்றாள். பின்புற பெரிய தோட்டத்துப் பகுதியில் அனைத்து வகை மரங்களும் இருந்தன. தான் பயிரிடும் விதவிதமான காய்கறிச் செடிகள் பற்றி தோட்டக் கலையில் தனக்குள்ள ஆர்வம் பற்றியெல்லாம் விளக்கினாள் பூரணி அம்மாள்.

எல்லாவற்றையும் ஆர்வமாய்த்தான் கேட்டுக் கொண்டிருந்தாள் வாணி. கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் இப்படி சுத்திப் பார்த்தலிலும் பேச்சிலும் முடிந்து வி, நேரமாகுவதை உணர்ந்து வாணி, சரி நான் கிளம்புகிறேன் அம்மா.... என்று கூறியபோதுதான் பூரணி அம்மாளுக்கு ஞாபகம் வந்தது. இரு.... இரு... நான் உன்னை வரச் சொன்ன விஷயத்தையே மறந்து விட்டேன். என்றபடி அவசரமாய் எழுந்து உள்ளே போனாள். திரும்பி வரும்போது அவள் கையில் புத்தம் புது காஞ்சிபுர பட்டுப் புடவை.

கிளிப்பச்சை நிறத்தில் மஞ்சள் ஜரிகை பார்டருடன் அழகாய் இருந்த புடவையை வாணியிடம் நீட்டினாள்.

இது.... உனக்குத்தான்.... வாங்கிக் கொள்... என்ற போது வாணி புரியாமல் தான் விழித்தாள்.

எனக்கா..? எனக்கு எதற்கும்மா...?

நம்ம முடியாமல் கேட்டவளின் கைகளைப் பிடித்து அழுத்தினாள் பூரணி அம்மாள். வாணி, அன்றே இதை உனக்குப் பரிசாய் கொடுக்க வேண்டும் என்று நினைத்தேன். அன்று கொடுக்க மறந்து விட்டதால்தான் சத்யேந்திரனிடம் சொல்லி உன்னை வரச் சொன்னேன்... வாங்கிகொள்....!

பூரணி அம்மாள் வற்புறுத்த புடவையை வாங்கிக்கொண்டு நன்றி சொன்னாள் வாணி. கூடவே நம்மைவரச் சொல்லிய காரணம் இதற்குத்தானா? என சலிப்பான நிம்மதி பெருமூச்சும் வெளியிட்டாள்.

ஆனால் அவள் கிளம்பிப் போகையில்தான் பூரணி அம்மாள் அழைத்தது அதற்கு மட்டுமல்ல என்பது புரிந்தது.

வாணி நன்றி தெரிவிக்கும்படி எழுந்தவளை, இரும்மா.... இன்னொரு

விஷயமும் இருக்கிறது... என்று சோபாவில் பூரணி அம்மாள் உட்காரச் சொன்னபோது வாணிக்கு ஒன்றும் பிடிபடவில்லை.

எதையோ பூரணி அம்மாள் அவளிடம் கேட்க நினைத்து தயங்குவது போல் கூடத் தெரிந்தது.

அந்த தயக்கத்தை போக்க விரும்பியவளாய் வாணி அவளே, சொல்லுங்கம்மாள... என்ன விஷயம்? என்றாள் வாணி.

பூரணி அம்மாள் தயக்கம் நீங்கினாலும் வார்த்தைகளைக் கோர்ப்பதில் தடுமாறினாள்.

அது.... அது.... நீ.... நீ.... தப்பாக எடுத்துக்கொள்ளக் கூடாது.... வாணி.....

பூரணி... அம்மாள் பீடிகையுடன் இழுக்க அம்மாளின கையைப் பற்றிக் கொண்டாள் வாணி.

ஐயோ.... என்னிடம் தயக்கம் எதுவும் வேண்டாம். சும்மாச் சொல்லுங்கள் அம்மா... என்றாள். பூரணி அம்மாள்இப்போது நிமிர்ந்து வாணியை நேர் பார்வை பார்த்தாள்.

வாணி, நீ.... நம்.. சத்யேந்திரன் பற்றி என்ன... என்ன... நினைக்கிறாய்...? என்றாள்.

தயங்குவது போல் தயங்கி தெள்ளத் தெளிவாய் பூரணி அம்மாள் கேட்க அப்படியே திடுக்கிட்டுப் போனாள் வாணி. சத்யேந்திரனைப் பற்றி நம்மிடம் ஏன் கேட்க வேண்டும்? இதன் உள்ளர்த்தம் என்ன? என்றெல்லாம் அவள் குழப்பமாக, பூரணி அம்மாளோ அவள் பதிலை எதிர்பார்ப்பவளாய் அவளையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அம்மா.... அவர்.... அவர்.... சத்யேந்திரன்... என்... என்னுடைய பாஸ்..... மிகத் திடிறமையானவர்.... கடும் உழைப்பாளி... இதெல்லாம் உங்களுக்குத் தெரிந்தது தானேயம்மா?

அவளும் அதே திணறலுடன் வார்த்தைகளைக் கோர்த்து சொல்லி முடிக்க பூரணி அம்மாள் சிரித்தாள்.



அது... எனக்குத் தெரியும் வாணி. நான் கேட்க வந்தது அதுவல்ல....

வேறு என்ன அம்மா?

வாணி ஆவலாய் கேட்க பூரணி அம்மாளின் முகம் சற்றே மாறியது.

வாணி. அவனைப் பற்றி.... உன்னுடைய அபிப்பிராயம் என்ன....அதைச் சொல்....

பூரணி அம்மாள் எதற்கோ இப்படி கேட்க வருகிறார்களா...? என நினைப்பு வாணியினுள் ஓட அவளையறியாமல் ஒருவித படபடப்பும் தொற்றிக் கொண்டது.

ஆயினும் எல்லாவற்றையும் மறைத்துக் கொண்டவளாய் சாதாரணமாகவே பூரணி அம்மாளைப் பார்த்தாள்.

அவர்... மிக.... நல்லவர். எல்லாவற்றுக்கும் மேல் அவர் என் பாஸ்.... நான் அவரது செகரட்டரி...

ஒருவாறு சொல்லி சமாளித்து விட்டோம் என்று வாணி நினைக்க.... அவளது பதிலையே தனக்கு வாகாய் வைத்துக் கொண்டு அடுத்த கேள்வியை ஆரம்பித்தாள் பூரணி.

அவன் பாஸ்.... நீ.... செகரட்டரி. அவ்வளவுதானே... அவ்வளவுதானே? என்ற போதுதான் வாணிக்கு சுரீரென ஏதோ உரைத்தது. விஷயம் நாம் நினைத்தது போல் அல்ல.... என்பது புரிந்தது.

முதல் முறையாக சத்யேந்திரன் அவளை அழைத்துக் கொண்டு பூரணி அம்மாளுக்கு அறிமுகப்படுத்திய போது அவள் கைகளை விடாமல் கோர்த்டதிருந்தது அவளது நினைவில் ஓடியது.

அதனால்.... அப்படிப்பட்ட விஷயங்களில் ஏற்பட்ட சந்தேகங்களால்தான் பூரணி அம்மாள் இப்படியெல்லாம் கேட்கிறார்களா?

இந்த அம்மாளுக்கு சத்யேந்திரன் அவள் கைகளை கோர்த்தது மட்டும்தானே தெரியும்? அடிக்கடி காதலிபோல் அவளை அணைத்துக்

கொண்டிருக்கும் விஷயம் நல்லவேளை... தெரியாது போலும்... சத்யேந்திரன் இதையெல்லாம் போய் தன் தாயிடம் சொல்லிக் கொண்டிருப்பானா?

குறும்பாய் அவள் நினைத்துக் கொண்டிருக்க பூரணி அம்மா;ள அடுத்து கேட்ட கேள்வி அவளை நிஜமாக தூக்கிவாரிப் போட்டது.

அதாவது.... வாணி.... உங்களுக்கிடையே.... பாஸ்.... செகரட்டரி.... அவ்வளவுதானே....? வேறு எந்தப் பழக்கமும் இல்லையே...? என்றாள்.

இப்படி பொட்டிலடித்தாற்போல் பூரணி அம்மாள் கேட்ட கேள்வி கண்டு வாணி திணறித்தாள் போனாள். இதற்கு என்ன பதில் சொல்வாள்? என்னதான் பதில் சொல்லமுடியும்?

மேலும் இந்தக் கேள்விகள்தானே தினம் அவளை குடைந்து கொண்டிருக்கின்றன. இதற்கு விடைதெரியாமல். விடை காண முடியாமல்தானே தினம் திடினம் தவித்துக் கொண்டிருக்கிறாள்?

அவள் பேந்தப் பேந்த விழிக்க.... உன்னைத் தான் கேட்கிறேன் வாணி... என்றாள் பூரணி அம்மாள் பதிலுக்கு அவசரப்படுத்துபவளாய்.

வாணி பதில் சொல்லித்தான் ஆகவேண்டும் வேறு வழியில்லை.

ஆமா... அது... அது... அப்படித்டதான். வேறு எந்தப் பழக்கமும் கிடையாது

அத்தோடு பூரணி அம்மாள் விடவில்லை. மேலும் குடைந்தாள்.

அப்படியானால் வாணி, நீயும அவளை முதலாளியாய்த் தானே பார்க்கிறாய்? வேறு எந்த நினைப்பும் உனக்கு கிடையாதே?

பழத்தில் ஊசியேற்றுவது போல் நிதானமாய் பூரணை அம்மாள் கேட்க வாணிக்கு கொஞ்சம் கொஞ்சமாய் புரிந்து போயிற்று. செகரட்டரியாய் வந்து எங்கே தன்மகனை மயக்கிக் கொண்டு போய் விடுவாளோ என பூரணி அம்மாள் பயப்படுவது தெரிந்து போயிற்று.

இதற்கு என்ன பதில் சொல்ல...? என ஒரு கணம் தடுமாறி



சிந்தித்டதவள் மறுகணமே தயக்கம் நீங்கினாள்.

இல்லையம்மா... எனக்கு வேறு எந்த நினைப்பும் கிடையாது. நானும் அவரை முதலாளியாய்த்தான் பார்க்கிறேன்.... குரலை உயர்த்திடி அவள் சொல்ல நினைத்தாலும் அவளையறியாமல் குரல் கம்மியது. முகம் வெளிறியது.

ஆயினும் அவளிடமட் ஏதோ ஒரு தவிப்பு உள்ளூர எழுந்து கொண்டு இருக்க அதனாலே கேட்டாள். அம்மா, இதெல்லாம் எதற்காக நீங்க்ள கேட்கிறீர்கள் என்று தெரிந்து கொள்ளலாமா? என்றாள்.

இம்முறை பூரணி அம்மாள் பயம் நீங்கிச் சிரித்தாள்.

சொல்கிறேன் வாணி. நம் சத்யேந்திரன் தன் மனதில் வேறு யாரையும் நினைத்து காதல் கீதல் போன்ற விஷயங்களில் விழுந்து விடக் கூடாதே என்ற பயம்தான். மேலும் அவனை மணமுடிக்க அவன் மனைவியாக தயாராய் ஊர பெண் காத்துக் கொண்டிருக்கிறாள்... தெரியுமா? என்றாள்.

அப்படியா?.... யார்... அது அம்மா...?

உள்ளுக்குள் ஏதோ உடைந்து போய் விட்ட பல ஹீனக் குரலிலே வாணி கேட்க... பூரணி அம்மாள் தெளிவாய் உச்சரித்தாள்.

மஞ்சரி! அவனது முறைப் பெண் மஞ்சரி...! என்றாள்.



## 14



மஞ்சரி நுழைந்து வாணியைப் பார்த்ததுமே அவளது முகம் சுருங்கிப் போனது. தனது சதைப் பிடிப்பான உடம்பிற்கு முன் வாணியின் ஸ்லிம்மான உடல்வாகு, கவர்ந்திழுக்கும் அபார வசீகரம், இயற்கையாய் பளீரிடும் நவீனமான அழகு எல்லாமே உறுத்தியது.

அதனால் நுழைந்ததும் உற்றுப் பார்த்தவள் முதல் கேள்வியாய் கேட்டாள். எங்கள் சத்ய அத்தானை மயக்க ஒருத்தி வந்திருப்பதாய்

சொன்னார்களே.... அது நீதானா? என்றாள்

வாணிக்கு அவள் ஒருமையில் விளித்தது கூட பெரிதாய் தெரியவில்லை. அவள் கேட்ட கேள்வியின் அர்த்தம், நோக்கம் அவளுக்கு மிகுந்த எரிச்சலை கிளப்பியது.

ஆயினும் அடக்கிக் கொண்டாள். முதல் சந்திப்பிலே எடுத்த எடுப்பிலே சண்டையைத் தொடங்க வேண்டாம் என நினைத்தவள், நீங்கள் நினைப்பது போல் இல்லை. நான் அவருக்கு செகரட்டரி அவ்வளவு தான்...! என்றாள் அமைதியாக.

ஆனால்... உன் அலங்காரங்களைப் பார்த்தால் அப்படித் தோணவில்லையே... ஏதோ மயக்க வந்தது போல் அல்லவா தெரிகிறது...?

மறுபடியும் வாணியை உற்றுப் பார்த்தவாறு மஞ்சரி சொல்ல... வாணியே குனிந்து தன்னை ஒருமுறை பார்த்துக் கொண்டாள்.

பிரவுண் நிற வாயில் புடவை. காதுகளில் சிறு தொங்கட்டான்கள், கழுத்தில் பாசி மணிகள், கைகளில் வெண்மையான சங்கு ஃபேஷன் வளையல்கள்... இதுவா... அலங்காரம்...? ஆடம்பரம்? என்ன பெண் இவள்? என நினைத்தவள் இந்தக் கேள்விக்கெல்லாம் இவளுக்கு பதில் சொல்வதாவது.... என பேசாமல் இருந்து விட்டாள்.

ஆனால் மஞ்சரி அவளையே உற்று முறைப்பு பார்வை பார்த்துவிட்டு விறுவிறுவென சத்யேந்திரனின் ரூமை நோக்கி நடந்தாள்.

வாணியும் அப்போதுதான் அவளை முழுமையாய் பார்த்தாள். இருபது, இருபத்திரண்டு வயதுதான் மஞ்சரிக்கு இருக்கும். ஆனால் அவளது ஆளுமையை சதைப் பிடிப்பான உடம்பு பகுதிகள் அதிகப்படுத்தி வயது கடந்த தோற்றத்தை ஏற்படுத்தின. முகம் ஓரளவு சுமாராக இருந்தாலும் ஒரு வண்டி பேஸ்க்ரீம்களை தடவியது சாயம் அடித்தது போன்ற தோற்றத்தை ஏற்படுத்திடியிருக்க.... அந்த சாதாரண முகத்தை சாந்தமாக வைக்காமல் அடிக்கடி சிடுசிடுவென அவள் வைப்பதே. சரியான முசுறு போல... என சொல்ல வைத்தது.

இவளை சத்யேந்திரனுக்குப் பிடிக்காமல் போனதில் எவ்வித



ஆச்சரியமும் இல்லையெனத்தான் வாணி நினைத்தாள்.

சிடுசிடுத்தனம் போதாதென்று எரிந்து விழும் சுபாவமும் அவளுக்கு, வாணி அப்படியே நிற்பதைப் பார்த்து திரும்பியவள், உன்னைத்தான், என் பின்னால் வா.. என்றபடி சத்யேந்திரனின் கேபினுள் நுழைந்து கொண்டாள்.

மஞ்சரி உள்ளே ரூமினுள் நுழைந்து சத்யேந்திரன் அமரும் குஷன் இருக்கையில் கால் மேல் கால் போட்டு உரிமையுடன் அமர்ந்து கொண்டாள்.

அதைப் பார்த்ததும் வாணிக்கு, குரங்கு கையில் பூமாலை... பழமொழிதான் ஞாபகம் வந்தது. அதற்கேற்றாற் போல் கண்கள் பிதுங்கும் அளவுக்கு புருவங்களை உயர்த்தியவள் அடுத்த கேள்வியைக் கேட்டாள்.

சத்யேந்திரனுக்கு உன்னைப் பிடிக்குமா? என்றாள்.

வாணி பதில் தோணாது அவளையே உற்றுப் பார்த்தாள். இதற்கு என்ன பதில் சொல்வது?

யோசித்தவள் டக்கென அவளைப் போலவே பதிலடியை கொடுத்தாள்.

இதை நீங்கள் அவரிடம்தான் கேட்க வேண்டும்... என்றாள்.

ஏன் உனக்குத் தெரியாதா?

தெரியாது...

வேண்டுமென்றே வாணி மேலும் கீழும் தலையையாட்ட மஞ்சரியின் முகத்தில் எரிச்சல் பரவியது.

அது போகட்டும் உனக்கு... உனக்கு... எப்படி.... அவரைப் பிடிக்கும்?

வாணி அதற்கும் புத்திசாலித்தனமாய் அவளைப் பார்த்தாள்.

பிடிக்கும், முதலாளி என்ற முறையில் ரொம்பவும் பிடிக்கும்... என்றாள்.

அவர் முதலாளி. நீ வேலைப் பார்க்கும் பணிப்பெண். அதை மனதில் வைத்துக் கொண்டே நீ பழக வேண்டும். புரிகிறதா?

சரிம்மா.... என்றாள் வாணி வேண்டுமென்றே குரலில் பவ்யம் காட்டி.

அதுவும் மஞ்சரிக்கு எரிச்சல் தர அம்மா... என்று சொல்லாதே மேடம்.... என்று சொல்... என்றாள். அதற்கும் வாணி தலையசைத்தாள்.

மஞ்சரி குனிந்து மேஜை மேல் கிடந்த பைல்களை எல்லாம் எடுத்துப் புரட்ட ஆரம்பித்தாள். படித்துப் பார்த்த அவளுக்கு ஒன்றும் புரியவில்லை.

இதெல்லாம் என்ன கணக்கு? என்றாள்.

மேடம்... இது நம் அறக்கட்டளை சேவா சங்கம் மூலம் நாம் செய்துள்ள நல்ல விஷயங்கள் பற்றி விவரங்கள். இதில் இருக்கிறது....

அப்படியா..? என பைல்களை விறுவிறுவென புரட்டிப் பார்த்தவள். பைலின் கடைசியில் இருந்த கூட்டுத் தொகையைப் பார்த்தாள்.

பத்து லட்ச ரூபாய் எனக் கணக்கிடப்பட்டிருந்தது.

என்ன பத்து லட்ச ரூபாயா?

ஆமாம் மேடம் வழக்கமான செலவுகள் போக இம்முறை அனாதை அன்பு இல்லம் ஒன்று புதிதாய் உருவாக பண உதவி செய்திருக்கிறோம்.

அவள் சொன்னதில் திருப்தியடையாமல் மஞ்சரி கடுகடுத்தாள்.

இதை யார் செய்தது? எப்படி இதை அனுமதித்தார்கள்? பத்து லட்ச ரூபாயை நன்கொடையாய் யார் கொடுப்பார்கள்?

மஞ்சரி ஏதோ அவள் கைக்காசை எடுத்து வீணடித்தது போல் எகிறலாய் பேசினாலும் அவளிடம் அமைதியாகவே பேசினாள் வாணி.

மேடம், இதெல்லாம் எம்.டி.சத்யேந்திரன் அவர்கள் அனுமதித்து பணம் ஒதுக்கிய ப்ராஜெக்ட்கள்தான். நீங்கள் அவரிடம் தான் கேட்க



வேண்டும்....

ஓஹோ! அப்படியானால் அவரிடமே கேட்டுத் தொலைக்கிறேன்....

பட்டென.... பைலை எரிச்சலாய் மூடினாள் மஞ்சரி.

நாம் எதற்கு இவள் முன் நிற்க வேண்டும்? என எண்ணம் தோன்றியவளாய் வாணி நிமிர்ந்தவள், மேடம், எனக்கு வேலை இருக்கிறது. நான் செல்லலாமா? என்றாள்.

இரு... இரு... உன்னிடம் நிறைய கேள்விகள் கேட்க வேண்டும் பதில் சொல்...

வாணி கைகளைக் கட்டிக் கொண்டு அவளையே பார்க்க... மஞ்சரி திரும்பவும் படபடவென கேள்விகளை ஆரம்பித்தாள். அலுவலகம் பற்றி, அலவலகத்தில் அன்றாட வேலைகள் பற்றி, கம்பெனியின் வருமானம், வருட டர்ன் ஓவர் என ஒவ்வொன்றாய் கேட்க எல்லாவற்றையும் புள்ளி விவரங்களுடன் விளக்கி பதிலளித்தாள் வாணி.

மஞ்சரிக்கு. அப்படியும் திருப்தி வந்தபாடில்லை.

அவளை ஏதாவது கேள்விகள் கேட்டு குடைந்து நிக்குமுக்காடச் செய்ய வேண்டும் எதிலாவது வசமாய் மட்டம் தட்டம் வேண்டும் என்ற முனைப்புடனே இருந்தாள்.

வாணி எல்லாவற்றுக்கும் லாவகமாய் சிறிதும் கோபத்தைக் காட்டாமல் பேச அவளுக்கு அது முடியாமல் போயிற்று.

கடைசியில் என்ன நினைத்தாளோ. வாணியிடம் தன்னைப் பற்றி தானே பிதற்றிக் கொள்ள வேண்டும் என்ற முடிவுக்கு வந்து விட்டாள்.

வாணிணி... ணி.... என இழுத்து ஏதோ பாசமாய் கூப்பிடுவது போல் விளித்து விட்டு, நீ காதல் பற்றி என்ன நினைக்கிறாய்? என்றாள்.

இதென்ன வேதாளம் மரம் ஏறிய கதையாயள். இதைப் பற்றி இவள் ஏன் கேட்கிறாள் என நினைத்தவள். காதலா? அது பற்றியெல்லாம் எனக்கு ஒன்றும் தெியாது மேடம்... என்றாள் போலியாய் குரலைத் தாழ்த்தியபடி

உனக்குத் தெரியாது. இதுபற்றியெல்லாம் தெரிந்திருக்காது என்று எனக்குத் தெரியும். நான் கேட்டது வேறு...

வேறயா..? நீங்கள் சொல்வது புரியவில்லையே மேடம்....

வாணி கேட்க அவள் உதட்டை அழுந்தக் கடிப்பதும், கண்ணை உருட்டித் தலையை தாழ்த்துவதுமாய் இரண்டு மூன்று முறை கோணஷ்டை (அவள் அப்படி வெட்கப் படுகிறாளாம்!) செய்ய.... அட கண்றாவியே....! எனதலையலடிக்காத குறையாய் வாணி அவளைப் பார்த்தாள்.

அதாவது வாணி, காதல் என்றால் பொதுவான காதல் பற்றி அல்ல.... எனக்கும் சத்யேந்திரனுக்கும் உள்ள காதல் பற்றி கேட்கிறேன்.

அட... என்ன சொன்னாய்...? சத்யேந்திரா? அதற்குள் பெயரை முழுசாய் சொல்ல வாய் வழித்து சுருக்கி விட்டாயா..? என்ன... என்ன.... உங்களுக்குள் காதலா...? நல்ல கூத்துதான்...!

என உள்ளுக்குள் கேலியாய் நினைத்த வாணி எதையும் வெளிக்காட்டாதவளாய் அமைதியான குரலில், உங்கள் இருவருக்கும் காதலா...? சத்யேந்திரன் சார் இது பற்றி என்னிடம் ஒன்றும் சொன்னதில்லையே... என்று சொல்லியும் மஞ்சரி விட்டபாடில்லை.

உன்னிடம் சொல்லியிருக்க மாட்டார். ஆனால் யதேச்சையாய் அதுபற்றி ஏதாவது பேச்சுவாக்கில் சொன்னதாக உனக்கு ஞாபகமிருக்கிறதா? என்றாள்.

இல்லை... மேடம்... ஞாபகம் இல்லை... என்றாள் வாணி.

அப்படியானால்... எங்கள் காதல் பற்றி நான் சொல்கிறேன். முழுமையாக தெரிந்து கொள். நானும் சத்யேந்தரும் உறவினர் என்பதால் சிறுவயதில் இருந்தே எங்களுக்குள் ஓர் ஈர்ப்பு ஒருவித காதல் அரும்பிவிட்டது... என அவள் ஆரம்பிக்கவும், என்ன எல்.கே.ஜி. முதலே காதலா? என கிண்டலாய் தோணியதை அடக்கிக்கொண்டு, மேலே சொல்லுங்கள்... மேடம்... என்றாள். அதாவது... வாணி... காதல் என்றால் எங்களுக்குள் அப்படியொரு காதல்... இந்த சங்க இலக்கியங்களில் எல்லாம்



அற்புத சித்த மோதிரம் இலவசம்



N. SUBRAMANI THANTRIC
VENKATAPURAM, GUDIYATHAM (VELLORE) - 632 602.
PH : 04171 - 229015, CELL : 98653 71667

தலைவன் தலைவி என்வெல்லாம் படித்திருப்பாயே... அதுபோல எங்களது காதல் இலக்கியமான காவியக்காதல்! தலைவனைப் பிரிந்து தலைவி வருந்துவ்து போல் வேறிடத்தில் இருக்கும் அவரை எண்ணி நான் வருந்துவேன். அதுபோல் சத்யேந்தரும் தலைவியைப் பிரிந்து தலைவனாய் என்னை நினைத்து வருந்துவார். வேதனைப்படுவார். இப்படி எங்களது காதல் ஒருவரையொருவர் பார்க்காமல் நாங்க்ள படும் தவிப்பு என யாருக்கும் தெரியாமல் உள்ளுக்குள்ளே எங்களுடன் வளர்ந்தது. அதனாலே எனக்கும் சத்யேந்தர் அத்தானுக்கும் எப்போதும் பயங்கர அன்டர் ஸ்டாண்டிங்... ஏற்படுவது உண்டு...

அவள் சொல்லச் சொல்ல... இதையெல்லாம் கேட்டுத்ட தொலைக்க வேண்டியிருக்கிறதே? எங்காவது சிறு பஞ்சு கிடைக்குமா? காதுகளை அடைத்துவிடலாமே? என நிஜமாகவே சுற்றும் முற்றும் பார்த்தாள் வாணி.

அது முடியாமல் போகவே எப்படியாவது மஞ்சரியின் இந்த காதல் கதையளப்பை நிறுத்த நினைத்தவள் அவசரமாக, புரிகிறது மேடம். உங்கள் காதல் ரோமியோ, ஜூலியட், லைலா மஜ்னு போல் உயிருக்குயிரான காதல் அதைத்ததானே சொல்ல வருகிறீர்கள் என்றாள்.

அதையும் பதறிப் போனவளாய் மஞ்சரி தடுத்தாள். வேண்டாம்... வேண்டாம்... ரோமியோ ஜூலியட், லைலா மஜ்னுவுடன் எல்லாம் எங்கள் காதலை ஒப்பிடாதே.. அதெல்லாம் நிறைவேறாமல் போய் சோகத்தில் முடிந்த காதல்கள். எங்களது உயிர்த்துடிப்பான உயிருக்குயிரான காதல்...

அவள் பேசுவதை சகிக்க முடியாதவளாய்,அதாவது இருவரும் இணைந்து சந்தோஷத்தில் முடியப் போகிற காதல். அதுதானே? என வாணி வினவவும் அவள் கேலிக்குரலைக் கூட உணராமல் சீரியஸாய் தலையாட்டினாள் மஞ்சரி.

அதற்குப்பின் மஞ்சரி விடாமல் என் சத்யேந்தர் இந்த சேரில்தானே உட்காருவார்? இந்த டேபிளில் இப்படி கை வைத்துத்டதானே எழுதுவார்? என்றெல்லாம் அதை ஆசை வந்தவள் போல் தொட்டுப் பார்க்க... வாணிக்கு தலையிலடிக்காத குறையாய் எரிச்சல்தான் வந்தது.

இன்னும் கொஞ்ச நேரம் நின்றால் நமக்கு பைத்தியமே பிடித்துவிடும்



என்ற பயம் வந்தவளாய் அவசரம் காட்டினாள் வாணி. மேடம், நிறைய வேலைகள் பெண்டிங்கில் இருக்கின்றன. அவர்களைப் பார்க்காவிட்டால் எம்.டி.அவர்கள் கோபப்படுவார்கள். என்றபடி அவள் அறையை விட்டு அகலப் போனாள். பதிலுக்கு மஞ்சரி ஏதோ சொல்ல வருவதற்குள் டெலிபோன் மணி ஒலித்தது.

மஞ்சரி எடுத்தவள் சந்தோஷமாய் கூவ ஆரம்பித்து விட்டாள்.

ஐயோ... அத்தான்... நீங்களா? நீங்களா? என கூக்குரலிட... வெளியே அகலப்போன வாணி பிரேக்கடித்தது போல் நின்றாள்.

என்ன போனில் சத்யேந்திரனா? என ஒரு கணம் உற்சாகமாய் மலர்ந்தவள் மறுகணமே, போயும் போய் இவளிடம் பேசுகிறானே? என எரிச்சலாகவும் உணர்ந்தாள்.

அவள் எரிச்சலை பல மடங்கு உயர்த்தும் வகையில் மஞ்சரி கொஞ்சிக் கொஞ்சி பேசிக் கொண்டிருந்தாள்.

அவள் பேசியதை விட டியர், செல்லம் டார்லிங், கண்ணு, ஸ்வீட் என்றெல்லாம் சத்யேந்திரனை அவள் கொஞ்சியதைத்தான் அவளால் சகிக் முடியாமல் இருந்தது.

இந்த கொஞ்சலை எல்லாம் மறுமுனையில் பொறுமையாய் கேட்டு ரஸித்துக் கொண்டிருக்கிறானா அவன்? என கோபமாய் நினைத்தவள் ஐந்து நிமிடத்திற்கு மேல் பொறுமையிழந்து அங்கிருந்து அகலப் போனாள்

இரு... இரு... உன்னிடம் ஏதோ சொல்ல வேண்டுமாம்... என்றபடி மஞ்சரி கத்தி அவளை அழைக்கவும் சட்டென மலர்ந்து திரும்பினாள்.

இருங்க... டியர்... கொடுக்கிறேன்... என்றபடி ரிசீவரை வாணியிடம் மஞ்சரி நீட்டினாள்.

இருங்க...டியர்... கொடுக்கிறேன்... என்றபடி ரிசீவரை வாணியிடம் மஞ்சரி நீட்டினாள்.

அதை ஆவலாய் வாங்கி காதுகளில் வைத்தாள்.அவள் ஹலோ...

வாணி... அந்த லூசு ஏதாவது உளறிக் கொண்டு இருக்கும். அதையெல்லாம் பொருட்படுத்தாதே. இரண்டு நாளில் லூசு சென்று விடும். அதன்பின் அலுவலகம் வருகிறேன்...! என்றான் அவன்.



## 15



சத்யேந்திரன் இரண்டு நிமிடம் தான் பேசியிருப்பான். அதுவும் விஷயத்தை படபடவெ சொல்லிவிட்டு அவளது பதிலுக்கு காத்திராமல் வைத்து விட்டான்.

ஆனால் வாணிக்கு அந்த ரெடு வரிகளில் எல்லாவற்றையும் தெள்ளத் தெளிவாய் உணர்த்தி விட்டான். எல்லாவற்றிலும் முக்கியமாய் மஞ்சரியை லூசு என வர்ணித்தது அவன் எவ்வளவு சரியாய் அவளை எடைபோட்டு வைத்திருக்கிறான் என்பதை உணர்த்தியது.

லூசு... இந்த மஞ்சரிக்குப் பொருத்தமான பெயர்தான். லூசு போனதும் அலுவலம் வருகிறேன்... என்கிறான். அப்படியானால் இந்த மஞ்சரி தொந்தரவிற்கு பயந்துதான் அலுவலகம் வராமல் பெங்களூரில் வேலை இருப்பதாய் கூறி.... அங்கு உட்கார்ந்திருக்கிறானோ?

அப்படித்தான் இருக்கவேண்டும்! பூரணி அம்மாள் சத்யேந்திரனுடன் மஞ்சரியை பழக விட இப்படி ஒரு ஏற்பாடுசெய்ய... அதைத் தவிர்க்கவே அவன் பெங்களூர் சென்றுவிட்டான்.

அவளிடம் கூட சொல்லாமல் சென்று விட்டானே...என்று முன்பு கவலைப்பட்டவளுக்கு இப்போ அவன் அவசரமாய் சென்ற காரணம் புரிந்ததும் மனது சாந்தமாகியது.

அதற்குள் எதிடிரே இருந்த மஞ்சரி ரிசீவவரை வாங்கியவள் மறுமுனையில் சத்யேந்திரன் வைத்து விட்டதை உணர்ந்து படபடத்துக் கொண்டிருந்தாள்.

அத்தான்... என்ன சொன்னார்கள்...? சொல்லு...? சொல்லு! என



அரித்தவளிடம், அது ஒன்றுமில்லை மேட். வேலைகளை எல்லாம் ஒழுங்காகப் பார்த்து உங்களிடம் ஒப்புதல் வாங்கிக் கொள்ளச் சொன்னார்க்ள உங்கள் சொல்படி நடக்க வேண்டும் என்று என்னை பணித்திருக்கிறார்கள்... என்றாள்.

சொல்லிவிட்டு, இந்த ஐஸ் இவளுக்குப் போதும் தானே? என்பது போல் வாணி மஞ்சரியையே பார்க்க அவள் சொல்லியது உண்மை என்று நம்பி, அவள் நினைத்தது போல் துள்ளிக் குதிக்காத குறையாய் குதூகலித்தாள் அவள்.

அத்தான்... என்றால்... சத்யம் அத்தான்தான்! என் மேல் அவர் வைத்திருக்கும் பாசமே... தனி... ஸோ... ஸ்வீட்.... அவர்... என அத்தோடு நில்லாது உதடுகளைக் குவித்து காற்றில் ஒரு முத்தத்தை வேறு ப்ளையிங்காக அவள் பறக்க விட, சத்யேந்திரன் லூசு என மிகச் சரியான பெயரை இவளுக்கு வைத்திருக்கிறான். அதற்காகவே அவனைத் தனியாய் பாராட்ட வேண்டும்... என நினைத்துச் சிரித்தாள் வாணி.

ஒருவாறு அதற்குப்பின் அந்த இரண்டு நாட்களும் மஞ்சரி அடிக்கும் கூத்திலே சுவாரஸ்யமாய் கழிந்தது. வாணி அவளது புகழ்ச்சியை விரும்பும் அதீத மனநிலையை சரியாய் புரிந்து கொண்டதால் தினமும் வந்தவுடன் ஒரு வண்டி ஐஸ்களை தூக்கி புகழ்ச்சியாய் அவள் தலையில் வைத்து விடுவாள்.

அந்த அதீத புகழ்ச்சியை உண்மை என்று நம்பி மஞ்சரியும் கிறுக்குத்தனமாய் ஏதாவது உளறி சிரித்துக் கொண்டிருப்பாள். இதிடில் இடையே பூரணி அம்மாள் வேறு இரண்டு முறை போன் போட்டு, வாணி, மஞ்சரி எப்படி? ஆபீஸ் அலுவல்களை எல்லாம் பார்த்தாளா? கற்றுக் கொள்கிறாளா? என்ற விசாரிப்பு வேறு.

அக்கறையாய் கேட்டவர்களிடம், மேடம் எல்லாவற்றையும் கவனமாய்ப் பார்த்து கற்?று வருகிறார்கள் அம்மா... எனக் கூறி ரிசீவரை வைத்தாள்.

ஆனால் உள்ளபடி மஞ்சரி ஏதோ டிகிரி வரை படித்திருந்தாலும் அவளுக்கு கணக்கு வழக்குகளை பார்ப்பதிலோ தொழில் விஷயங்களை பார்ப்பதிலோ எவ்வித ஆர்வமும் அக்கறையும் இல்லை என்பது வாணிக்கு அவள் வந்த முதல் நாளே தெரிந்து போயிற்றுநு.

பைல்களை எடுத்துக் கொடுத்தால், பைல்களில் உள்ள அலுவலக குறிப்புகளைப் பார்க்காமல், பளபளப்பான பைல் அட்டையைப் பார்த்துக் கொண்டு, இந்த பைல் அழகாக இருக்கிறதே? ஸ்ப்ரிங் எல்லாம் வைத்து

கெட்டியாக இருக்கிறது? எவ்வளவவு விலை இருக்கும்? என பாமரத்தனமான கேள்விகளைக் கேட்டு ஆராய்ச்சி பண்ணிக் கொண்டிருந்தாள் அவள்.

இவளாவது....? அலுவலக வேலையை கற்றுக் கொள்வதாவது... அது இந்த ஜென்மத்தில் இல்லை...! என எப்போதோ அந்த முடிவிற்கு வந்திருந்தாள் வாணி.

ஆயினும் பூரணி அம்மாளின் ஆர்வமான விசாரிப்பை நோகடித்து விரும்பாதவளாய்த்தான் அப்படிக் கூறி சமாளித்திருந்தாள்.

ஒரு வழியாய் நான்கு நாட்கள் அலுவலகத்தில் இப்படிக் கூத்து நடத்தி விட்டு அவளிடம் பிரியா விடைபெற்று கிளம்பினாள் மஞ்சரி.

அவள் சென்றதும் ஐந்தாவது நாள் டாணென்று அலுகூலகத்திற்கு வந்து விட்டான் சத்யேந்திரன்.

என்ன அவளை சமாளித்து விட்டாயா? ஒன்றும் பிரச்சினை இல்லையே?

சாதாரணமாய் கேட்டு புன் முறுவலித்தவளை அப்படியே காணாததைக் கண்டது போல் பார்த்து இனிமையாய் முறுவலித்தாள் வாணி.

நாலைந்து நாள் அவனைக் காணாதது தன்னுள் ஏன் இப்படி பரபரப்பை உண்டு செய்கிறது எனவும் அவளுக்கு புதிராயிருந்தது.

அவள் தலைசாய்த்து ஒன்றும் பதில் சொல்லாது அவனையே ரசித்துப் பார்த்துக் கொண்டிருக்க... செல்லமாய் அவள் தோள்களைத் தட்டினான் அவன்.

என்ன அப்படி ஒரு பார்வை பார்க்கிறாய்? உன்னை அப்புறம் தனியாயள் ரசிக்கிறேன். முதலில் நடந்தவைகளைக் கூறு... என்றான்.

அடாடா... என உணர்வுக்கு வந்தவள் அவசரமாய் மஞ்சரி பற்றி அலுகூலகத்திடில் அவள் நடந்து கொண்டது பற்றியெல்லாம் ஒன்று விடாமல் வர்ணித்தாள்.

எல்லாவற்றையும் பொறுமையாய் கேட்டு நெற்றியைச் சுருக்கிய சத்யேந்திரன், அந்த லூசு இவ்வளவு அட்டகாசம் செய்துவிட்டுப் போயிருக்கிறதா? என்றான் வியப்பாய்.

வாணிக்கும் ஒரு விஷயம் விளங்கவில்லை. இவ்வளவு நாள்



காத்திருந்த மஞ்சரி சத்யேந்திரனை சந்திக்காமல் எப்படிச் சென்றாள்?

அதையும் அவள் கேட்டு விட நிதானமான தலையசைப்புடன் சிரித்தான் சத்யேந்திரன்.

அது ஒன்றும் பெரிய விஷயமில்லை. அவள் தந்தைக்கு ஒரு போன் செய்து அலுவலக நிர்வாகம் தெரியாத மஞ்சரி அலுவலகத்திடில் குட்டையைக் குழப்பிக் கொண்டிருப்பதை சூசகமாய்ச் சொன்னேன். அவர் விஷயத்தை புரிந்து உடனடியாய் அவளை திரும்ப அழைத்துக் கொண்டார். நானும் தப்பித்தேன்! என்றான் பெரும் நிம்மதி பெருமூச்சுடன்.

அப்படியானால்... ஸார்... இன்னொரு விஷயம் இன்னமும் உறுத்துகிறதே? என்றாள்.

உறுத்த விடாதே... கேள்... என்றான் சிரிப்பு மாறாமல்.

மஞ்சரி நாளுக்கு நாள் உங்களைக் கட்டிக் கொள்ளப் போகிறோம் என்ற நினைப்பில் மேலும் மேலும் கனவுகளை வளர்த்துக் கொண்டிருக்கிறாள். இதற்கு முடிவுதான் என்ன?

அவள் வினவ.... முடிவு என்றால்... எதைக் கேட்கிறாய்? என்றான் சத்யேந்திரன் இழுத்தபடி.

அவளை நீங்கள் திருமணம் செய்து கொள்வீர்களா.... மாட்டீர்களா?

இந்தக் கேள்வியை கேட்கும் போதே அவனது பதிலை அறியும் இனம்புரியா பரபரப்பை சிரமப்பட்டு அடக்கினாள்.

சத்யேந்தினோ வெகு இலகுவாய் தலையை அசைத்தான்.

வாணி, சாதாண ஒரு பெண்ணை கட்டிக்கொள்ளவே... பத்துக்கு இருபது முறை யோசிக்கவேண்டும். அதிலும் ஒரு லூசுவைப் போய் கட்டிக் கொள்வது என்றால் இதிடில் யோசனைக்கு எங்கே இடமிருக்கிறது? தெள்ளத் தெளிவாய் பெரிய சைஸில் ஒரு நோ வை சொல்லிவிட வேண்டியதுதான்...

அவன் சிரிப்புடன் சீரியஸாய் சொன்னது சந்தோஷப்படுத்தினாலும் ஒருவித தவிப்பாகவே உணர்ந்தாள் அவள்.

சார்... அப்படியென்றால்... மஞ்சரியை லூசு என்றே முடிவு பண்ணிவிட்டீர்களா?

தோளைச் சிலுப்பினான் சத்யேந்திரன், அட அதில் சந்தேகமா? நீ தான் பார்த்தாயே? மற்றவர்களின் நினைப்பை புரிந்து கொள்ளாமல் கிறுக்குத்தனமாய் நடந்துக் கொள்பவளை வேறு என்ன பெயர் சொல்லி அழைப்பது? மேலும் இதில் இன்னொரு முக்கியமான விஷயமும்இருக்கிறது வாணி....

என்ன விஷயம் சார்?

மஞ்சரிக்கு ஒன்றும் என் மீது லயிப்போ ஆசையோ கிடையாது. எல்லாம் அவள் தந்தையும் தாயும சேர்ந்து நான் கோடீஸ்வரன் விடாதே என்றெல்லாம் ப்ரெய்ன் வாஷ் செய்து அவளை முடுக்கி விட்டிருக்கிறார்கள். அவளும் கீ கொடுத்த பொம்மைத போல் அதற்காக ஆடுகிறாள்....

சாரி... இதில் அம்மாவிற்கு விருப்பம் நிறைய இருக்கிறதே... சார்.... நீங்கள் எப்படி மறுக்க முடியுமா?

வாணி கேட்கவும் அவன் முகம் மேலும் சீரியஸாய்ப்போனது... அந்த விஷயம் தான் வாணி என்னை ரொம்பவும் பாதிக்கிறது. இப்போது கூட பார்... இதெல்லாம் என் தாயாரின் ஏற்பாடுதான். வேண்டுமென்றே என்னுடன் பழகவிட மஞ்சரியை வரச் சொல்லி அலுவலகம் வரை அனுப்பிப் பார்த்தார்கள். நானோ அவர்களது நோக்கம் அறிந்து தான், அவசரமாய் பெங்களூர் அலுவலக வேலை என்று அங்கு ஓடி விட்டேன்... என்றவன் தொடர்ந்து, அம்மாவை இப்படியெல்லாம் ஏமாற்றுவது கூட சங்கடமாய்த்தான் இருக்கிறது. ஆனால் அம்மா விற்கு என் நிலைமை புரிய வைக்க இதைத்ட தவிர வேறு வழி இல்லை வாணி... எனவும் முடித்து வைத்தான்.

வாணிக்கும் அவன் நிலை புரிந்து கவலையோடு பார்க்க சத்யேந்திரன் ஒருவிதச் சிரிப்புடன் அவளைப் பார்த்தவன். இப்போது என்னுடைய நிலை மகாபாரதத்தில் அர்ஜூனன் சுபத்திரை நிலையை ஞாபகப்படுத்துகிறது... என்றான்.

அது என்ன ஸார் அர்ஜூனன் நிலை? என கதை கேட்கும் விதமாய் ஆவலானாள் வாணி.

அதாவது வாணி மகாபாரதத்தில் சுபத்திரை கிருஷ்ண பகவானுக்கு தங்கையாக அவதரித்தவள்.

அழகில் சிறந்தவளான சுபத்திரை மீது அர்ஜுனனுககு தீராத ஆசை.



சுபத்திரைக்கும் வீரமும் விவேகமும் பொருந்திய ஆணழகனான அர்ஜூனனின் மீது தீடீராத காதல். இருவர் மனமும் ஒத்துப் போய், திருமணத்தில் இணையதவித்துக் கொண்டிருக்க... அர்ஜூனனின் ஆசைக்கு கிருஷ்ணன் துணையாய் பக்க பலமாய் நின்று ஆதரித்தார்.

ஆனால் கிருஷ்ணரின் அண்ணன் பலராமனோ சுபத்திரையை தனது இனிய நண்பன் துரியோதனனுக்கு மணம் முடித்து கொடுக்க வேண்டும் என திட்டமிட்டிருந்தான்.

ஆக இந்த இருவரது ஆசைகளுக்கிடையே உண்மையான காதல் நெஞ்சங்க்ள சேர முடியாமல் தவிக்க கிருஷ்ணன் சமயோசிதமாய் பிளான் செய்து அர்ஜூனனை சாமியார் வேஷத்தில் சுபத்திரை இருக்கும் துவாரகாபுரிக்கு அனுப்புகிறான். பலராமனை ஏமாற்றி சுபத்திரையை தன்னுடன் அழைத்துக் கொண்டு அங்கிருந்து வெளியேறுகிறான் அவன்....

சொல்லிக் கொண்டிருந்த சத்யேந்திரன் கதையை நிறுத்தி, இப்போது புரிகிறதா? என்றான்.

வாணிக்கு ஓரளவு புரிந்தது போலும் இருந்தது. புரியாதது போலும்தோன்றியது இருந்தாலும் முழுதும் விளங்காதவளாய் அவனைப்

பார்த்து விழித்தவள், எல்லாம் புரிகிறது ஸார். அர்ஜுனன் சுபத்டதிரையை விரும்பியது போல்.... இந்த அர்ஜூனனாகிய நீங்கள் விரும்பும் சுபத்திரை... தான்... யாரோ? நான் தெரிந்து கொள்ளலாமா? என்றாள்.

மறுபடியும் பளீர் புன்னகை புரிந்தவன்,. அதுதான் ஏற்கனவே சொல்லிவிட்டேனே.... நான் விரும்பும் சுபத்திரை ஒரு முட்டாள். அழகான இனிய முட்டாள்! போதுமா? என்றபடி எழுந்தான் சத்யேந்திரன்.



## 16



சத்யேந்திரன் அதே பதிலுடன் அன்று அகன்று விட்டான். வாணிதான் ஒன்றும் பிடிபடாதவளாய் அதே யோசனையில் ரொம்ப நேரம் உட்கார்ந்திருந்தாள்.

அவனிடம் சூசகமாய் கேட்டாயிற்று. இதற்கு மேலுமா துருவித் துருவிக் கேட்பது? கேட்டாலும் அவன் பதில் சொல்லவாப் போகிறான்? ஆனால்... அந்த முட்டாள்.... அழகிய இனிய முட்டாள் யாராயிருக்கும்? என நினைத்தவள் பட்டென யோசனையை நிறுத்தினாள்.

இப்படியே சிந்தித்துக் கொண்டிருந்தால் தலைகிறு கிறுத்து பைத்தியமே பிடித்தாலும் பிடித்துவிடும். பின் சத்டயேந்திரன் தன்னையும் மஞ்சரியைப் போல் லூசு லிஸ்ட்டில் சேர்த்து விடுவான் என அத்தோடு நினைப்பை விட்டாள்.

பின் அடுத்து வந்த மூன்று நாட்களும் பக்கத்து கிராமம் ஒன்றுக்கு சத்யேந்திரனுடன் சென்று ஆதரவற்ற சிறுவர் சிறுமியர்களை தேடிப்பிடித்து புதியதாய் ஆரம்பிக்க இருக்கும் அன்பு இல்லப் பணிகளில் ஆழ்ந்து விட்டாள்.

அந்த சிறுவர்களுக்காக ஹாஸ்டல் கட்டிடம் ஒன்றும் கட்டப்பட்டிருந்தது. அவர்களுக்குதேவையான உடை வகைகள், உணவு ஏற்பாடுகள். அவர்களை அன்பாய் அரவணைத்து கவனிக்க செவிலிமணார்கள் என எல்லா ஏற்பாடுகளையும் அவளே முன் நின்று கவனித்தாள். இரவு பகல் என நேரம் பார்க்காமல் வேலைகள் ஒழுங்காய் நடக்கிறதா என கவனித்தாள்.

அதற்காக அறக்கட்டளை மூலம் பத்து லட்ச ரூபாய் பணம் ஒதுக்கப்பட்டிருந்தது. வாணி சரியாக மதிப்பீடு செய்து எல்லா ஏற்பாடுகளையும் செய்திருந்ததால், குறிப்பிட்ட அந்த பத்து லட்சத்திற்குள் எல்லா செலவுகளும் வரும்படி டேலி செய்திருந்தாள்.

அவளது நிர்வாகத்திடிறமையையும், துடிப்பாக செயல்பட்டுஅன்பு இல்லப் பணிகளை சிறப்பாக முடித்ததற்கும் சத்யேந்திரன் வெகுவாய் அவளைப் பாராட்டினான்.

வெல்டன்... வாணி நான் நினைத்ததற்கு மேலாகவே திறமையுடன் செயல்பட்டிருக்கிறாய். இந்த அழகான தலைக்கள் இப்படி ஒரு பிரம்மாண்டமான மூளை இருப்பது இதுவரை எனக்குத் தெரியாமல் போயிற்றே...! என்றபடி செல்லமாய் அவள் தலையை தட்டவும் செய்தான்.

அதே அன்பு இல்லப் பணிகளை மாலைவாக்கில் பார்வையிட வந்த பூரணி அம்மாளும் அவளை மனதார பாராட்டினாள். கூடவே, உன்னிடம் இன்னொரு விஷயம் பேசவேண்டும்.... என தனியாக அழைத்தபோது பயப்படத்டதான் செய்தாள் வாணி.



பூரணி அம்மாள் அவளை தனியே அலுவலக பின்புற தோட்டப்பகுதிக்கு கூட்டிச் சென்று பேசினாள். அவள் நினைத்தபடியே கேட்டாள்.

சத்யேந்திரன் மஞ்சரி பற்றி என்ன சொன்னான்? நீ எதுவும் கேட்டாயா? என்றாள் ஆவலாய்.

வாணி ஒரு கணம் இதற்கு என்ன பதில் சொல்வது என விழிக்கத்தான் செய்தாள்.

அவனோ, மஞ்சரியை லுசு என்றே முடிவு கட்டி பேசிக் கொண்டிருக்கிறான். அது புரியாமல் இந்த அம்மாள் வீணாய் கனவுகளை வளர்க்கிறார்களே... இதற்கு என்ன செய்வது?

யோசித்தவள் அந்தச் சூழ்நிலையில் சமாளிக்க, அப்படி ஒன்றும் சொல்லவில்லையம்மா... இதை நீங்கள்... நீங்கள் நேரிடையாகவே கேட்டுத் தெரிந்து கொள்வது நல்லது தானேம்மா...! என யோசனையும் தெரிவித்தாள்.

ஆனால் அதற்கு மறுப்பாய் பூரணி தலையசைத்தவள், உனக்கு விஷயம் தெரியாதா வாணி? நம் சத்யேந்திரனுக்க மஞ்சரியை சுத்தமாய் பிடிக்காதுதான். ஆனால் நான் தான் அது தெரிந்துதான் அவர்களுக்குள் ஒரு ஈர்ப்பு வர முயன்று கொண்டிருக்கிறேன். இதனாலே மஞ்சரியைத்தவிர வேறு யாரும் அவன் மனதில் இடம் பிடித்து விடக்கூடாது என்றுதான் அன்று கூட சூசகமாக உன்னை எச்சரித்தேன்... என பூரணி அம்மாள் கூறக்கூற, அட.... அம்மாளை நாம் சாதாரணமாக நினைத்துவிட்டோம்... எப்பேர்ப்பட்ட ஆள் இவர்கள்...! என வியப்புடன் வாயடைத்துப் போனாள் வாணி.

பூரணி அம்மாளும் வாணியை லேசில் விடுகிற மாதிரி தெரியவில்லை. வாணி.. இன்னொரு விஷயம் உன்னிடம் கேட்க வேண்டும்....

கேளுங்கள் அம்மா....

கேட்டாள் நீ தவறாக எடுத்துக் கொள்ளக்கூடாது....

தயக்கம் வேண்டாம். ? சும்மாக் கேளுங்கள் அம்மா....

அதாவது ..... வாணி... உனக்கு சத்யேந்திரன் மீது முதலாளி வேலையாள் உறவுதான்... வேறு எதுவும் கிடையாது என்று சொல்லிவிட்டாய். அப்படித்தானே?

அப்படித்தான்... என தயக்கத்துடன் தலையசைப்பு செய்தாள் வாணி.

அப்படியானால் சத்யேந்திரன் வேறு யாரையும் விரும்புகிறானா...? வேறு யாரும் அவன் மனதில் இருக்கிறார்களா?

இந்தக் கேள்வி வாணியைத் திணற் செய்தது.

அது.... அது... எனத் தயங்கினாள்.

தயங்காதே வாணி... தயங்காமல் எதுவானாலும் சொல்லு.... பூரணி அம்மாள் பரபரக்க வாணி சத்யேந்திரன் அடிக்கடி மர்மமாய் தன்னிடம் பேசி விளையாடும் விஷயத்தை போட்டுடைக்க தீர்மானித்தாள். அது... வந்து... வந்தும்மா... சத்யேந்தின் அடிக்கடி யாரையோ தான் காதலிப்பதாய் சொல்லுவார்... என்றாள்.

அப்படியா...? நிஜம்மாவா?

அமாம்மா...! அது யார் என்று கேட்டால் அதற்கு என்ன பதில் சொல்வார் தெரியுமா?

சொல்லு வாணி... என்ன சொல்வான்?

அது... அது... உங்களிடம் எப்படிச் சொல்வது? எனக்கு சொல்லத் தயக்கமாய் இருக்கிறதம்மா....

சும்மாச் சொல் வாணி. நான் புரிந்து கொள்கிறேன்....

அதாவது அம்மா... அவர் காதலிப்பது ஓர் முட்டாளையாம். அதுவும் அழகிய இனிய முட்டாளாம். அப்படிப் பட்ட ஒரு பெண்ணைத்தான் தான் காதலிப்பதாய் அடிக்கடி சொல்வார்....

வாணி யாரையோ சொல்லப் போகிறாள் என நினைத்த பூரணி அம்மாளுக்கு வாணியின் பதில் பெரும் ஏமாற்றத்தை தந்தது.

என்னம்மா சொல்கிறாய்? அழகிய முட்டாளா? ஒரே குழப்பமாய் இருக்கிறது....

வாணியும் போலியாய் தலையைப் பிடித்துக் கொண்டாள்.

அதானம்மா... எனக்கும் புரியவில்லை. ஒரே குழப்பமாகிவிட்டது. அவர் சத்யேந்திரனிடமும் பலமுறை அந்த அழகிய முட்டாள் யார்... யார்... என்று கேட்டுப் பார்த்து விட்டேன்.... வெறும் சிரிப்புடன் மழுப்பிவிட்டுச்



சென்று விடுகிறார்.....

வாணி தன் சந்தேகத்தை, தனக்கிருக்கும் குழப்பத்தை எல்லாம் அப்படியே வார்த்தைகளால் வடிக்க பூரணி அம்மாளோ எதையோ சிந்தித்து கண்டு பிடித்தவளாய் மலர்ந்தாள்.

எனக்குப் புரிகிறது... எனக்குப் புரிகிறது. நான் கண்டு பிடித்து விட்டேன்... என்றாள்.

வாணி துணுக்குற்றவளாய் திடுக்கிட்டு பூரணி அம்மாளைப் பார்த்தாள்.

என்னம்மா சொல்கிறீர்கள்? கண்டு பிடித்து விட்டீர்களா? உங்களுக்குப் புரிந்ததா.... யாரது? என்றாள்.

பூரணி அம்மாள் நீளமாய் மூச்சிழுத்தபடி தெளிவான குரலில் பேச ஆரம்பித்தாள்.

அதாவது வாணி, அவன் நம் மஞ்சரியை சில சமயங்களில் செல்லமாய் லூசு, லூசு, என அழைத்து விளிப்பது உண்டு... அதை வைத்துப் பார்த்தால் இப்போது அவன் சொல்லும் அந்த அழகான இனிய முட்டாளும் அவளாய்த்தான் மஞ்சரியாய்த்தான் இருக்க வேண்டும்... என்ன நான் சொல்வது சரிதானே வாணி...?

பூரணி அம்மாள் இப்படி விளக்கம் கொடுத்து கேட்க.... வாணி பேச வார்த்தைகள் இல்லாது திகைக்கத்தான் செய்தாள்.

ஒருவேளை பூரணி அம்மாள் சொல்வது போல் இப்படிக் கூட இருக்குமோ? சத்யேந்திரன் மஞ்சரியை லூசு என கூப்பிட்டு கிண்டலடிப்பது அவளுக்குத் தெரிந்த விஷயம்தான்.... அதன் தொனியிலேதான் மஞ்சரியை இனிய முட்டாள் எனவும் கூறி வருகிறானா?

அப்படி நினைத்துப் பார்த்தவள் மறுகணமே அப்படி நிச்சயமாய் இருக்காது. ஏனென்றால் மஞ்சரியை தனக்கு சுத்தமாய் பிடிக்காது. என ஒரு முறைக்கு பலமுறை தெளிவாய் கூறியிருக்கிறானே. அப்படி இருக்கையில் அவளைப் போய் விரும்புவானா?

வாணி தெளிவடைய பூரணி அம்மாளோ அது மஞ்சரியாய்த்தான் இருக்கும் என முடிவே செய்துவிட்டாள். அதனால் அவள் மனதில் மகிழ்ச்சியலை பெரிதும் பரவியது.

அந்த சந்தோஷத்தில் அப்படியே வாணியின் கைகளைப் பிடித்துக் கொண்டவள், நி சொல்வதை கேட்கும் போது மகிழ்ச்சியான என் கனவெல்லாம் நிறைவேறிவிடும் போல் தோன்றுகிறது. மஞ்சரியை என்னமோ நினைத்தேன். ஆள்.... கெட்டிக்காரிதான்...அதிர்ஷ்டசாலிதான்...! என்று பூரணி அம்மாள் மஞ்சரிக்க புகழாரம் சூட்ட வாணி எதுவும் புரியாமல் விழிக்கத்தான் செய்தாள்.

அன்று மாலையில் அலுவலகம் முடிந்து கிளம்பிய சத்யேந்திரனிடம், வாணி ரொம்ப நேரம் யோசித்தவள் பூரணி அம்மாள் கேட்ட விஷயங்களை சொல்லிவிடுவது என முடிவெடுத்தாள்.

சார்... ஒரு நிமிஷயம்.... என்றபடி மடமடவென நடந்த வியங்கள் அனைத்தையும் ஒன்றுவிடாமல் கூறினாள்.

விஷயத்தைக் கேட்ட சத்டயேந்திரன் கடகடவென அடக்க முடியாமல் சிரிக்க ஆரம்பித்துவிட்டான்.

அவன் மறுக்காமல் சிரிப்பதைப் பார்த்த வாணிக்கே கொஞ்சம் பயமாகிப் போய் விட பதட்டத்டதுடனே அவனைப் பார்த்தாள்.

சார்.... அவர்கள் சொல்வது.. போல் உண்மையா? மஞ்சரிதான் நீங்கள் சொன்ன அழகிய இனிய முட்டாளா? என்றாள் ஆதங்கமான குரலில்.

சத்டயேந்திரன் சிரிப்பை நிறுத்தி அவளை உற்றுப் பார்த்தான்.

உனக்கும் அந்த சந்தேகம் வந்து விட்டதா?

மறுபடியும் கடகடவென சிரிக்க ஆரம்பித்து விட்டான்.

வாணிக்குத் தாங்க் முடியாமல் தலையே சுற்றியது.

ஐயோ... சார்... ப்ளீஸ்... சொல்லுங்கள்... அந்தப் பெண்.... அழகிய இனிய.... முட்டா;ள.... யார்... யார்... சார்?

உனக்கு கண்டிப்பாக் தெரிந்தாக வேண்டுமா? கைகளைக் கட்டியபடி அவன் நேருக்கு நேர் பார்க்க அவள் சமாளித்தாள்.

அ... ஆ... இல்லை.... சொன்னால்..... தெரிந்து கொள்வது நல்லது இல்லையா.... சார்...? என்ன இருந்தாலும்.... அவர்களும் எனக்கு பாஸ்.... எஜமானி... மாதிரி.... மேடம்தானே சார்?



என்னென்னவோ கேட்க நினைத்து அவள் வாய் குழறி கேட்க, அவளின் அந்த திணறலை ரொம்பவும் ரஸித்த படி, அதான் முன்பு ஏற்கனவே சொல்லியிருந்தேனே.... வாணி... நான் காதலிக்கும் பெண்... அதாவது நீ மரியாதை கொடுத்து அழைக்க நினைக்கிறாயே அந்த மேடம், அது ஒரு முட்டாள். நான் அவளை காதலித்துக் கொண்டிருப்பது தெரிாத அழகிய இனிய முட்டாள். போதுமா?

சொல்லிவிட்டு அதே புன்சிரிப்புடன் மறைந்தான் அவன்



## 17



சில நேரங்களில் நாம் நினைத்ததும் நடக்கும். நினைக்காததும் நடக்கும். அதே போல் தான் வாணி விஷயத்திலும் நடந்தது.

அவள் பூரணி அம்மாளின் இந்த யோசனைக்கு என்ன ஆனாலும் சரி சம்மதிக்கக் கூடாது..... சம்மதிக்கவே கூடாது... என பிடிவாதமாய்த்தான் இருந்தாள்.

ஆனால் பூரணி அம்மாளின் கெஞ்சல் அந்த உருக்கமான பேச்சு அவள் நிலையை மாற்றிக் கொள்ளும்படி ஆயிற்று. என்ன இருந்தாலுமு; வயதில் அவ்வளவு பெரியவர்கள், பணமும் செல்வாக்கும் உடையவர்கள், என் மகனை விட்டுக்கொடு... என் சொந்தங்கள், எனக்கு வேண்டுமு; என்று சொல்லும் போது அவள் எப்படி மறுக்க முடியும்?

ஆனாலும்... இந்தப் பூரணி அம்மாளும் கெட்டிக்காரி தான். அவளிடம் விரட்டியோ மிரட்டியோப் பேசினால் எதிர்த்து மல்லுக்கு நின்று விடுவாள் என்பதை உணர்ந்து கெஞ்ச அல்லவா செய்கிறாள்?

இதில் ஒரு வியம் வாணிக்கு கேலியாகவே தோன்றியது.

இன்னும் சத்யேந்திரன் அவளைத்தான் காதலிக்கிறேன் என்று வெளிப்படையாய்ச் சொல்லவில்லை. உறுதியாகத் தெரியாது. எல்லாமே பூரணி அம்மாள் மனதில் தோன்றிய யூகம்தான்!

அதை நேரிடையாய் சத்யேந்திரனிடமே உடைத்து விஷயத்தை தெரிந்து கொள்ள பூரணி அம்மாளுக்கே முடியவில்லை. பின் வாணியால்

எப்படி செய்ய முடியும்?

ஆனால் பூரணி அம்மாள் தலையில் அடித்து சத்தியம் பண்ணாத குறையாய்த்தான் சொன்னாள்.

வாணி... அந்த விஷயத்தில் நீ சந்தேகமே கொள்ளத் தேவையில்லை. சத்யேந்திரன் காதலிப்பது உன்னைத்தான். எனக்கு நன்றாகத் தெரியும் அவன் உன் அளவுக்கு எந்தப் பெண்ணையும் தன்னை நெருங்கவிட்டதில்லை. நெருங்கிப் பழகவில்லை.

இந்த வார்த்தைகள் அவளை பெரும் மகிழ்ச்சிக் கடலில் தள்ளினாலும் அதையெல்லாம் ரஸித்து மகிழக் கூடிய சூழ்நிலையில் அவள் இல்லையே?

எல்லாவற்றையும் விட்டுத் தள்ளிவிட்டு அல்லவா அவள் செல்ல வேண்டும்...! ஒருவேளை அவன் அவளை காதலித்திருந்தாலும் அவள் உதறித்தள்ள வேண்டுமாம்! அப்படி இம்முறை சத்யேந்திரனை மீறி அவள் முடிவு எடுத்தாக வேண்டும். அதன்படி செய்ய வேண்டும். எவ்வளவு பெரிய தண்டனை கொடுமை இது! அவளால் அது முடியுமா?

அவள் திகைத்து ஒரு கணம் நிற்க எல்லாவற்றிற்கும் சரியான திட்டத்தையும் வழியையும் போட்டு வைத்திருந்தாள் பூரணி அம்மாள்.

அத்திட்டப்படி அவள் சத்யேந்திரனிடம் பார்க்கும் செகரட்டரி வேலையை உதறித்தள்ள வேண்டும்.

திடீரென வேலையை ராஜினாமா செய்ய வேண்டும்.

சத்யேந்திரன் லேசில் விடுவானா? காரணம் கேட்பானே? என்ன காரணம் சொல்வது?

அதற்கும் பூரணி அம்மாள் தயாராய் பதில் சொலலிக் கொடுத்திருந்தாள்.

வேறொரு.... கம்பெனியில் இதைவிட அதிக சம்பளம் தருவதால் அங்கு செல்வதாக அவள் கூற வேண்டும்...!

சரி.. இவள் இப்படிச் சொன்னதும் சத்யேந்திரன், கூடுதல் சம்பளம் தானே உன் பிரச்சினை? என்னிடம் கேள். எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு தருகிறேன்... என்று சொன்னால் அதற்கு என்ன பதில் சொல்வது?



வாணி இப்படியொரு கேள்வி எழுப்பி பூரணி அம்மாளைப் பார்க்க அவள் அதற்கும் தயாராய் விடைவைத்திருந்தாள்.

அப்படி சத்யேந்திரன் கிடுக்கிப்பிடி போட்டாள்... இல்லை ஸார்... ஒரே வேலையை செக்குமாடு போல் செய்து போரடித்துவிட்டது... வேறொரு கம்பெனியில் வித்தியாசமாய் வேறு ஒரு வித வேலையைச்செய்ய ஆசைப்படுகிறேன்.... என்று கூறி சமாளிக்க வேண்டும்....

அதையும் மீறி சத்யேந்திரன் வற்புறுத்தினால், ஸாரி... சார்... எனக்கு இந்த வேலை பிடிக்கவில்லை... எனது ராஜினாமாவை ஏற்றுக்கொள்ளுங்கள்... என பிடிவாதாமாய் கறாராய் கூறிவிட வேண்டும்.

பூரணி அம்மாள் எல்லாவற்றையும் சாதாரணமாகவே சொல்ல.... தனது வட்ட விழிகளை உயர்த்தி அவளையே வெறித்தாள் வாணி.

இதுவெல்லாம் பேசுவதற்கு எளிது. ஆனால் பிடறியை உலுக்கியபடி நிற்கும் சிங்கம் போல் கம்பீரகர்ஜனையுடன் உட்கார்ந்திருப்பவர்களிடம் போய் இப்படியெல்லாம் சொல்ல முடியுமா? இல்லை அவனிடம் எடுத்தெறிந்து முகத்திலடித்தாற்போல் பேசத்தான் அவளால் முடியுமா?

அவ்ள திகைக் பூரணி அம்மாள் மறுபடி மறுபடி வாதிட்டது அவளை வேறு எந்த நிலையையும் எடுக்க முடியாமல் தவிக்க விட்டது.

சரி... அப்படி வேலையை விட்டு விட்டால்... அவள் கதி.... அதன் பின் என்ன செய்வாள்?

அவள் கேள்விக்கு பூரணி அம்மாள் கையில் ஒரு விசிட்டிங் கார்டை திணித்தாள்.

பார்.. இது... நம் நகரின் பிரபலமான கம்ப்யூட்டர் மென்பொரு கம்பெனி. இதை நடத்துகிற உரிமையாளர் எனக்கு ரொம்பவும் வேண்டியவர். அவரிடம் உன்னைப் பற்றி பேசி எல்லா ஏற்பாடுகளையும் முன்பே செய்து விட்டேன். அங்கு உனக்கு சீனியர் புரோகிராமர் என்ற உயர்ந்த வேலை உனக்கு காத்திருக்கிறது. சம்பளமும் இப்போது இங்கு நீ வாங்குவது போல் இருமடங்கு. நான் ஒன்றும் அதன்பின் உன்னை கைவிட்டுவிட மாட்டேன் வாணி. உனக்கு உறுதுணையாய் பக்க பலமாய் இருப்பேன். உனக்கு எந்த உதவி தேவைப்பட்டாலும் நான் ஓடோடி வந்து விடுவேன்....

பூரணி அம்மாள் சொல்ல சொல்ல முழுவதையும் கேட்ட வாணி

இன்னொரு சந்தேகத்தையும் எழுப்பினாள்.

சரி...ம்மா... நீங்கள் சொல்வது போல் வேலை விஷயம் சரி... ஆனால் எனக்கு இந்த அறக்கட்டளை சேவையில்....ஆதரவற்றோருக்கு உருவாக்கிய அன்பு இல்லப் பணிகளை கவனிப்பதில் மிகுந்த ஈடுபாடும் ஆர்வமும் உண்டு. அதைச் செய்யாமல் விலகி இருப்பது என்மனதை கஷ்டப்படுத்தும் என நினைககிறேனம்மா....

அவள் சொல்ல அதற்?கு பூரணி அம்மாள் கூறிய பதில் அவளை அப்படியே அயரச் செயள்தது.

அட..இ.. அந்த விஷயம்தானே.... அவ்வளவுதானே வாணி....? அதற்கம் என்னிடம் வழி இருக்கிறது. நான் தேவைப்படும் பணத்தை உனக்குத் தருகிறேன்... நீ உன் விருப்பப்படி நீ விரும்பும் அனாதை அன்பு இல்லம் ஒன்றை புதிதாய் உருவாக்கிவிடு. நீ நினைத்டதால் உன்னால் முடியும்தானே? மேலும் அப்படிச் செய்வது புண்ணியமான நல்ல காரியம்தானே? அதற்கு கண்டடிப்பாய் நான் உதவுகிறேன். நீ கவலையை விடு வாணி...

இப்படி பூரணி அம்மாள் சொல்லும்போது மேற்கொண்டு அவள் என்ன செய்ய முடியும்?

அப்படியே வாயடைத்துதான் போனாள் வாணி.

இதற்கு மேல் பூரணி அம்மாளிடம் எதையும் வாதிட முடியாது. எந்த சாக்கும் சொல்லமுடியாது என்பது வாணிக்கு புரிந்து போயிற்று.

அதற்குப்பின் பூரணி அம்மாளின் திட்டத்திற்கு அவ்ள சம்மதிப்பதை தவிர வேறு வழியும் இல்லை என்பது தெரிந்தாயிற்று.

ஆனால் ஒன்று. பூரணி அம்மாள் போன்ற ஆட்களை ஜென்மத்திலும் மறக்க முடியாதுபோல் தோன்றிற்று.

கெஞ்சி, காலில் விழுந்தாவது தங்களது காரியத்தை சாதித்துக் கொள்வார்க்ள.

ஆனால் இப்படி கெஞ்சி சாதிப்பதும் ஒருவித கட்டளைதா்னே!

யோசித்தவள் மேற்கொண்டு எதுவும் தோன்றாதவளாய் இமைகள் விரிய விழிக்கத்தான் செய்தாள்.

அந்த விழிப்பு மறுநாள் சத்யேந்திரன் முன் ராஜினாமா லெட்டரை



நீட்டி விட்டு அவள் நிற்கும் வரை தொடர்ந்தது.

சத்யேந்திரன் லெட்டரை வாங்கியவன், என்ன? என்றான் பார்வையாலே.

சார், இது என் ராஜினாமா கடிதம் நான் இந்த வேலையை விட்டு விலக விரும்புகிறேன்... என்றாள் சுருக்கமாய் உணர்ச்சியற்ற குரலில்.

என்ன... என்ன உளறுகிறாய்...? என்றான் சத்யேந்திரன் சட்டென மாறிய முகபாவத்துடன்.

உளறவில்லை சார். உண்மை உண்மையைத்தான் சொல்கிறேன். நான் எனது வேலையை ராஜினாமா செய்கிறேன். தயவு செய்து ஏற்றுக் கொள்ளுங்கள்....

கிளிப்பிள்ளைக்கு சொல்லிக் கொடுத்து சொல்வது போல் தான் மனதில் கோர்த்து வைத்திருந்த வார்த்தைகளை படபடவென சொன்னாள்.

அவன் சத்யேந்திரன் அதிர்ச்சி பொங்க ஸீட்டை விட்டு எழுந்து விட்டான்.

என்னாயிற்று.... உனக்கு..? திடீரென... ஏன் இப்படி உளறுகிறாய்...? என்றான் மறுபடியும் கோபம் குறையாதவனாய்.

இல்லை யார்... இது திடீரென எடுத்த முடிவு இல்லை. ரொம்ப நாளாய் என் மனதை அரித்துக் கொண்டிருந்த விஷயம். உங்களிடம் எப்படிச் சொல்வதென்று தயங்கிக் கொண்டிருந்தேன்...

அவள் சொல்லி முடிக்க அவன் கைகளைத் தட்டியபடி, இப்போதுதான் தைரியம் வந்ததாக்கும். நல்ல தைரியசாலிதான்! வேலை கொடுத்த என்னிடமே முகத்திலடித்தாற்போல் ரிசைனிங் லெட்டரை நீட்டுகிறாய்...? என்றவன் அதே கோபத்துடன் அவளை உறுததுப் பார்த்தான்.

இதோ... பார்... வாணி நீ வேலை பார்ப்பதும் பார்க்காததும் உன் இஷ்டம். ஆனால் நீ வேலையை விடுவதற்கான சரியான காரணத்தை என்னிடம் சொல்லியாக வேண்டும். இல்லாவிட்டால் உன் ராஜினாமா ஏற்றுக்கொள்ளமாட்டேன்....

தெளிவாய் கணீர்க்குரலில் அவன் பேசிய போது அவளும் அவனையே உற்றுப் பார்த்தாள். இவனிடம் சொல்லமுடியுமா?

எல்லாவற்றக்கும் உன் தாய் தான் காரணம். உன்னைப் பார்க்கக் கூடாதாம். உன் முகத்திலேயே இனி விழிக்கக்கூடாதாம்! அதற்கு இந்த வேலையை விடுதல் ஒன்றுதான் வழி என்று!

சார்.... நான் சொல்வது உண்மையான காரணம்தான் எனக்கு இன்னொரு கம்பெனியில் நல்ல சம்பளத்திடில் நல்ல வேலை கிடைத்திருக்கிறது..... என்றவள் பூரணி அம்மாள் சொல்லிக் கொடுத்த ஐடியாக்கள் ஞாபகம் வர, அதாவது சார்... செக்கு மாடு போல் ஒரே வேலையைச் செய்து போரடித்து விட்டது சார.... அதனாலே வேறு வேலையைத் தேடிச் செல்கிறேன்.. என்னை நம்புங்கள்... என்றாள் குரல் கம்ம...

அதற்குமேல் அவளால் பேச முடியவில்லை. பேசினால் கண்கள் கலங்கி அழுதாலும் அழுது விடுவாள். அப்படி அழக்கூடாது என்ற இறுமாப்புடன் அவள் உதட்டைக் கடித்து சிரமத்துடன் உணர்ச்சிகளை அடக்கினாள்.

இம்முறை அவன் சொன்ன பதிலால் அவன் முக இறுக்கம் பெரிதும் தளர்ந்து பளீர் புன்னகை பிறந்தது.

அட... செக்கு மாடு போல்இந்த வேலையும் நாங்களும் உங்களுக்கு அலுத்துப் போய்விட்டோமோ...?

சொல்லியபடி அவள் பக்கம் வந்து அவளை மேலும் கீழுமாக பார்த்டதவாறு சுற்றி வந்தான்.

அவள் உதட்டை அழுந்தக் கடித்தபடி உணரச்சிப் பிழம்பாய் நின்று கொண்டிருப்பதை உற்றுக் கவனித்தான்.

இரண்டு நிமிட அமைதிக்குப் பிறகு. உன் ராஜினாமாவை ஏற்றுக் கொள்கிறேன்..! என்றான் சலனமற்ற குரலில்....



## 18



சத்யேந்திரன்அதன் பிறகு எவ்வித உறுத்தலுமில்லாமல் விடுவித்து விட்டான். அவளது ராஜினாமாவிற்கு சம்மதம் என்று சொல்லிவிட்டான்.

வாணிக்கு ஒரே ஆச்சர்யம்! அவன் பெரிதாய் கத்துவான்.



ஆர்ப்பாட்டம் பண்ணுவான் என்று நினைத்தவளுக்கு அவ்ன சாதாரண விசாரிப்பு விசாரித்துவிட்டு ராஜினாமாவை அனுமதிடித்தது பெரும் அதிர்ச்சியலையை பரப்பியது.

அவள் தலையசைப்புடன் சம்மதட சொல்லிய பிறகும் அங்கேயே சிலை போல்தான் நின்று கொண்டிருந்தாள்.

பின் சத்யேந்திரன்தான்அவள் தோள்களைத் தட்டி உனதுவேண்டுகோள் ஏற்கப்பட்டது. இந்த நொடியிலிருந்து நீ இந்தக் கம்பெனியின் எல்லா பொறுப்புகளிலிருந்தும் விடுவிக்கப்படுகிறாய். நீ போகலாம்..! என்றபடி வாசல் பகுதியை நோக்கி சைகையும் காட்டிவிட்டான்.

அதற்கு மேல் அவளால் அங்கு நிற்க முடியவில்லை.

விடுவிடுவென வெளியே வந்தாள்.

அடுத்த ஐந்து நிமிடத்திடில் அலுகூலக கேட்டிற்கு வெளியே தனியாளாய் நின்று கொண்டிருந்தளா; அவள் திரும்பி கம்பெனியின் பிரம்மாண்டமான கட்டிடத்தைப் பார்த்தாள்.

என்ன கொடுமை இது!

இவ்வளவு நாள் அவள் ஓடியாடி வேலை பார்த்த அலுவலகத்தை விட்டு அவள் தூக்கியெறியப் விட்டாள். இல்லை... இல்லை... அவளே... தன் தலையில் குட்டியிருக்கிறாள்.

எவ்வளவு பெரிய இழப்பு....

அந்த சத்யேந்திரனும் அவளைத்ட தடுக்கவில்லையே!

சில கேள்விக்ள கேட்டு விட்டு போ... என தலையசைத்து விட்டானே...!

அவனுக்கு செகரட்டரியாய் பின்னாலே சுற்றி வந்தவளுக்கு அவன் கொடுக்கும் மரியாதை இவ்வளவுதானா?

அவளை உரிமையுடன் கண்டித்திருக்கலாம். போகவே கூடாது விடமாட்டேன் என்று தடுத்திருக்கலாம். ஆனால்... ஆனால்... அப்படிச் செய்யாமல் இருந்து விட்டானே?

ஏன்... எதனால்...?

திடும்மென அவளுக்கு பூரணி அம்மாள் சொன்னது ஞாபகத்டதிற்கு வந்தது.

வாணி சந்தேகப்படாதே... நீ தான் அவனது காதலி. அவள் விரும்பும் அழகிய முட்டாள்!

பூரணி அம்மா;ள சொன்னதை நினைத்துப் பார்த்தவளுக்கு எரிச்சலாய் வந்தது.

அவள் காதலியா?

அவள் அழகிய முட்டாளா....?

இல்லை... இல்லவே.. இல்லை... அவள் காதலி இல்லை! கூமுட்டை! வாணி கூமுட்டை! என்றெல்லாம் ஓங்கிக் கத்த வேண்டும்போல் அவளுக்கு இருந்தது.

பின் அவள் நினைப்பு சரிதானே?

அவன் பூரணி அம்மாள் சொல்கிறபடி அவன் அவளை காதலித்திருந்தால்... தான் இப்படி வேலையை விட்டு போகிறோம் என்று சொன்னவுடன் துடித்து தடுத்திருக்க மாட்டான்?

இல்லையே...!

தாராளமாய்ப் போ.. என்பது போல் அல்லவா கைகளை காட்டிவிட்டான்.

இந்த பூரணி அம்மாள் தப்பு தப்பாய் எதையோ நினைத்துக் கொண்டு தானும் குழும்பி நம்மையும் அவஸ்தை படுத்துகிறார்களோ?

அன்று முழுவதும்ட எதுவும் தோன்றாமல் வீட்டு மொட்டை மாடித் திண்டில் உட்ககார்ந்து ரோட்டையே வெறித்தாள்.

அவளது இந்த விரக்தியான நிலை கண்டு அத்தை கோதைநாயகி பெரிதும் கவலை கொண்டவளாய், என்ன கண்ணு? அலுவலகத்தில் ஏதும் பிரச்சினையா? என்று வினவ... அதெல்லாம் ஒன்றுமில்லை. நீங்கள் ஓய்வெடுங்கள்... என அவளை சமாளித்து சமாதானம் சொல்லி அனுப்பினாள்.

இரவிலும் அதே கொடுமை அவளை வாட்டிற்று. சத்யேந்திரனை முதல் முதலாய் சந்தித்தது அவனுடன் பேசியது... அவனது செகரட்டரியாய்



அவனுடனே ஓடியாடி பல இடங்களுக்குச் சென்றது.... அவன் முதன் முறையாய் தன் வீட்டுக்அவளை அழைத்துச் சென்றது.... அவள் விரல்களை உரிமையாய்த் தொட்டு இறுக பிணைத்துக்கொண்டது... அலுவலகத்தில் வைத்து திடீரென அவளை அணைத்துப் பிடித்தது. எல்லாம் எல்லாம்... அவள் ஞாபகத்திடிற்கு வந்து அவளை அவஸ்தை படுத்தியது.

நாளை முதல் அவள் சத்யேந்திரனைப் பார்க்கப் போவதில்லை. பார்க்கவும் முடியாது. இனி அவன் அருகாமையும் அவளுக்கு கிடைக்காது.

இனி... அவன்... யாரோ...! அவள் யாரோ...!

நினைத்துப் பார்க்கும் போதே துக்கம் நெஞ்சை அடைக்க கண்ணீர் விட்டு அழுதாள்.

தன்னையறியாமல் பிழியப் பிழிய அழுதபோது அவள் மனது தவித்தது.அந்த தவிப்புடனே கேள்வியை எழுப்பியது....

கடவுளே! நாம் ஏன் இப்படி வருந்த வேண்டும்? பிழியப் பிழிய அழ வேண்டும்...?

எனக்கு என்னவாயிற்று?

சத்யேந்திரன் இல்லாமல்... அவனைப் பார்க்காமல் அவளால் இருக்க முடியாதா?

அப்படியானால்... அப்படியானால்...

அவளும் காதலிக்கிறாளா? சத்யேந்திரனை விரும்புகிறாளா?

கேள்வி அவளுள் பூதாகாரமாய் எழும்பு இன்னொரு மனம் காட்டுக் கத்டதலாய் குரல் கொடுத்தது.

குமுட்டை! புரணி அம்மாளை மறந்து விட்டாயா? என்றது.

சத்யேந்திரனையே உன்னை விரும்பக் கூடாது என அதற்காக திட்டம் போட்டு போராடிக் கொண்டிருக்கிறாள். இதில் நீ விரும்பினால்... உன்னை விட்டு விடுவாளா... உனக்கு அனுமதி கொடுத்து விடுவாளா?

இதெல்லாம் நடக்கக் கூடிய காரியமா?

வேண்டாம் இந்த விபரித காதல் சிந்தனை விட்டு விடு! என்றொரு மனது வேகமா;ய கூறி அவளை திசைதிருப்பியது.

அத்தோடு அந்த நினைப்புகளுக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டு தூங்க முயற்சித்தாள் வாணி.

மறுநாள் விடிந்ததும் பழைய நினைப்புடனே அவசர அவசரமாய் ரெடியாகி டிபன் பாக்ஸை எடுத்துக் கொண்டு கிளம்பியவளுக்கு நிஜம் ஞாபகம் வர சட்டென சோர்ந்தாள்.

பழைய வேலையைத்தான் விட்டாயிற்றே!

இன்று பூரணி அம்மாள் சொன்ன புது கம்பெனிக்குச் செல்ல வேண்டும். அங்கு அவளுக்கு புது வேலை காத்துக் கொண்டிருக்கிறதாம்!

எவ்வித பரபரப்பும் காட்டாமல் சோர்வுடனே கிளம்பி பஸ் பிடித்து அந்த மென்பொருள் கம்பெனியை அடைந்தாள்.

பூரணிஅம்மாள் கொடுத்த விசிட்டிங் கார்டை நீட்டியதும் அவளுக்கு பலத்த வரவேற்புதான்!

கம்பெனியின் எம்.டியை அடுத்த நிமிடமே அவளுக்கு அப்பாயிண்ட்மெண்ட் கொடுக்கப்பட்டது.

அவரை சந்தித்து சில அறிமு கேள்விகளுக்குப் பதில் சொன்ன உடன் உடனடியாய் அவள் கையில் அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர் கொடுக்கப்பட்டது.

பூரணி அம்மாள் சொன்னபடியே சீனியர் ஆபரேட்டர் பதவி. சம்பளமும் இருமடங்கு! சும்மா சொல்லக்கூடாது. இந்த பூரணி அம்மாள் பல கெட்டிக்காரர்தான்!

மகனுக்குத் தெரியாமலேயே தன் சொந்த செல்வாக்கை பயன்படுத்தி இன்டனொரு கம்பெனியில் சொன்னபடியே நல்ல வேலையும் வாங்கிக் கொடுத்துவிட்டார்களே!

அதிசயப்பட்டு வாய் பிளக்கத்தான் செய்தாள் வாணி.

அன்று முதல் நாளானாதால் பாதி நேரம் கம்பெனி பற்றி, அதன் விற்பனை விவரங்கள், கொள்முதல் என நிர்வாகம் பற்றிய அறிமுக விளக்கமே அவளுக்கு நடத்தப்பட்டது.

எல்லாவற்றையும் விளங்குகிறதோ இல்லையோ தலையாட்டியபடிதான் கேட்டுக் கொண்டிருந்தாள்.



அவள் உடம்புதான் அங்கு இருந்ததே தவிர அவள் நினைவு முழுவதும் பழைய விஷயங்களையே நினைத்துக் கொண்டிருந்தது.

இந்டநேரம் சத்யேந்திடிரன் அலுவலகம் வந்திருப்பான். இப்போது பள்ளிக்கூட பேரேடை பார்வையிட சென்றிருப்பான். இப்போது உற்பத்தி பிரிவை நோக்கி சென்று கொண்டிருப்பான். இப்போது அக்கவுண்டிங் செக்ஷனில் உட்கார்ந்து சூபர்வைஸ் செய்வான்... என அவள் வரிசையாய் செய்யும் ஒவ்வொரு விஷயம் பற்றியும் தவிப்பாய் நினைத்துக் கொண்டிருந்தாள் வாணி.

எல்லா நினைப்பும் அவளுள் பசுமையாய் எழுந்து வாட்டி வதைத்துக் கொண்டிருக்க... அதையெல்லாம் விட இனி சத்யேந்திரனை நாம் பார்க்கவே முடியாதா? என்ற நினைப்புதான் அவளை ரொம்பவும் தவிக்க வைத்து வேதனை படுததிடியது.

அதே நினைப்புடன் இடித்த புளி மாதிரிதான் அன்று முழுவதும் புது அலுவலகத்தில் புது வேலையில் உட்கார்ந்திருந்தாள்.

யார் எது கேட்டாலும் வெறும் தலையசைப்புதான்... தேவைப்பட்டால் சுருக்கமாய் ஒன்றிரு வார்த்தைகளில் பதிடில். அதற்குமேல் யாரையும் பார்க்கப் பிடிக்காமல் ரொம்ப நேரம் கனிந்தே இருந்தாள்.

ஒரு வழியாய் ஐந்து மணிக்கு அலுவலகம் முடிந்ததும், தப்பித்தோம் பிழைத்தோம் என முதல் ஆளாய் அலுவலகத்தை விட்டு வெளியே ஓடி வந்து விட்டாள் அவள்.

அலுவலகத்தை விட்டு வெளி வந்து பஸ் ஸ்டாப்பை நோக்கி ஏதேதோெ சிந்தனைகளுடன் கால் போன போக்கில் அங்குமிங்குமாய் பிளாட்பாரம் மாறி மாறி நடந்து கொண்டிருந்தாள்.

அப்போது சரக்கென்று கிறீச்சிட்டபடி பக்கத்தில் வந்து உரசுவது போல் நின்றதுஅந்தக் கார்.

சத்யேந்திரனின் கார.

உள்ளே சத்யேந்திரன் அவனைப் பார்த்ததும் கூம்பிக்கிடந்த அவளது முகம் தாமரையாய் மலர்ந்தது.

என்னம்மா.... இந்த பழைய முதலாளியை ஞாபகம் வைத்திருக்கிறாயா... மறந்து விட்டாயா? என சிரித்தபடி அவன் கேட்க.

டக்கென ஒன்றையும் யோசிக்காமல் வழக்கப்படி செய்வது போல் கார் கதவைத் திறந்து அவன் பக்கத்து ஸீட்டில் உட்கார்ந்தும் கொண்டாள்.

முன்பு அவனிடம் வேலை பார்த்த போது சரி... இப்போது அப்படி இல்லையே.... எந் உரிமையில் இப்படி துணிச்சலாய் திறந்து உள்ளே உட்கார்ந்தாள்?

அவன் அதைப் பற்றியெல்லாம் யோசிக்கும் நிலையில் இல்லை. அவனும் அவளது மனநிலையைப் புரிந்தவன் போல் ஒன்றும் பேசாமல் ரெஸ்ட்டாரண்ட் ஒன்றை நோக்கிச் செலுத்தினான்.

ரெஸ்ட்டாரண்டை அடைந்து இருவரும் இறங்கி ஓரமான ஒரு இருக்கையில் அமர்ந்தார்கள். அவள் இன்னமும் இடித்தபுளியாகத்தான் இருந்தாள்.

சத்யேந்திரன் பணியாளைக் கூப்பிட்டு அவளுக்கு பிடித்த பாதாம் கீருக்கு ஆர்டர் செய்தான்.

குனிந்தே தலையை வதைத்திருந்தவள் எவ்வளவு நேரம் அப்படி இருப்பது என்ற நினைப்பில் மெல்ல நிமிர்ந்தாள்.

சத்யேந்திரன் அவள் நினைத்தபடி அவளையே தான் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

என்ன புது வேலை எப்படி இருக்கிறது? பிடித்திரக்கிறதா? என்றான்.

பிடிக்கவில்லை என்று இவனிடம் எப்படி சொல்ல முடியும்?

பிடித்திருக்கிறது... என்றாள்.

அதன்பின் அவளை சங்கடப்படுத்த விரும்பாமல் அவளது கம்பெனி பற்றிய விபரங்களை மட்டும் கேட்டான்.

அவளும் பதில் சொன்னாள்.

அதற்குள் பாதாம்கீர் வந்துவிட இருவரும் அருந்தினார்கள்.

அவன் வேறு ஏதாவது கேட்டு விடுவானோ? என்ற பயத்திலே வாணி நிமிடங்களை கழித்தாள்.



ஆனால் அவளை சங்கடப்படுத்தாமல் எவ்வித கேள்வியும் கேட்காமல் அவளை திரும்பவும் காரிலேற்றி வீடு வரை கொண்டு சென்று விட்டான். ஒரு சின்ன புன்னகையுடன் கையசைத்தபடி அவன் விடைபெற்று சென்றபோது அவனை புதிராய்த்தான் பார்த்தாள் அவள்.



## 19



இராமன் காட்டுக்குச் சென்றால்தான் பரதனுக்கு பட்டாபிஷேகம் செய்ய முடியும். அவனை அரியணையில் ராஜாவாக ஏற்ற முடியும் என அவனது தாய் கைகேயி நம்பினாள். அதன்படியே தசரத சக்கரவர்த்தியிடம் வரம் கேட்டாள். இராமனை காட்டுக்கு அனுப்பினாள்.

அதுபோல்தான் பூரி அம்மாள் வாணியைச் சொன்னாள். சத்யேந்திரன் அவள் நினைப்பில் காதல் கொண்டு அலைகிறானாம். அவன் மனதை மாற்ற அப்படி மனம் மாறி அவன் மஞ்சரியை மணக்க அவள் விலகிச் செல்ல வேண்டுமாம்.

வெறும் வேலையை விட்டு விலகினால் இப்படித்தான் தேடித் தேடி அவளைப் பார்க்க வருவானாம். தொந்தரவு செய்வானாம் அவளின் இந்த தொல்லையிலிருந்து தப்பிக்க...அவள் உடனே யாரையாவது திருமணம் செய்து கொள்ள வேண்டுமாம். அப்படி அவள் திருமணம் செய்துவிட்டால் இனி இவள் கிடைக்க மாட்டாள் என அவனும் மனம் மாறிவிடுவானாம்!

இது ஒன்றுதான் வழியாம்! வேறு வழி இல்லையாம்!

பூரணி அம்மாள் ஊசியை அல்ல... கடப்பாறையையே மெல்ல மெல்ல அவள் நெஞ்சத்தில் ஏற்ற.... திடுக்கிட்டுப் போய்தான் நிமிர்ந்தாள் அவள்.

என்னம்மா... சொல்கிறீர்கள்.... நான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமா?

ஆமாம்.. வாணி....

யாரை...?

யாரையாவது...? என விட்டேற்றியாய் பூரணி அம்மாள் சொன்னவள் மறுகணமே சுதாரித்து, நீ ஒன்றும் பயப்பட வேண்டாம். நானே உனக்கு ஒரு நல்ல மாப்பிள்ளையாய் பார்த்து கட்டிவைக்கிறேன்...! என்றாள்.

சரிதான்... இதுவேறாயா? ஏதோ கொஞ்சம்அவள் சொல்லவதெல்லாம் வாணி தலையாட்டினால், அதற்காக அவளை ஒரேடியாய் இளிச்சவாய்த்தனம் கொண்டவள் என்று முத்திரை குத்தி விட்டார்களே இந்த பூரணி அம்மா?

துணுக்குற்றுத்தான் வாணி நிமிர்ந்தாள்.

அம்மா... நீங்கள் நினைப்பது போல் கல்யாணம் என்பது சாதாரண விஷயமல்ல....

அது எனக்குத் தெரியாதா வாணி?ஆயிரங்காலத்து பயிராயிற்றே....

பழைய பல்லவியை பூரணிஅம்மாள் பிடிக்க ஆரம்பிக்க அவசரமாய் குறுக்கிட்டாள் வாணி.

அம்மா... நான் அதைச் சொல்லவில்லை. என்னால் இப்படி திடுதிப்பென்று கல்யாணம் செய்துகொள்ள முடியாது.அது பற்றி யோசிக்கும் மனநிலையில் நான் இல்லை.

நீ... சொல்வது புரிகிறது வாணி....ஆனால் என்றாவது ஒருநாள் இதுபற்றி யோசிக்கத்தானே போகிறாய்? திருமணம் பற்றி முடிவெடுக்கத்தானே போகிறாய்...?

இருக்கலாம். அதை அப்போது பார்த்துக் கொள்ளலாம் தானே அம்மா....

வாணி மறுக்க... பூரணி அம்மாள் விடாது விரட்டினாள். இல்லை.... வாணி, நீ நினைப்பது போல் காலமும் நேரமும் நமக்கு எப்போதும் காத்திராது. நாம் தான் கிடைக்கிற சந்தர்ப்பத்தை பயன்படுத்தி நல்ல ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும், மேலும்....

சொல்லுங்கள்...

இதுபற்றி.... இப்படி நான் திடுதிப்பென்று பேசவும் கூடாது. உன்னிடம் கேட்கவும் கூடாது. நிதானமாய் உன்னை யோசிக் விட்டே பேசவேண்டும்.



அதுவும் இங்கு வைத்து அல்ல. உன் வீட்டில் வைத்து வரும் ஞாயிறு உன் வீட்டுக்கு வருகிறேன். உன் அத்தை கோதைநாயகியிடமும் பேசுகிறேன். நாம் ஒரு நல்ல முடிவு எடுப்போம்.... என்றபடி தன் நீண்ட உரையை முடித்து கிளம்பிவிட்டாள் புரணி அம்மாள்.

வாணிதான் அதன்பின் அவஸ்தையாய் சங்கடமாய் நேரத்தைக் கழித்தாள். இந்த பூரணி அம்மாள் சொன்னார்கள் என்பதற்காக அவர்கள் சொல்கிற மாதிரியெல்லாம் ஆடி வேலையைக் கூட விட்டாயிற்று.

இனியும் தொடர்ந்து வற்புறுத்தினால் எப்படி?

இந்த விஷயத்தில், கண்டிப்பாக உங்களுக்கு உதவமுடியாது. என்னை விட்டு விடுங்கள்... என சொல்லிவிட வேண்டும் என்று உள்ளூர வாணி முடிவெடுத்திருந்தாள்.

இங்கு இப்படி விஷயங்கள் நடந்து கொண்டிருக்க.... மறுநாள் வழக்கம் போல் அலுவலகம் முடிந்து கிளம்பியவள் பஸ் ஸ்டாப் ஓரமாய் அவள் வருகையை எதிர்பார்த்து நிற்கும் சத்யேந்திரனின் காரை கோபமாகவே பார்த்தாள்.

என்ன நினைத்துக் கொண்டிருக்கிறான் இவன்?

தினம் தினம் இவன் வருவதும் பார்க், பீச் என அழைத்துச் செல்வதும்.... என்ன நினைப்பில் இப்பியெல்லாம் செய்கிறான்?

இன்று இரண்டில் ஒன்று பார்த்து விடவேண்டும் இவனின் செய்கைக்கெல்லாம் முடிவு என்னவென்று கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

அவள்... பூரணி அம்மாள் என்னடா வென்றால் புதுசு புதுசாய் குண்டுகளைப் போட்டு அவளைக்; குழப்புகிறாள் என்றால்.... இவனும் தன் பங்குக்கு இப்படி புதிர் நடவடிக்கைகளால் குழம்புகிறேனே! விடக் கூடாதுஅப்.1 இவர்கள் இஷ்டம் போல் உருட்டி விளையாட என் தலைதானா கிடைத்தது?

அதே வேகத்துடன் டக்கென கார் கதவைத் தறந்து அவனுக்கு பக்கத்து ஸீட்டில் உட்கார்ந்து டொப்பென (அவனது கோபம் தெரி வேண்டுமாம்) கதவை ஓங்கிச் சாத்தினாள்.

உங்களிடம் நிறைய பேச வேண்டும்.... என்றாள் அதே இறுக்கமான குரலில்.

அவன் சத்யேந்திரன் மூக்கு நுனி சிவக்கும் அவள் கோபத்தை எல்லாம் ரஸித்துப் பார்த்தான்.

தாராளமாகப் பேசுவோம்... என்றபடி காரை பொட்டானிக் கார்டன் என்று சொல்லப்படும் பெரிய பூங்காவை நோக்கி செலுத்தினான்.

அரை மணி நேர பயணத்திற்குப் பின் கார் பூங்காவை நோக்கி செலுத்தினான்.

அரை மணி நேர பயணத்திற்குப் பின் கார் பூங்காவல் நின்றது.

வரும் வழி நெடு அவனிடம் என்னென்ன பேசவேண்டும் எப்படியெல்லாம் பேச வேண்டும் என நினைத்திருந்த வாணி அதே வேகத்தில் இறங்கி அவனிடம் பேச்சை ஆரம்பித்தாள்.

மிஸ்டர் சத்யேந்திரன்... என்று ஆரம்பித்தாள் தனது கோபமான குரலில்.

அவள் சொன்னதைக் கேட்டு சத்யேந்திரனே ஒரு கனம் திடுக்கிட்டுப் போனான். சார்... மோர்... என்று சொல்லி கெஞ்சுபவளுக்கு தனது பெயரைச் சொல்லி அழைக்குமளவுக்கு தைரியம் வந்து விட்டதா? என நம்பமுடியாமல் தான் பார்த்தான்.

ஆனால் அதையெல்லாம் வாணி பொருட்படுத்தாதவளாய் அடுத்த கேள்வியை வீசினாள்.

இதோ.... பாருங்கள்... உங்களிடம் வரிசையாய் சில கேள்விகளை நான் கேட்க வேண்டியிருக்கிறது. நீங்க்ள டக்டக்கென பதில் சொல்ல வேண்டும் புரிகிறதா?

கைகளைக் கட்டிக் கொண்டு கோபம் குறையாத இறுக்கத்துடன்அவள் கேட்க அவனும் பவ்யத்துடன் கைகளை கட்டிக் கொண்டா;ன.

உத்தரவு... மகாராணி. கேளுங்க்ள... என்றான்.

நீங்கள் இப்படி நடந்து கொள்வதற்கு அர்த்தம் என்ன...



சொல்லுங்கள்? என்றாள் முதல் கேள்வியாய்.

இப்படி என்றால்... எதை தாங்கள் கேட்கிறீர்கள் கொஞ்சம் விளக்கமாகச் சொல்லுங்கள் மேடம்....

அதாவது... நான் உங்கள் கம்பெனியை விட்டு வெளியே சென்று விட்டேன். இன்னமும் ஏன் என் பின்னால் வர வேண்டும்? எதற்காக தினம் காரில் வந்து காத்திருக்கிறீர்க்ள....?

ஓ...அதுவா...? நட்பு.... நட்பு முறையில் என்று வைத்துக் கொள்ளேன். நல்ல நண்பர்களை நாமே தேடிப் போய் பேசுவது இல்லையா? அதுபோல் தான் இதுவும்....

சாதாரணமாய் அவன் விளக்கம் சொல்ல அவளுக்கு எரிச்சலே வந்தது.

இந்த விளையாட்டுப் பேச்செல்லாம் இங்கு வேண்டாம். சீரியஸாகவே சொல்லுங்கள்... என்றாள் அதே கண்டிப்புக் குரலில்.

அவன் தலையை மேலும் கீழும் அசைத்தவன், நானும் சீரியஸாகத்தான் சொல்கிறேன். நீ என் செகரட்டரியாக வேலை பார்த்ததால் நமக்குள் நல்ல நட்பு இருந்தது. இப்போது வேலைக்காக நீ இன்னொரு கம்பெனிக்குச் சென்றாலும் அந்த நட்பு அப்படியே இருக்கிறது நல்ல விதமாக தொடர்கிறது....

அவன் சொன்ன விளக்கம் குழப்பத்தில் அவளை சுற்றியடிக்க....அவள் கேட்பதற்கு முன்அடுத்த கேள்வியை அவன் வீசினான்.

நான் காரில் வந்து கூப்பிட்டது பற்றி இவ்வளவு கேட்கிறாயே...? நீ... அப்படி நான் வந்து அழைத்ததும் மறுக்காமல் எப்படி காரில் ஏறினாய்? எதனால் வந்தாய்?

அவன் கேள்வியை அடுக்க அவளுக்கு சுரீரென்றது.

அவன் கேட்பது சரிதானே! அவன் கூப்பிட்டால் இவளுக்கு புத்தி எங்கே போயிற்று? அதற்காக காத்திருந்தவள் போலத்தானே குதி போட்டுக் கொண்டு ஏறினாள்?

அதற்கு அவள் என்ன காரணத்தைச் சொல்வாள்? என்ன விளக்கத்தைச் சொல்வாள்?

அவள் முதல் முறையாய் தடுமாற அவளே அதற்கான பதிலையும் விளக்கமாகச் சொன்னான்.

அதாவது... நட்பு தானே? அதே நட்பை என்னிடம் நீ பாராட்டுவவதால்தான்... நீயும் நான் அழைத்ததும் மறுபேச்சின்றி கிளம்பி வந்து விட்டாய் என்ன நான் சொல்வது சரிதானே?

அவன் விளகக்கமளித்து கேட்கவும் அவள் திணறத்தான் வேண்டியிருந்தது. அ... அ... ஆமாம்... நீங்கள் செல்வது.. சரி... நட்புதான்! என்றாள் அவளையறியாமல்.

அடுத்து என்ன கேள்வியைக் கேட்க என தடுமாற்றமும் அவளுள் ஏற்பட்டது. பேசாமல் பூரணி அம்மாள் சொல்லும் விஷயத்தை எல்லாம் பட்டென இவனிடம் போட்டு உடைத்தால் கூட என்ன..? என்று அவளுக்குத் தோன்றியது.

ஆனால்... அது சரியல்ல... என இன்னொரு மனது அவளுள்ளே எழுந்து தடுத்தது. ஒன்று பூரணி அம்மாள் சொல்கிறபடி செய்ய முயல வேண்டும். இல்லை உங்கள் சொல்படி நடப்பது என்னால் இயலாது என்று சொல்லி விட்டு நகன்று விட வேண்டும்.அதைவிட்டு விட்டு பூரணி அம்மா;ள சொல்வதை இவனிடம் சொன்னால்.... அது தாய்க்கும் மகனுக்கும் இடையே சண்டையை மூட்டி விட்டதுபோல் அல்லவா ஆகிவிடும். அந்தப் பழி நமக்கு எதற்கு?

யோசித்தவள் வேறு என்ன செய்யலாம் என தனது தலையைச் சாய்த்து விழிகளை விரித்து சிறிது நேரமாய் அதே போஸில் நின்று கொண்டிருக்க...அவளது அந்த கோலத்தைப் பார்த்து ரஸித்தவாறே சத்யேந்திரன் அவள் பக்கம் நெருங்கினான்.

விழிகளை பிரித்து ஏதோ கப்பலை கவிழவிட்டதுபோல்இருக்கும் இவளை என்ன செய்யலாம்? என்ற யோசனை அவன் முகத்தில் ஓடிற்று.

அப்படியே இன்னும் நெருக்கமாய் நெருங்கி வந்தவன் சட்டென அவளை இறுக அணைத்தான்அப்படி அவன் அணைப்பது கூட தெரியாமல் உணர்வில்லாமல் தான் கிடந்தாள் அவள்.அவன் மேலும் இறுக்கி அவளை தன் நெஞ்சோடு ஒரு உலுக்கு உலுக்கிய போதுதான் அவளுக்கு உணர்வே வந்தது.



என்ன இது கோலம்...? சுகமாய் அவன் நெஞ்சினில் சாய்ந்து கொண்டு....

பட்டென துடித்துப்போய் விலகினாள்.

என்ன.... என்ன... செய்து கொண்டிருக்கிறீர்கள்...? என்றாள் தடுமாற்றமாய்.

அவள் முகம் சிவந்து போவதை வெகுவாய் ரஸீத்தவன். என்ன செய்ய வேண்டுமோ அதைத்தான் செய்து கொண்டிருக்கிறேன்... என்றான்அதியாக.

என்ன... என்ன... பேச்சு இது? என்றாள் அதே கோபமாய்....

அவன் கைகளை விரித்தான்.

புரியவில்லையா...? குழப்பமாய் குழம்பித் தவிக்?கும் உன்னை ஆறுதல் படுத்தும் விதமாய் ஒரு அணைப்பு அணைத்தேன். இதுவும் நட்பான அணைப்புதான்...! அரவணைப்புதான்...!

அவனது விளக்கம் அவன் அணைத்டதவைிட எரிச்சலாய் அவள் கோபத்தை அதிகப்படுத்தியது.

நான் ஒன்றும் நீங்கள் சொல்வதை எல்லாம் நம்புவதற்கு முட்டாள் இல்லை. உண்மையை சொல்லுங்கள் ஏன் என்னை அணைத்தீர்கள்? அந்த உரிமையை யளார் உங்களுக்கு கொடுத்தது?

அவள் துடித்துக் கேட்க அவளது கேள்விக்கு பதில் சொல்லாமல் தனது சுட்டு விரலை அவளை நோக்கி காட்டினான்.

நீதான்...! என்றான்.

என்ன நானா?

அவள் அதிர்ச்சியுடன் கேட்க பெரிய தலையசைப்பு செய்தான்.

நீயேதான்..!

நானா உங்களை இப்படி அணைக்கச் சொன்னேன் என்ன உளறுகிறீர்கள்?

நீ அணைக்கச் சொல்லவில்லை. ஆனால் அனுமதி கொடுத்தாயே...?

அனுமதி கொடுத்தேனா..? எப்போது...? என்ன பேத்தல் இது?

அவன் முன்னால் நின்றவன் கைகளைக் கட்டியபடி குனிந்து அவள் முகத்தைஉற்றுப் பார்த்தான்.

நீ... நான்ட உன்னை தொட்டதும்... அதாவது என் கை ஸ்பரிசம் பட்டதும் என்ன செய்திருக்க வேண்டும்? பட்டென அதை தட்டி என் கையை உதறியிருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால் என் கை பின் வாங்கியிருக்கும். முன்னேறி உன்னை அணைக்குமளவுக்குப் போயிருக்காது. ஆனால்... ஆனால்... நீ அப்படிச் செய்யவில்லையே....? அனுமதித்து விட்டாயே...? அதைத்தான் சொல்கிறேன்...!

பெரிய லெக்சர் கொடுத்து முடித்தபடி அவளையே குறும்பாய் பார்க்க அவளுள்ளும் குறுகுறுத்தது.

அவன் சொல்வது போல் தடுத்திருக்கலாமே? ஏன்... புத்தி... எங்கே போயிற்று? அவன் ஒவ்வொரு முறையும் அவளிடம் இப்படி வரம்பு மீறும்போது... தடுக்காமல் சும்மா இருப்பது... ஏன். எதனால் இந்ததடுமாற்றம்..?

அப்படியானால்... நிஜத்தில் இதையெல்லாம் உள்ளூர விரும்புகிறாளா?

அவளையறியாமல் மனதில் ஏங்கி அவனது அணைப்பை ரசிக்கிறாளா?

இல்லை.. எல்லோரும் சொல்கிறார்களே... காதல் என்று.... அந்தக் காதல் கடலில் தொபுக்கடீர் என விழுந்து அவளையறியாமல் அவனை காதலிக்க ஆரமபித்து விட்டாளா?

சத்யேந்திரனை அவள் காதலிக்கிறாளா?

அவள் அப்படியே விழிகளை விரித்தபடி அசையாமல் நிற்க... செல்லமாய் அவள் தலையை லேசாய் ஒரு தட்டு தட்டினான் சத்யேந்திரன்.

உன் அழகான தலைக்குள் இருக்கும் அந்த சின்ன மூளையை போட்டு ஏன் இப்படி குழம்பி ரொம்பவும் வதைக்கிறாய்? இப்போது உனக்கு என்னதான் தெரியவேண்டும்? சொல்...! என்றான் லேசான குரலில்.



இப்போது அவளும் நிதானமானாள்.

நீளமாய் மூச்சையிழுத்து தன்னை அசுவாசப்படுத்தினாள்

சார்.... என்றாள் அழுத்டதமான குரலில்.

ம்ம்... கேளு...

நான் கேட்பதற்கு கொஞ்சம் தெளிவாய் எனக்கு புரிகிற மாதிரி பதில் கூறுங்கள்... ப்ளீஸ்....

ம் ம்....

நீங்கள் ஏன் இப்படி நடந்து கொள்கிறீர்கள்? நான் உங்கள் அலுவலக வேலைை விட்டு நின்று விட்டேன். இனியும் என்னைத்தேடி என் பின்னாலே வருகிறீர்கள். கேட்டால் நட்பு அது... இது என்று எதையோ சொல்கிறீர்கள். அதனால் இனி"ம் குழப்பமாய் உண்மையைச் சொல்லுங்கள்.....

அவள் குரல் இறங்கி கெஞ்சுவது போல்தான் கேட்டாள்.

அவனும் அவளது நிலையை பரிதாபமாய்த்டதான் பார்த்தான்.

ம்ம்... சரி... நீ இவ்வளவு கேட்பதனால் நானும் அந்த உண்மையை சொல்லட்டுமா?

சொல்லுங்கள்....

என் மனதிடில் என்ன இருக்கிறது... நான் என்ன நினைக்கிறேன்... என்பதைத் தெரிந்து கொள்ளத்தானே... நீ விரும்புகிறாய்... கேட்கிறாய்?

அ...அ...ஆ... ஆமாம்... அவள் திக்கித் திணறிச் சொல்ல... நிதானமாய் உற்று அவள் கண்களைப் பார்த்தான்.

அதற்கான சரியான பதில் என்ன தெரியுமா?

சொல்லுங்கள்....

உள்ளபடி உன் மனதில் என்ன இருக்கிறதோ... நீ என்ன நினைக்கிறாயோ...அதையே நானம் எண்ணுகிறேன்.... நினைக்கிடிறேன். அதனால் நீ என்னை இப்படி கேள்வி கேட்பதற்குப் பதில் கண்ணாடி முன் நின்று உன்னையே கேள். உனக்குப் புரியும்... எல்லாம் விடைகளும் தெரியும்...!

பீடிகையாய் சொல்லிவிட்டு அதே வேகத்தில் விறுவிறுவென அகன்றான் அவன்.



## 20



சத்யேந்திரனிடம் பேசினால் ஏதாவது விடிவு கிடைக்கும் பிரச்சினை தீரும் என நம்பித்தான் வாணி போனாள்.

ஆனால் அவனோ பிரச்சினை என்னும் குட்டையை குழப்பி மீன் பிடிப்பவனாகவே அவளிடம் பேசியது போல் உணர்ந்தாள்.

அவன் பேசியதிலும் சரி அவன்ட சொன்ன கதையிலும் சரி அவளால் ஒன்றையும் புரிந்து கொள்ள முடியவில்லை. தெளிவும் பெற முடியவில்லை. குழப்பமே மிஞ்சியது.

அந்த குழப்பத்தை அதிகரிக்கும் வகையில் தினம் பூரணி அம்மாள் வேறு வந்து, திருமணம் பற்றி முடிவெடுத்தாயா வாணி? என நச்சரிக்க ஆரம்பித்து விட்டாள்.

ஒரு கணம்யோசித்துப் பார்த்தால் வாணிக்கு பூரணி அம்மால் இல்லாத ஒன்றை இருப்பதாய் நினைத்து மேலும்மேலும் கட்டிடம் எழுப்புவதாய்த் தோன்றியது.

அதை எத்டதனையோ முறை அவள் விளக்க முயன்றாலும்அவளது கருத்தை நம்ப மறுத்தாள் பூரணி அம்மாள்.

இல்லை வாணி.... அவன் விரும்புவதை உன்னைத்தான் எனக்குத் தெளிவாகத் தெரியும்....

ஐயோ.! எதை வைத்து அப்படிச் சொல்கிறீர்கள்?உங்களிடம் வெளிப்படையாகச் சத்யேந்திரன் இதுவரை சொல்லியிருக்காரா?

இல்லை. ஆனால் அவளை பெற்றவள் நான்தானே? அவனது ஒவ்வொரு செய்கைக்கும் அர்த்தம் தெரியும்...

சரி... அம்மா... நீஞ்கள் சொல்கிறபடியே வைத்துக் கொள்வோம்.



நீங்கள் என்னிடம் சொல்வது போல் அவரை ஒருநாள் உட்கார வைத்து விளக்கமாகச் சொன்னால்... புரிந்து கொள்ள மாட்டாரா? மஞ்சரியை திருமணம் செய்து கொள்வது பற்றி யோசிக்க மாட்டாரா?

அதற்கும் பூரணி அம்மாள் அலுத்தாள்.

ஒரு முறை...அல்ல... எத்தனையோ முறை சொல்லிப் பார்த்து விட்டேன். அவன் கேட்க மறுக்கிறான். பிடிவாதம் பிடிக்கிறான்....

பிடிவாதம்...என்றால்... என்னை... வாணியை கட்டப் போகிறேன் என்றா... பிடிவாதம்?

பூரணி அதையும் மறுத்தாள்.

அப்படி இல்லை....அவன் மனதிடல் ஒரு பெண் இருக்கிறாளாம்... அவளைத்தான் கட்டுவானாம். அது யாரென்றும் இப்போ சொல்ல மாட்டானாம். சமயம் வரும் போது சொல்வானாம்...!

விஷயம் இப்படி இருக்க...அது நான்தான் என்று எப்படி முடிவு பண்ணினீர்கள் அம்மா?

ஆற்றாமையாய் வாணி கேட்க பூரணி அம்மாள் அதை உறுதியைத் தொடர்ந்தாள்.

இதில் குழப்பமே இல்லை வாணி, அவன் விரும்புவது உன்னைத்தான். நீ மட்டும் நான் சொன்னபடி செய்தான் அவன் மனம் மாறி விடுவான். மஞ்சரியை திருமணம் செய்து கொள்வான்....

வாணிக்கு அதற்கு மேல் பூரணி அம்மாளிடம் என்ன பேசுவதென்று தெரியாது.

உதடுகளை இறக்க மூடிக் கொண்டு பேசாமல் இருந்து விடுவாள்.

ஆனால் பூரணி அம்மா;ள அவளை மூளைச் சலவை செய்வது போல் தான் தினம் நேரம் ஒதுக்கி இதுபற்றி பேசினாள்.

வாணிக்குத்தான் என்ன செயள்வதென்று புரியவில்லை.

பூரணி அம்மாள் அவளிடம் பேச்சு வார்த்தை நடத்திக் கொண்டே இன்னொருபுறம் கல்யாண வேலைகளை முடிக்கி விட்டாள். தரகர் மூலம்

அவள் ஏற்பாடு செய்திருந்த மாப்பிள்ளை வீட்டார்கள்,அவர்கள்குடும்பத்துப் பெண்கள்,ஒருநாள் அன்பு இல்லத்துக்கே வந்து வாணியிடம் பேசும் சாக்கில் பெண் பார்க்கும் படலமும் நடந்தது.

இரண்டு நாள் கழித்து பூரணி அம்மாள் சொன்னபோது தான் அவளுக்கு அந்த விஷயமே நபுரிந்தது.

வாணி நேற்று உன்னிடம் சில பெண்கள் பேசி விட்டுச் சென்றார்களே...அவர்கள்தான் நாம் சம்பந்தம் பேசுகிற மாப்பிள்ளை வீட்டுப் பெண்கள் . அவர்களுக்கு உன்னை ரொம்பவும்பிடித்துப் போயிற்றாம்..!

பூரணி அம்மாள் சொன்னதைக் கேட்டு செய்வதறியாமல் திணறத்தான் செய்தாள் வாணி.

இன்னொரு நாள் அவளை பொருட்கள் வாங்குவதற்காக ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் அழைத்துச் சென்று விட்டு... அங்கு உள்ள அலுவலகம் ஒன்றுக்கு வட்டிச் சென்றாள்.

அங்கு வாட்டசாட்டமாய் ஒரு இளைஞர் தென்பட அவர்களைப் பார்த்ததும் பெரிதாய் கும்பிடு போட்டான்.... அவன்.

பதிலுக்கு நமஸ்கரித்துக் கொள்ள வாணி... அவர்தான் உனக்கு பார்த்திருக்கும் ஷிப்பிங் கம்பெனி மாப்பிள்ளை...! என அவள் காதுகளில் சொல்லி அவளை மேலும் அதிர வைத்தாள் பூரணி அம்மாள்.

வாணி முகம் சிவந்து குனிய... மாப்பிள்ளையை நன்றாக பார்த்துக் கொள் வாணி... எனக்கூறி அவளை திணறச்செய்தாள் பூரணி அம்மாள்.

வாணிக்கே என்ன செய்வதென்று தெரியவில்லை. தலைக்கு மேல் வெள்ளம் போன கதையாய்த்தான். அவள் நிலைமை நாளுக்கு நாள் மாறிக் கொண்டிருந்தது.

பேசாமல் பூரணி அம்மாளிடம், தயவு செய்து கல்யாணப் பேச்சு பேசாதீர்கள் எனக்கு அதில் விருப்பமில்லை என பிடிவாதமாய்க் கூறி நிறுத்தி விடலாமா என்று கூற நினைத்தாள்.

அப்படிச் சொன்னால் அவர்களால் என்ன செய்துவிட முடியும்... என்ன நடவடிக்கை எடுத்து விடமுடியும் என்பதையும் சிந்தித்துப் பார்த்தாள்.



ஒரு நாள் பேச்சு வாக்கில் பூரணி அம்மாளிடம் அதையும் சொல்லிப் பார்த்தாள். ஆனால் அதற்கு முகம் மாறி இறுக்கமாய் பூரணி அம்மாள் சொன்ன பதில் அவளை அப்படியே அதிர்ச்சியடையச் செய்து விட்டது.

வாணி.. திருமணத்திற்கு சம்மதிடிக்காமல் மறுத்துவிட்டால்... பூரணி அம்மாளும் மனம் மாறி விடுவாளாம்! வாணி மூலம் ஆரம்பித்து நிர்வகித்து வரும் அன்பு இல்லத்திற்கான பராமரிப்பு செலவுகளை உடனே நிறுத்திவிடுவாளாம். அப்படியே அதை காலப் போக்கில் மூடியும் விடுவாளாம் அவளுக்கு அந்த அனாதையான ஆதரவற்ற சிறுவர் சிறுமிகளின் வாழ்க்கை முக்கியமில்லையாம். தனது மகனின் எதிர்காலம் தான் முக்கியமாம்!



## 21



பூரணி அம்மாள் இம்முறை சொன்னதைக் கேட்டு ஒரேடியாய் அதிர்ந்துதான் போனாள் வாணி.

பூரணி அம்மாள் முதலில் லேசாய் சாதாரணமாய் சொன்னவள், வாணி திருமண் பற்றி எதுவும் சொல்லாமல் இருப்பது கண்டு வெகுண்டு, பிரம்ம அஸ:திரம் எடுப்பது போல் அந்த ஆயுதத்தை எடுத்துவிட்டாள்.

வாணி கல்யாணம் செய்து கொள்ள சம்மதிக்காவிடில் உடனடியாக அன்பு இல்ல பணிகள், பராமரிப்பு செலவுகள் எல்லாவற்றையும் நிறுத்திவிடப் போவதாய் சொல்லிவிட்டாள்.

அதிர்ந்து, என்னம்மா.... சொல்கிறீர்கள்? நம் அன்பு இல்லத்தில் இருநூறு பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்களது எதிர்காலம் என்னாவது? என துடித்து வாணி கேட்டபோது பூரணி அம்மாளின் முகம்இறுகியது.

எனக்கு என் பிள்ளை சத்யேந்திரனின் எதிர்காலம் தான் முக்கியம். மற்ற விஷயங்களைப் பற்றி எதுவும் கவலையில்லை.... என்றாள் விட்டேற்றியாக.

முதலில் இதை விளையாட்டாய் ஏதோ கோபத்தில் தன்னிடம்சொல்வதாய்த் தான் வாணி நினைத்தாள்.

ஆனால் அடுத்து வந்த நாட்களில் தன்னிடம் கொஞ்சமும் முகம் கொடுத்து பேசாது அதே இறுக்கத்தோடு செல்லவும் அவளுக்கு விஷயத்தின் தீவிரம் புரிந்தது.

அதே போல் அன்பு இல்லத்திற்?கு தேவையான மளிகைச் சாமான்கள் வாங்குவதற்கான செக் புக்கில் கையெழுத்திடாமலும் பூரணி அம்மாள் தாமதப்படுத்த வாணி தாங்க முடியாதவளாய் அவளிடம் போய் நின்று விட்டாள்.

அம்மா, இப்போது... நான் உங்களுக்கு என்ன தான் செய்ய வேண்டும் சொல்லுங்கள்? என்றாள்.

பூரணி அம்மாளும் தாமதிக்கவில்லை. நேரிடையாக விஷயத்திற்கு வந்தாள்.

இதோ..... பார்....வாணி, நான் ஒன்றும் மோசமான வழியை காட்டவில்லை. நல்ல வழியை நல்ல மாப்பிள்ளையை தேர்ந்தெடுத்துதான் உன்னைக்கட்டிக்கொள்ளச் சொல்கிறேன். நீ தான் சொல்கிறபடி கட்டிக் கொண்டால் உனக்கு சிறந்த எதிர்காலம் அமையும், நீயும் எனது முழு ஆதரவோடு அன்பு இல்லப் பணிகளை உன் வாழ்க்கை முழுவதும் கவனிக்கலாம். என்ன சொல்கிறாய்?என்றாள்.

வாணி அமைதியாய், நான் கல்யாணத்திற்கு சம்மதிக்கிறேன். நீங்கள் ஏற்பாடு செய்யுங்கள்...என்றாள்.

அன்பின் வாணி எதுபற்றியும் யோசிக்கவில்லை. எது நடந்தாலும்எப்படிப் போனாலும் சரி என்ற மனநிலைக்கு வந்துவிட்டாள்.

அவளைப் பொறுத்தவரை அன்பு இல்லப் பணிகளும், குழந்தைகளும் தான் முக்கியம். யாருமில்லாமல் ஆதரவற்ற அந்த அனாதைப் பிஞ்சுகளின் நல்வாழ்விற்காக எவ்வித தியாகத்தையும் அவள் செய்ள்யலாம்.... என தீர்மானமான முடிவும் எடுத்தாள்.

அவள் இப்படிச் சொல்லி சம்மதித்த விஷூயம் எப்படியோ சத்யேந்திரனின் காதுகளையும் எட்டியது. அன்று மாலையே அவள் பணி முடிந்து கிளம்பும் சமயமாய் எதிரில் வந்து விட்டான் அவ்ன.

என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய்.... உன் மனதிடில்? என



கோபமாய் கேட்டவன் எவ்வித சலனமுமில்லாமல்தான் பார்த்தாள் வாணி.

அவள் எதுவும் பேசாமலிருக்க அவளை அப்படியே உலுக்கினான்.

பதில் சொல் உன்னைத்தான் கேட்கிறேன்.... என்றான் கோபமாய்;.

வாணி துடிடத்த உதடுகளை இறுக்கமாய் அடக்கிக்கொண்டாள்.

இவனிடம் விளக்கம்சொல்லி தர்க்கம் செய்வதை விட பேசாமலிருப்பதே மேல்... என எண்ணினாள்.

ஆனால் அவன் விடாதுஅவளை நச்சரிக்கவும் வேறு வழியில்லாது அந்த பதிலையும் சொன்னாள்.

நீங்கள் இது விஷூயமாக உங்கள் தாயாரைப் பார்த்து கேட்பது நல்லது. அவர்கள்தான் எனக்கு இந்த மாப்பிள்ளையைத்ட தேர்ந்தெடுத்து கல்யாண ஏற்பாடுகளை செய்து கொண்டு வருகிறார்கள். நீங்கள் உங்கள் சந்தேகங்களை அவர்களிடமே கேட்டுத் தெளிவுபெறுங்கள்....

கண்களில் கோர்த்த நீர்த்துளிகளை அவசரமாய் மறைத்தவாறு அவள் சொன்னபோது கோபம் குறையாமலே அவன் அவளை முறைத்தான். பின் அதே வேகத்திலே விருட்டென கதவைச் சாத்தியபடி வெளியேறினான்.

வாணி அவன் செல்வதையே வெறித்துப் பார்த்துக் கொண்டு ரொம்ப நேரம் அசையாமல் அப்படியே இருந்தாள்.

அன்றைய இரவும் தூக்கம் வராமல் நினைவுகள் அவளை விரட்டியது. சத்யேந்திரன் வந்தது.... அவள் முடிவைக் கண்டு ஆவேசப்பட்டது. எல்லாம் அவளை பெரிதும் வாட்டியது. தனக்காக இவ்வளவு தூரம் அவன் கோபம் கொண்டது அவளை யோசிக்கவும் வைத்தது.

அப்படியானால்.... உண்மையில் சத்யேந்திரன் காதலிப்பது அவளைத்தானா?

அதனால்தான் இதை அறிந்து பூரணி அம்மாளும் இந்த மிரட்டு மிரட்டி அவளை கல்யாணத்திற்?கு சம்மதிக்க வைத்திருக்கிறார்களா?

ஆனால் அப்படி எழுந்த நினைப்புகள் உடனே உதறித்தள்ளினாள்.

இனி இருது பற்றி இப்படி சிந்திப்பது கூடாது. அதில் எவ்வித

பிரயோஜனமும் இல்லை.

பூரணி அம்மாளிடம் ஒப்புக் கொண்டபடி கழுத்தை அவர்கள் பார்த்து ஏற்பாடு செய்திருக்கிற மாப்பிள்ளைக்கு நீட்ட வேண்டியதுதான்.

வேறு எது பற்றியும் சிந்திப்பதோ, நடந்தவைகளுக்காக கவலைப்படுவதோ... இனி அர்த்தமில்லாதது தான்...!

திடமான முடிவுக்கு வந்த வாணி மனதை கல்லாக்கிகொண்டாள். அதன்பின் வந்த நாட்களில் ஒரு இயந்திரம் போல்தான் நடமாடினாள். செயற்கையாய் பேசினாள். சிரித்தாள். அவளுக்கென்று சொந்தமாய் மூளை என்ற ஒன்று இல்லாதது போலவே ஆகிவிட்டாள். தன்னையும் ஆக்கிக் கொண்டாள்.

பூரணி அம்மாளும் சும்மா இருக்கவில்லை. தன் பங்கிற்கு வேலைகளை கவனிக்க ஆர்மபித்து கல்யாண ஏற்பாடுகளில் தீவிரமானாள்.

நல்ல முகூர்த்த தேதி குறிக்கப்பட்டு வாணியின் வேண்டுகோள் படி எளிமையான கல்யாண அழைப்பிதழும் அடிக்கப் பட்டது. நகரின் முக்கிய திருமண மண்டபம் ஒன்று புக் செய்யப்பட்டு கல்யாண வேலைகள் மும்முரமாய் நடக்க அரும்பித்தது.

எல்லா ஏற்பாடுகளையும் பூரணி அம்மாளே முன் நின்று கவனித்தாள். சூப்பர்வைஸ் செய்தாள். வாணி தன் பங்கிற்கு ஏதோ நடைப்பிணம் போல்தான் நடமாடிக்கொண்டிருந்தாள்.

நல்லவேளையாய் அதன்பின் சத்யேந்திரன் அவளைப் பார்க்க வரவும் இல்லை. அடித்து வந்த அழைப்பிதழ்களைக் கூட அவளே சென்று கொடுத்து அழைக்கவிருப்பமில்லாமல் அத்தை கோதைநாயகி மூலமாகவே கொடுக்கச் செய்தாள்.

நாட்கள் வேகமாய் நகரந்து முகூர்நத்த நாளும் நெருங்கி விட்டது.

இதோ.... இன்று அவளக்கு மணநாள்.

அதிகாலையிலே குளித்து முடிந்து...அலங்கரிக்கப் பட்டு மணமகள் கோலத்தில் அவள்.

செயற்கையான புன்னகையை ஓட விட்டு சிரிக்க முயன்றாள். தனக்கு





எவ்வித வருத்தமுமில்லாதது போல் பாவனையை வைத்துக் கொண்டாள்.

பூரணி அம்மாள் கூடவே நின்று மணப்பெண் தாயார் போல் அவளைக் கவனித்து நடமாடியது அந்த நிலையிலும் அவளை நெகிழச் செய்தது.

இதோ.... மண்டபத்திடிற்கு அழைத்துச் செல்லப்பட்டு மணமேடையில் அவள்!

குங்குமமாய் சிவந்த அழகோடு தலையை குனியவும் வைத்துக் கொண்டா;ள.

யார்... யாரோ... பேசுவது... சிரிப்பது... நலம்...விசாரிப்பது... என விதவிதமான ஒலிகள், கல்யாண மேளச்ட சப்தங்கள் அவள் காதுகளில் விழுந்தது.

எதற்கும் சலனப்படாதவள் போல்தான் அசையாமல் உட்கார்ந்திருந்தாள்.

சத்யேந்திரனும் இங்கு வந்திருப்பான். தன்னை இந்தக் கோலத்திவல் பார்த்துக் கொண்டிருப்பான் என்ற நினைப்பெல்லாம் அவளையறியாமல் உள்ளே ஓடியபோது... சிரமப்பட்டு அடக்கிக் கொண்டா;ள. அவளை மேலும் சிந்திக்க விடாதபடி.... முகூர்த்த வேளை நெருங்கியது. பக்கத்தில் மாப்பிள்ளையளாய் மணமகன் உட்கார... மந்திரங்கள்முழங்கியது. அப்போதும் அவள்...குனியவைத்த தன் தலையைள நிமிர்த்தவே இல்லை.

கெட்டிமேளம் கொட்டப்பட்டு மணமகன் தடிாலியை கட்டி மூன்று முடிச்சும் போட்டபோதுகூட அவள்ட தன் குனிந்த கோலத்தை மாற்றவில்லை. மணமகன் முகத்தை நிமிர்ந்து ஒருதரம் கூட பார்க்கவும் இல்லை!

தற்செயலாள் திருமணத்தின் அடுத்த சடங்கிற்காக அவள் நிமிர நேர்ந்தபோது... மாப்பிள்ளையின் முகத்தைப் பார்த்டதபோது அவளுக்கு அப்படியே தூக்கி வாரிப்போட்டது.

அங்கு மணமகனாய் மாப்பிள்ளை கோலத்தில் சத்யேந்திரன்!





# 22



வாணியால் நம்ப முடியவில்லை!

பக்கத்தில் மணக் கோலத்தில் மாப்பிள்ளையாய் சத்யேந்திரன்!

அப்படியானால்.... அவன்தான் அவள் பக்கத்தில் அமர்ந்து... மந்திரங்க்ள முழங்க... தொட்டுத்தாலி கட்டியிருக்கிறானா? அதைக் கூட உணராமலா அவள் இருந்திருக்கிறாள்?

கடவுளே... இது நிஜம்தானா?

நம்பமுடிாத அந்த இன்பமான இனிமை அதிர்ச்சியில் திகைத்து உறைந்தவளுக்கு ஒருகணம் பேச்சேவரவில்லை.

நீங்கள்.... நீங்கள்.... நீங்கள்.... எப்படி? திக்கித் திணறி கேட்டவளின் கைகளை அழுத்திச் சிரித்தவன், அப்பப்பா... தலையை என்னமாய் குனிய வைத்திருந்தாய்? நானும் எங்கே நிமிர்ந்து ஒரு முறையாவது பார்க்க மாட்டாயா.... என்று பார்த்தால்.... லாடம் அடித்து தட்டி வைத்திருந்தது போல் அல்லவா இருந்தாய்..?

அவன் கேலி செய்தும் அவளுக்கு சிரிப்பு வரவில்லை. நடப்பது எதுவும் புரியவில்லை.

என்னாயிற்று...? இங்கு... என்னதான் நடக்கிறது...? கொஞ்சம் விளக்குகங்கள்... என்றாள் கொஞ்சம் பரபரப்போடு.

சத்யேந்திரன் அவளைப் பார்த்து மேலும் சிரித்தவன், ஒன்றும் பயப்படத் தேவையில்லை. நமது கல்யாணம் தான் முடிந்து விட்டதே... இன்னும் ஏன் பயப்படுகிறாய்? என்றான்.

உங்கள அம்மா... அவர்கள் அவர்கள் ஒன்றும் சொல்லவில்லையா...?

பதட்டமானவளின் கைகளை அழுத்தி ஆசுவாசப்படுத்தினான்.

அவர்களின் ஆசியோடுதான் நடந்திருக்கிறது. இதோ... அவர்களே... உன்னைத் தேடி வருகிறார்கள்... பார்... என சத்யேந்திரன் கை காட்ட அவன் காட்டிய திசையில் வேகவேகமாய் பதைக்கும் பாசமான முகத்துடன் பூரணி அம்மாள்.

ஓடி வந்தவள் அப்படியே வாணியின் கைகளை நெஞ்சோடு பிடித்துக் கொண்டு அரற்ற ஆரம்பித்து விட்டாள்.

என்னை மன்னித்து விடு வாணி. உண்மையான உங்களது காதலைப் புரிந்து கொள்ளாமல் பெரிய தவறு பண்ண இருந்தேன். நல்ல வேளையாய் கடைசி நேரத்தில்தான் எனக்குப் புத்தி வந்தது. உன்னையும் எவ்வளவோ துன்புறுத்தி கஷ்டப்படுத்திவிட்டேன்... எல்லாவற்றுக்குமாக இந்த வயதான தாயை பெரிதான மனது கொண்டு மன்னித்து விடு. மன்னிப்பாயா வாணி? என புரணி அம்மாள் கண்கலங்கிய போது அப்படியே அவர்களை இறுக கட்டிக் கொண்டாள்.

எங்களை... ஆசீர்வதியுங்கள்... அம்மா... என இருவரும் சாஷ்டாங்கமாய் விழுந்து ஆசிர்வாதம் வாங்கினர்.

வாணிக்கு ஆனந்தம்தான்! மனதில் தாங்க முடியாத குதூகலம்தான்! ஆனாலும் அவளால் சில விஷயங்களை நம்ம முடியவில்லை. எப்படித்தான் இந்த மாற்றம் நிகழ்ந்தது? என அதிசயிக்கத்தான் செய்தாள்.

அதே வியப்புடன் அடிக்கடி சத்யேந்திரனைப் பார்த்த போது அவள் நினைப்பை நன்கு புரிந்து கொண்டவனாய்... நிகழ்ச்சிகள் எல்லாம் முடியட்டும். உனக்கு விளக்கமாய் சொல்கிறேன்... போதுமா? என்றான் கிசுகிசுப்புக் குரலில்.

ஒருவழியாய் கல்யாணச் சடங்குகள், சம்பிரதாயங்கள் எல்லாம் முடிந்து மாலை தனியறையில் சத்யேந்திரனுடன் இருந்தபோது பிலுபிலுவென அவனைப் பிடித்துக் கொண்டாள்.

ஐயோ! நடப்பதையெல்லாம் நம்ப முடியவில்லை எல்லாவற்றையும் சொல்லுங்கள்... என பரபத்தவளை அப்படியே நெஞ்சோடு இழுத்துப்



போட்டுக் கொண்டு உதடுகளைன அவள் கன்னங்களில் ஒற்றினான்.

முதலில் நடப்பது நிஜம் என புரிய வைக்க இது... என்றபடி முத்தமிட்டு விடுவித்தவன், இப்போது கேள்... உனக்குப் பதில் சொல்கிறேன்... என்றான்.

வாணி ஒவ்வொன்றாய் ஆரம்பித்தாள். முதலில் அந்த மாப்பிள்ளை... எனக்காக உங்கள் தாயார் பார்த்து ஏற்பாடு செய்திருந்த மாப்பிள்ளை மோகன் அவர் என்ன ஆனார்? அதைச் சொல்லுங்கள்...

விழிகள் விரியக் கேட்டவளின் சிறு இடையை வேகமாய் வளைத்துக் கொண்டவன், ஓ... அதுவா...? அந்த மாப்பிள்ளை மோகன் வேறு யாருமல்ல என்னுடைய பால்ய நண்பன்தான் எனக்காக, மாப்பிள்ளை வேஷம் போட்டிருந்தான். இது என் தாயாருக்குத் தெரியாது. அதனாலே எனக்குத் தெரியாமல் ஏற்பாடு பண்ணுவதாக நினைத்து அவனுக்கு உன்னை மணமுடிக்க ஏற்பாடும் செய்தார்கள். நான் நண்பன் மோகனிடம் தொடர்ந்து அப்படியே மாப்பிள்ளையாய் நடிக்குமாறு கூறிவிட்டு.... எனது தாயாரின் மனதை மாற்ற முயற்சித்தேன். நான் உண்மையில் உன்னைத் தீவிரமாய் விரும்புவதை அவர்களுக்கு புரிய வைத்தேன்... என்றான்.

என்ன... என்னைத் தீவிரமாய்.. விரும்பினீர்களா..? என அவ்ள் இழுத்துக் கேட்க... அவள் மூக்கைக் கிள்ளினான்அவன்.

அதில் சந்தேகம் வேறு இருக்கிறதா உனக்கு? என்றான்.

என் சந்தேகம் அதுவல்ல. உங்க்ள தாயார் எப்படி மனம் மாறினார்கள்? சம்மதித்தார்கள்?

அவள் கேட்டதும் அவனது அசாத்திய தோள்களை குலுக்கி அலுத்தவன்,அதுதான் ரொம்பவும் சிரமமான விஷயமாய்ப் பட்டது. ஆனால் அதிலும் விடாமல் பிடிவாதமாய் இருந்து அம்மாவின் மனதை மாற்றிவிட்டேன்..!

அதுதான் எப்படி..... ? என்றாள் அவள் ஆவலாய்.

கேட்டவளை தனது மடியில் அமர்த்தி இறுக்கிப் பிடித்தவன். முதலில் இப்படி வாகாக உட்கார்ந்து கொள். சொல்கிறேன்... என்றவன். கண்மணி, என் தாயாருக்கு மஞ்சரியை நான் கட்டினால் சொந்தங்கள் கூடி வரும் என்கிற விஷயம்தான் பெரிதாய் பட்டு உறுத்திக்கொண்டிருந்தது அதை மாற்ற மஞ்சரியின் குடும்பத்தாரின் பேராசையை அவர்களுக்கு புரிய வைக்க ஒரு திட்டமும் போட்டேன். அதன்படி மஞ்சரி குடும்பத்தாருக்கு ஒரு நண்பன் மூலம் நான் தொழில் பணத்தை எல்லாம் இழந்து ஓட்டாண்டியாகி விட்டதைப் போல் செய்தியைப் பரப்பி நம்பச் செய்தேன். பணத்தாசை பிடித்த அவர்களும் அதை நம்பி மஞ்சரியை எனக்கு பெண் கொடுக்க மறுத்து தங்களது சுயரூபத்தை என் தாயாருக்கு காட்டி விட்டார்கள். அதைக் கேட்டு இடிந்து போயிருந்த என் தாயாரிடம் உண்மையை விளக்கி எனது காதலை தைரியமாய் கூறினேன்....

அட்.... அப்போதுதான் தைரியம் வந்ததாக்கும்.? என அவள் கேலி செய்ய, அவனும் விடாமல்... என்னை சொல்கிறாயே.... உன் தைரியம் எங்கே போயிற்று? என்றான்.

அவள் வியப்பாளய் புருவம் உயர்த்தியவள், என் தைரியமா...என்ன சொல்கிறீர்கள்? என்றாள்.

புரியவில்லையா உனக்கு?

புரியவில்லை...

அவள் கைகளையும் சேர்த்து விரிக்க... அப்படிடயே அந்த கைகளை சிறையிட்டவன் அவள் காதுப் பக்கம் குனிந்து அந்த வார்த்தைகளை உச்சரித்தான்.

என்... அழகான... இனிய... முட்டாளே... சிரித்தபடி அவன் சொல்ல... அவள் படபடவென காதுமடல்க்ள அதிர பலமாய் தலையாட்டினாள்.

புரிகிறது... புரிகிறது... என்றாள்.

என்ன புரிகிறது?



அந்த அழகான முட்டாள் நான்தானே?

ஹப்பப்பா...! இப்பாவது தெரிந்து கொண்டாயே...! இதை உனக்கு புரிய வைக்க எவ்வளவு பாடு படவேண்டியிருந்தது....

அவன் பெருமூச்சு விட்டு போலியாய் அலுக்க செல்லமாய் அவன் தலைக்கேசத்தை கலைத்து ரகளை செய்தாள் அவள்.

நீங்கள், அழகான... என்றதோடு மட்டும் சொல்லி நிறுத்தியிருந்தால்... கண்டு பிடித்திருப்பேன். கூடவே உங்க்ள பெயரை அதோடு சேர்த்துக் கொண்டது... என்னை குழப்பிவிட்டது.... என்றாள் பொங்கும் சிரிப்பை அடக்கியவாறு.

அவள் சொல்வதின் அர்த்தம் உணர்ந்து.

என்ன... நான் முட்டாளா? என போலியாய் சினம் காட்டியவன். உன் மேல் நான் கொண்டிருந்த காதல் பற்றிச் சொல்லட்டுமா? என்றான்.

அவள் அதில் நாணி குங்குமமாய் சிவந்த முகத்தை நிமிர்த்தி, சொல்லுங்கள்... என்றாள் வெட்கத்தோடு.

அந்த அவளது வெட்கப் புன்னகையை அழகு பார்த்து ரஸித்தவன், அது பெரிய கதைதான் வாணி. உன்னை முதல் முறையாய் கண்டதுமே... இதயம் என்னையறியாமல் பரபரத்து விட்டது. நான் தேடும் பெண் நீ தான்...! என முடிவே செய்து விட்டேன். அதற்கு வாக்காய் நீயும் என்னுடைய செகரட்டரியாய் வந்து விட உடனே எனது காதலுக்கு ஜிவ்வென இறக்கையும் முளைத்து விட்டது... ஆனால்...

ஐயோ... நிறுத்தாமல் சொல்லுங்கள்... என்றாள் இமைகளை அடித்து படபடப்பு காட்டி.

அந்த மைவிழிகளின் அழகை ஒரு நிமிடம் கிறக்கமாய் பார்த்தவன், வாணி, என் காதலை உடனடியாய் அம்மாவிடம் தான் சொல்ல முடிவெடுத்தேன். ஆனால் அம்மாவோ மஞ்சரி பற்றிய கனவிலே பிடிவாதமாய்

இருந்தார்கள். அதனாலே அவர்கள் மனதை மாற்ற ஒவ்வொரு வழியாய் தேடிக் கொண்டிருந்தேன். முதலில் நான் உன்னை விரும்புவதை அவர்களுக்கு சூசகமாய் உணர்த்த உன்னை வீட்டுக்கு அழைத்துச் சென்றேன்... அவர்கள் முன்னால் உன் கரங்களோடு கோர்த்து நடமாடி காதலை அவர்களுக்கு புரிய வைத்தேன்...

நல்ல சிம்பாலிக் டச்தான்..! அவள் ரஸித்தபடி முத்துப்பற்கள்தெரிய இனிமையாய் சிரித்தாள். அவனோ ரொம்பவும் சிரிக்காதே... என செல்லமாய் அதட்டி அவளை அப்படியே தோளில் சாய்த்து அவள் நீள கூந்தலை வருடியபடி, உனக்கு என் காதலை புரிய வைக்கவும் ஒரு சிம்பாலிக் டச் செய்தேனே... என்ன ஞாபகமிடிருக்கிறதா? புரிகிறதா? என்றான்.

எனக்கா.... எப்படி...?என்றாள் அவள் கண்கள் விரியும் ஆச்சரியத்துடன்.

அட... இதெல்லாம் மறக்கக் கூடியதா...? மறந்து போயிற்றாயே...? என மறுபடியும் ஒரு செல்ல அதட்டு அதட்டி, மூச்சு முட்டுமளவுக்கு இறுக்கமாய் ஒரு அணைப்பு செய்துவிட்டு விடுவித்தான். இப்போது புரிந்திருக்குமே? என்றாள்.

அவள் புரிந்து மறுபடியும் நாணிச் சிவந்தாள்.

தொடர்ந்து வாணி நான் அன்று நடத்திய அந்த நெஞ்சார அணைப்பு, நான்ட உன் மீது கொண்டிருக்கும் காதலை உனக்குப் புரிய வைக்கத்தான். அப்படியும்நீ புரியாமல் விழித்ததால்தான், அழகான இனிய முட்டாள் என உன்னை விளித்து உனக்கு புரிய வைக்க முயற்றி எடுத்டதேன்..! என்றவன், ஆமாம்... இதெல்லாம் எப்போது உனக்குப் புரிந்ததா? இல்லை கடைசிவரை அதை நீ உணரவே இல்லையா? என்றான் ஆதங்கமாய்.

இம்முறை அவள் வெட்கத்தை விட்டு நிமிர்ந்து தலையை பலமாய் குலுக்கினாள்.

அதெல்லாம் புரியாமலா? நன்றாகப் புரிந்து எனக்கும் பரவசம்தான்! மனதில் பட்டாம் பூச்சிதான் ஆனால் அந்த பரபரப்புக்கு முன்னாலே நான்...



என்றபடி அவள் தயக்கமாய் நிறுத்ததினாள்.

'என்ன... இன்னும் என்னிடம் தயக்கமா?' என்றபடி அவளது கன்னத்தில் தனது உதடுகளை பதித்தவன், இனி... தயக்கமில்லாமல் சொல்... என்றான்.

அவளது கம்பீரமான ஆளுமையை வியந்து ரஸித்தவள் அப்படியே தனது கரங்களால் மாலை போல் அவன் கழுத்தில் கை கோர்த்தாள். சொல்கிறேன்.. அதற்கு முன்பே... நானும்உங்களை விரும்பி... நேசிக்க ஆரம்பித்து விட்டேன்.. எப்போது தெரியுமா?

'எப்போது...?'

நீங்கள் ஆதரவற்றோருக்காக... பெரிய அன்பு ஆசிரமம் ஒன்றை தொடங்கி நடத்தி வந்தது. எல்லாமே என்னைக் கவர்ந்து... நான் தேடி வந்த கனவு ராஜகுமாரன் நீங்கள்தான் என என்னையறியாமல் உள்ளுக்குள் முடிவும் செய்தேன்... ஆனால்....

'என்ன.. நான் ராஜகுமாரனா...?'

அவன் வியந்து கேட்க, பின் அதில் சந்தேகமா?இந்த ஆறடி உயரத்தில் ஆஜானுபாகுவாய் சிங்கம் போல் பிடறியை உலுக்கியபடி இருக்கும் உங்கள் கம்பீர தோற்றம்.... புரவி ஒன்றுதான் இல்லை. மற்றபடி.... நீங்கள் ராஜகுமாரர் தான்..! என அவன் வியப்பை அடக்கியவள் தொடர்ந்து... ஆனால் உங்களின் தாயாரின் விருப்பம் தெரிந்தவுடன் என் காதலை அப்படியே மறைக்க முடிவு செய்தேன்.. உங்களுக்காக... காத்திருக்க ஆரம்பித்தேன்.. ஆனால்....

அவள் மறுபடியும் இழுக்க அவன் செல்லமாய் அவளை வாரியெடுத்து தன் மார்பில் அழுத்தியவன், போதும் கண்மணி. இனியும் இழுக்க வேண்டாம்... மீதியை நான் சொல்லட்டுமா? என்றான்.

மைவிழிக் கண்களின் படபடப்பு குறையாமல் அவனை பார்த்தாள். ம்...ம்... சொல்லுங்கள்... பார்ப்போம்... என்றாள்.

'வேறென்ன...? என் தாயார் சொன்ன ஒவ்வொரு விஷயமும் உன் காதலை மழுங்கடித்திருக்கும். நீயும் அதற்காக பயந்து உன் காதலை ஒரு பெரிய கல்லைக் கட்டி கிணற்றில் தூக்கிப் போட்டு விட்டாய். என்... நான் சொல்வது சரியா.... ராஜகுமாரி?'

அவன் மிகச் சரியாக சொல்லிட்ட சந்தோஷத்தில் தன்னை மீறி மலர்ந்தவள் அப்படியே அவனது கன்னங்களில் தனது ரோஜா இதழ்களை ஏற்றினாள்... வெட்கத்தோடு...

'காதலைச் சொன்னதும் இவ்வளவு தைரியம் வந்து விட்டதா உனக்கு?' என குறும்பாய்ச் சொல்லியபடி அவளை விடாது தன்னோடு இறுக்கியவன் மெல்ல அவள் நெற்றியில் முத்தமிட்டான்.

அந்தக் கிறக்கத்தில் தன் விழிகளை மேலும் மலர்த்தி ஆசையோடு அவனை இறுக்கிக் கொண்டாள் அவனது அன்பு மனைவி வாணி.

(முற்றும்)


**அக்ஷயா ஸ்பெஷல்**

மலர் : 2 இதழ் : 2

வெளியிடுபவர் - ஆசிரியர் :

**எம்.எஸ்.முருகன்**

அக்ஷயா பப்ளிகேஷன்ஸ்

56/2, ஸ்ரீராம்பேட்டை தெரு, சி.ஐ.டி.நகர், நந்தனம், சென்னை-35.

போன். 044-24361734

கதையில் வரும் பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே, கதையை திருத்தவும் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு.

**Akshaya Novel Monthly**

Owner, Publisher & Editor **M.S. Murugan,**

Published at :

New No. 56/2, Sri Rampet Street, C.I.T. Nagar,

Nandanam, Chennai - 600 035.




